# உள்ளுறை

பக்கம்


பதிப்புரை
முன்னுரை

முடியரசம்
1. குறள்நெறிக் கொற்றம்
2. பாட்டுப் பறவை
3. தமிழ்த் தெய்வ வணக்கம்
4. தமிழ் வாழ்த்து
5. தமிழ் வாழ்த்து
6. தமிழ் வாழ்த்து
7. தமிழ் வாழ்த்து
8. தமிழ் வாழ்த்து
9. தமிழ்த்தாய் வணக்கம்
10. நந்தா விளக்கே!
11. தமிழ் வாழ்த்து
12. தமிழ் வாழ்த்து
13. தமிழ் வாழ்த்து
14. தமிழ் வணக்கம்
15. தமிழ் வாழ்த்து
16. ஆட்கொள் செல்வீ!
17. செந்தமிழ்ச் செல்வி
18. காப்புப் பருவம்
19. காவியப் பாவை
20. உயிர்த் தமிழே!
21. மறந்தறியேன்
22. ஏங்குதல் நீதியோ?
23. தமிழ் பாடத் தடையா?
24. நானொரு குழந்தை
25. என்றும் பிறப்பேன்
26. தமிழுக்கு என்னைத் தருவேன்
27. ‘பூங்கொடி’ காப்பியத்திலிருந்து சிலவரிகள்
28. உயிரீயும் புலவன் நான்
29. வாழ்வா? சாவா?
30. பாடிக்கொண்டேயிருப்பேன்
31. கோவிலும் தெய்வமும்
32. தமிழ் – என் தெய்வம்
33. தமிழ் – என் தாய்
34. தமிழ் – என் தந்தை
35. தமிழ் – என் காதலி
36. தமிழ் – என் மனைவி
37. தமிழ் – என் மகன்
38. தமிழ் – என் மகள்
39. நானும் நீயும்
40. வெறி வேண்டும்
41. தமிழ்க்காதலி
42. தமிழே வா!
43. என்னுயிர்க் காதலி
44. பைந்தமிழ்க் காதலி
45. என்றும் நானோர் இளைஞன்
46. நானொரு பாடும் பறவை
47. விடுதலை வேண்டும்
48. நமக்குத் தொழில்
49. திறந்தன கதவுகள்
50. நினைந்து மகிழ்கிறேன்
51. எப்படிப் பொறுப்பேன்?
52. நெஞ்சு பொறுக்குதில்லையே
53. நெஞ்சத் துடிப்பு
54. சின்னந் தவிர்ந்தேன்
55. நாத்திகனா? ஆத்திகனா?
56. எனது நேரம்
57. எனது உலகம்

58. எனது வாழ்க்கை
59. எனது வாழ்வில்
60. குறிக்கோளை நோக்கி
61. நான் பாடும் போது
62. உலகம் சிரித்தது
63. என்னெதிர் நில்லேல்
64. வாளென் செயும்?
65. கருத்திற் கலந்த கழகம்
66. போர்க்கோலம் மாறவில்லை
67. அண்ணா பேசினார்
68. தொடர்ந்து செல்வேன்
69. எனக்கும் ஓர் அதியன்
70. கவியரசென்றார்
71. பிரியா நண்பன்
72. என் குறிக்கோள்
73. யார் தமிழன்?
74. கற்பனை மன்னவன்
75. அவன் கண்ட பலன்
76. வாழுங் கவிஞன்
77. யார் கவிஞன்?
78. பிறவிக் கவிஞன்
79. கண்ணீரை யார் துடைப்பர்?

வீறுகவியரசர் முடியரசனார் புகழ் மாலை (மகுடம்)
வீறுகவியரசர் முடியரசனார் வாழ்க்கைக் குறிப்பு (ப்போர்)
பாரி முடியரசன் பற்றி

# முடியரசம்

[வீறுகவியரசர் முடியரசனார் தன்னைப் பற்றியும், தன் தமிழ்ப்பத்திமை, கொள்கை–கோட்பாடுகள், குணநலன்கள், தன்மான–பெருமித உணர்வு, வாழ்வு நெறி, வாழ்க்கைச் சூழல் பற்றியும் பாடிய கவிதைகள் இப்பொருண்மையில் தொகுக்கப்பட்டுள்ளன]

(இத்தொகுப்பில் இடம் பெற்றுள்ள கவிதைககளின் தலைப்புகளுக்குக் கீழ், அக்கவிதைகள் இடம்பெற்ற நூல்களின் பெயர்கள் அடைப்புக் குறிக்குள் தரப் பெற்றுள்ளன)

## 1. குறள்நெறிக் கொற்றம்
(நூல்:—வள்ளுவர் கோட்டம்)

நல்ல குறிக்கோளை நாட்டிற் பரப்புதற்கு
வல்லார் அமைத்து வளர்க்குங் குறட்கழகத்
தேரை இழுத்துவரும் தீரம் மிகுசெயலர்
நேரில் எனையணுகி நெஞ்சைக் குளிர்வித்துக்
கோனாட்சி வேண்டிக் குறள்நெறிசேர் கொற்றத்தால்
நானாட்சி செய்ய நயந்தென்னை வேண்டிநின்றார்;
ஆண்டறியேன் என்றாலும் யானுற்ற ஆண்டறிவேன்
ஈண்டதனால் ஓலக்கம் ஏற மனங்கொண்டேன்;
பேரால் முடியரசன் பேரிடர்கள் உற்றாலும்
பேரா முடியரசன் பெற்றுவந்தேன் கொற்றத்தை;
நாட்டரசன் நானல்லேன் என்றாலும் நான்குவகைப்
பாட்டரசர் என்னும் பரம்பரையில் வந்தவன்யான்;
வள்ளுவனார் சொல்லிவைத்த வாழ்வுக் குறள்நெறியில்
எள்ளளவுங் கோடா தொழுகிவருங் கொற்றவன்யான்;
பாட்டால் உலகாளும் பாவலர்தம் நெஞ்சத்து
வீட்டில் கொலுவிருக்கும் வெற்றித் திருமகளைப்
பொங்கிவரு மன்பால் புகழ்ந்தேத்தும் என்தலையில்
தங்கமுடி பூண்டு, தனியாட்சி செய்பவன்யான்;
தாங்குங் கவிமுடிதான் சான்றோர் மரபுணர்ந்து
பாங்கோ டணிசேரப் பண்ணி முடித்தமுடி,
ஒட்டார்பின் செல்லா உரமென்னும் வைரத்தைப்
பட்டாங் கறிந்து பதித்தமைத்த நன்முடியாம்;
வான்மழைதான் பொய்க்க வருந்தும் உயிர்கண்டு
நான்மனத்தில் அஞ்சி நலிவதனால், என்னாட்டு
மக்கள் நலங்காக்கும் மாகவலை நாடோறும்
மிக்கு வருவதனால், மிஞ்சிவரும் பஞ்சத்தில்
தள்ளிவிடு மோஎன்ற தாங்காத் துயரத்தால்
வெள்ளிமுடி சூடி வெளிவருவேன் துன்பகற்ற;
என்னாட்டில் மாற்றார்க் கிடமில்லை என்றாக்கித்
தன்னாட்சி பெற்றதெனச் சாற்றுமொரு [1]பூங்கொடிதான்
பட்டொளி வீசிப் பறந்து சிறந்திருக்கக்
கட்டி யமைத்தஒரு காவியத்துக் கோட்டைக்குள்
கற்பனை யாலியற்றிக் காட்டும் அரியணையில்
பொற்புடன் வீற்றிருந்து பூமி தனையாள்வேன்;
கட்டிக் களித்திருக்குங் [2]காவியப் பாவையவள்
பட்டத் தரசியெனப் பக்கத் தமர்ந்திருப்பாள்;
பேராயம் எட்டென்று பேசும் அரசியலில்
சீராய எண்தொகையே பேராயம் என்னாட்டில்;
ஐந்து பெருங்குழுவும் ஆள்பவர்க்கு வேண்டுமென்பர்;
ஐந்துபெருங் காப்பியங்கள் அக்குழுவாய் நின்றிலங்கும்;
யானையொடு தேர்குதிரை காலாள் எனும்படைகள்
மோனையொடு நல்லெதுகை முற்றிவரும் நாற்பாவாம்;
வில்லென்றும் வாளென்றும் வேலென்றும் பல்வகையாச்
சொல்கின்ற போர்க்கருவி சுற்றியுள பாவினங்கள்;
போரில் படையெடுத்துப் போற்றாது வந்தாரை
நேரிற் புறங்கண்டு நெஞ்சம் நிமிர்ந்திருப்பேன்;
வாள்வீரங் காட்டி வருவார் எவரெனினும்
தோள்வீரங் காட்டுந் துணிவுடையேன்; என் புகழைக்
கூறும் பரணி கொளவில்லை என்றாலும்
வீறு பெறவிளங்கும் [3]வீரஞ்சேர் காவியத்தின்
நாயகன் நானென்று நானிலத்து மாந்தரெலாம்
வாய்நிறையப் பாராட்டி வாழ்த்தி மகிழ்வார்கள்;
உள்ளத் தெளிவுடனே ஒட்டிவரும் நல்லவர்பால்

பிள்ளைத் தமிழ்மொழியாற் பேசி மகிழ்ந்திருப்பேன்;
என்கொற்றம் போற்றாமல் எள்ளி வருவாரேல்
பின்பற்றுஞ் செம்மாப்பு பீடுபெற நானிற்பேன்;
தாழ்வுதர எண்ணித் தருக்குடையார் சூழ்ந்துவரின்
வாழ்வு பெரிதன்று, வளையா பதியாவேன்;
கள்ளத் தனத்தாற் கயமை புரிவாரின்
பிள்ளைத் தனத்தைப் பிறழும் மயக்கத்தைப்
போக்கக் கடுகம் புகட்டி, நாலடியில்
காக்குமுயர் நன்னெறியைக் காட்டி, உயர்திணையாய்
நல்வழியில் நாளும் நடந்திடுக என்றுசொலி
அவ்வழியை விட்டேக ஆற்றுப் படுத்திடுவேன்;
வேற்றுமைக்கு வித்திட்டு வீண்குழப்பஞ் செய்வாரேல்
கூற்றுக் கிரையாக்கக் கூராய்தம் ஒன்றுடையேன்;
மெய்யை ஒழித்துவிட்டு மேவுமுயிர் வேறாகச்
செய்யுந் தனிநிலைமை சேர்ந்திலங்கும் ஆயுதமாம்;
வாள்பிடித்து முன்செல்வேன் வால்பிடித்துப் பின்செல்லேன்
கோள்பிடிக்க அஞ்சிடுவேன் கோல்பிடிக்க அஞ்சுகிலேன்;
தாள்பற்றி நின்றறியேன் தக்க கவியெழுதத்
தாள்பற்றி நிற்பதுண்டு; தன்மான நெஞ்சுண்டு;
சுற்றிப் பகைவருமேல் சூழ்ந்ததனைத் தூளாக்க
வெற்றிவேற் கையுடையேன்; வீரமிக்க என்தோளில்
சிந்தா மணிமாலை சேர்த்து மகிழ்விக்க
முந்தி எழில்குலுங்க முன்னிற்பாள் வெற்றிமகள்;
என்றன் தனிப்பாடல் எல்லாங் குடிமக்கள்
என்றுங் குறையின்றி ஏற்றமுற வைத்திருப்பேன்
சாதி மதங்களைநான் சாடி வெறுத்தாலும்
ஓதுமதம் ஏழும் உலவிவரும் என்னாட்டில்;
செப்பம் திரண்டுவரச் செங்கோல் செலுத்துதற்கு
முப்பத் திரண்டாக முன்னோர்சொல் உத்திகளால்
குற்றங்கள் பத்துங் குலவாமல் நீக்கிவிட்டு
மற்றழகு பத்தும் மருவிவர நான்புரப்பேன்;
கூறிவரும் மக்கள் குறைநீக்க நல்வளமை
ஊறிவரச் செங்கோல் உயர்த்திப் பிடித்திருப்பேன்;
முப்பால் முகிலாகி மும்மாரி திங்கள்தொறும்
தப்பாமல் பெய்வதனால் தண்ணீர் நிறைந்திருக்கும்;
நெஞ்சம் எனும்வயலில் நேர்மைக் கலங்கொண்டு,
துஞ்சலிலா நல்லெருது தோளில் நுகம்பூட்டி,
ஆழ உழுதுழுது, அன்பென்னும் நீர்பாய்ச்சிச்
சூழறிவை வித்தாக்கித் தொன்மை உரமிட்டு,
நல்லறமாம் நாற்றின் நடுநடுவே தானாகப்
புல்லி வளர்கின்ற பொய்மைக் களைகட்டு,
நூலினர் வாய்மொழிந்த நுண்ணிய கேள்வினும்
வேலி அமைத்தங்கு வேளைதொறும் ஏகி,
அழுக்கா றவாமுதலாம் ஆவொடுமா பற்றி
இழுக்காமல் தின்னாமல் எப்பொழுதுங் காத்திடலால்
இன்பமுதற் பைங்கூழ்கள் என்னாட்டில் தோற்றுவித்துத்
துன்பமெனும் வன்பசிதான் தோன்றாமல் செய்திடுவேன்;
கொற்றஞ் சிறந்திருக்கக் கூறும் பெரியாரைப்
பற்றித்துணைக் கொள்வேன்; பாருக்குள் மேலாமென்
நாட்டின் முதலமைச்சர் நன்காய்ந்த பேரறிஞர்;
காட்டும் அவர்நெறியிற் காவல் புரிந்திருப்பேன்;
பேரறிஞர் காட்டும் பெருநெறியை நன்மொழியை
ஊறறியப் போற்றி உலகாண் டுயர்ந்திருப்பேன்;
போற்றும் பெரியார் புகன்ற அறிவுரையைத்
தூற்றிப் பழிக்குந் தொழிலைப் புரிந்தறியேன்;
பண்பாட்டின் சின்னமெனப் பாரோர் புகழ்ந்தேத்தும்
தென்னாட்டின் பேரறிஞர் சீர்மை பழித்தறியேன்;
கூறுங் குறள்நெறியிற் கொற்றம் நடத்துதலால்
ஏறும் புகழ்பரவும் என்னாட்டில் ஆற்றல்மிகும்
நல்ல கலைஞருக்கு நாளும் மதிப்பளிப்பேன்;
சொல்லும் புகழ்மாலை சூட்டி வரவேற்பேன்;
போற்றி ஒருநாளும் தூற்றி மறுநாளும்
சாற்றேன்; கலைஞருக்குத் தக்க பரிசளிப்பேன்;
அஞ்சாத நாவலர்க்கும் அண்டிவரும் பாவலர்க்கும்

எஞ்சாச் சிறப்பளிப்பேன் ஏற்றம் பெறவைப்பேன்;
ஒன்றிப் பழகிடுவேன் உள்ளத்தில் எந்நாளும்
நின்று நிலைபெறவே நீள நினைந்திருப்பேன்;
நண்பர் புடைசூழ நாளும் மகிழ்ந்திருப்பேன்;
பண்பிற் சிறந்தஎன் பட்டத் தரசியையும்
விட்டுப் பிரிந்திருப்பேன் வேண்டியஎன் நண்பர்தமை
விட்டுப் பிரிந்தறியேன் வேளைதொறும் அந்நினைவே;
மெய்யுணர்வால் என்னுளத்தில் மேவுமவர் நோதக்க
செய்துவிடின் பேதைமையாற் செய்திருப்பர் என்றமைதி
பெற்றிருப்பேன் மேலும் பெருங்கிழமை கொண்டதனால்
மற்றதனைச் செய்திருப்பர் என்றும் மனங்கொள்வேன்;
எம்மைப் பிரிக்க எவரேனும் முன்வந்து
மும்மைப் பொழுதும் முயன்றாலும் செல்லாது;
யாப்பதுதான் கோட்டை அரணாகச் சூழ்ந்திருக்கும்
காப்பியனார் செய்ததொல் காப்பியமே ஆழ்அகழி;
நண்ணார் புகமுடியா நாற்புறஞ்சூழ் கோட்டைக்கு
முன்னோன் பவணந்தி முன்வாயில் செய்தமைத்தான்;
மாமதியன் கைவல்லான் மாறன் எழுதிவைத்த
நூன்முறையால் செய்தமைத்த நுண்மாண் நெடுங்கதவை
மோதித் தகர்க்கவரும் மும்மதத்து யானைகளும்
பாதிப் பொழுதில் பரிதவித்துப் பின்செல்லும்;
மாற்றார் படையெடுத்து வந்தறியார் என்னாட்டுள்
ஏற்ற தொடைமுடித்தே என்பால் வருவார்;
படைகுடி கூழமைச்சு நட்பரண் ஆறும்
உடையேன் அரசர்க்குள் ஓங்கி உயர்ந்திருப்பேன்;
முப்போகம் வேண்டி முனைந்து செயல்புரிவார்
எப்போகம் வேண்டிடினும் தப்பேதும் செய்தறியார்
ஓர்பரத்தைத் தேடி உளமெல்லாஞ் சோர்ந்தாலும்
சேர்பரத்தை நாடிச் செலவறியார் என்மாந்தர்;
நானாட்சி செய்ந்நாட்டில் நாளும் புதியவரி
தானாட்சி செய்யும் தடுப்பார் எவருமிலர்;
மக்கள் வரவேற்று மன்னன் எனைநோக்கி
மிக்க மகிழ்ச்சியினால் மீக்கூர ஏத்தெடுப்பர்;
அன்பால் வருவார்க் கடிகொடுப்பேன் அப்பொழுதும்
என்பால் ஒருசிறிதும் வன்புமனங் கொள்ளார்;
தலைப்படுவார் தம்மைத் தளையிடுவேன் இட்டால்
தளைப்படுவர் அன்றித் தலைநிமிர்ந்து நோக்கார்;
கொடுங்கோலன் என்றுங் குறைசொல்லார் செங்கோல்
தொடுங்கையன் என்றே தொழுதேத்தி நின்றிருப்பர்;
பின்னை அவர்மனத்தைப் பேணிமிகு சீரெல்லாம்
அன்னை மனம்போல அள்ளி வழங்கிடுவேன்;
இவ்வண்ணம் ஆட்சிசெயும் என்பால் அணுகிவந்து
மெய்வண்ணம் அன்புமனம் மேவுஞ் செயலாளர்
கோலோச்ச என்கையிற் கொற்றங் கொடுத்துவிட்டார்
தாலோச்சும் பாட்டில் தனியாட்சி செய்யும்
உருப்பளிங்கு போல்வாளென் உள்ளத்தி னுள்ளே
இருப்பளிங்கு வாரா திடரென்று நம்புவதால்
ஆட்சி முறையால் அரங்கைத் தொடங்குகின்றேன்
மாட்சிமைசேர் மன்றை மதித்து.

---

**பாடற் குறிப்பு:–** காரைக்குடிக் குறள் விழாக் கவியரங்கில் பாடியது–2.3.1975

**அருஞ்சொற் பொருள்:–**

1. பூங்கொடி – கவிஞர் இயற்றிய காப்பிய நூல்.
2. காவியப்பாவை – கவிஞர் இயற்றிய கவிதைத் தொகுப்பு நூல்.
3. வீரகாவியம் – கவிஞர் இயற்றிய காப்பிய நூல்.

## 2. பாட்டுப் பறவை

**(நூல்:–தமிழ் முழக்கம்)**

கலிவெண்பா

முன்னைப் புலவரெலாம் முன்னின்று பாடல்சொல
அன்னைத் திருநாட்டை ஆண்டார் தமிழ்வேந்தர்;
பார்தாங்கும் மூவேந்தர் பண்டை முடியரசர்
போர்தாங்குங் காரணத்தாற் பேரறிவுச் சான்றோர்கள்
பாடுங் கவியரங்கிற் பாட்டுத் தலைவனெனக்
கூடும் படிவைத்தார் கொல்லோ அறியகிலேன்;
பாடி மகிழ்வித்த பாட்டுப் பறவைகளைப்
பாடி மகிழ்விக்கப் பன்னிருவர் வந்துள்ளார்;
பாட்டரங்கில் என்னையுமோர் பங்குகொளச் செய்திடுமா
நாட்டவர்க்கென் நன்றி நவில்கின்றேன் கைகுவித்தே;
காலத்தை வென்றவளே, கற்பனைக்கும் எட்டாமல்
ஞாலத்தில் நின்றொளிரும் நந்தா மணிவிளக்கே,
நெஞ்சத் திருக்கோவில் நின்றிருந் தெந்நாளும்
அஞ்சலெனச் சொல்லி அரவணைக்குந் தெய்வதமே,
நெஞ்சை அகலாக்கி நீங்காத அன்பென்னும்
பஞ்சைத் திரியாக்கிப் பற்றும் உணர்வை
எரியாக்கி ஏற்றும் எழில்விளக்கே, முன்னைப்
பெரியார்க்குந் தோன்றாப் பெருமை படைத்தவளே,
சங்கத்தார் நெஞ்சமெனுந் தண்பொழிலிற் கூடிமனம்
பொங்கத்தான் ஆடிவரும் புள்ளி எழில்மயிலே,
பாவாணர் நாவிற் பழகிப் பழகிநின்று
கூவாமற் கூவிக் குளிர்விக்கும் பூங்குயிலே,
அப்பாலும் இப்பாலும் ஆடித் திரியாமல்
தப்பேதுஞ் செய்யாமல் தக்க நெறிநடக்க
எப்போதும் நன்றுரைத் தெம்மைப் புரப்பதற்கு
முப்பாலைத் தந்து முறைப்படுத்தும் நற்றாயே,
மோதும் பகைதவிர்க்க மொய்ம்புடனே சென்றங்குத்
தூதுசொலி மீண்ட துணிவுடைய பாட்டரசி
அவ்வைப் பெருமாட்டி ஆண்டாண்டு வாழ்ந்திடவே
செய்வித்த பேராற்றல் சேரும் செழுங்கனியே,
கற்புக் கடம்பூண்ட கண்ணகியாம் பெண்மகளைப்
பொற்புடைய தெய்வமெனப் போற்றி வணங்குதற்குக்
கற்கோவில் அன்றெடுத்த நற்கோவின் பின்வந்த
சொற்கோவின் காப்பியத்துள் தோன்றிவரும் யாழிசையே,
சாலறிவன் வாணிகத்தான் சாத்தன்மணி மேகலையாம்
நூலதன்பால் இட்டுவைத்த நுண்புலமை வைப்புமுதல்
வற்றாது மேலும் வளஞ்சுரந்து கூடிவர
அற்றைநாள் கண்ட அமுத சுரபியே,
தேவன் திருத்தக்கன் செம்மையுறச் செய்தளித்த
பாவல்ல சிந்தா மணியிற் படரொளியே,
வன்பில் திணிக்காமல் வந்த வடமொழியைத்
தென்பாகக் கற்றுணர்ந்து தேர்ந்த ஒருகம்பன்
நாவிரித்த பாட்டில் நடம்பயின்று வந்தெங்கள்
காவிரித்தாய் வெள்ளம்போற் காணுங் கவிநலமே,
பூவேந்திப் பொங்கிப் பொழிகின்ற தேனெடுத்து
நாவேந்தத் தந்தசுவை நன்றன் றெனவுரைக்கப்
பாவேந்துஞ் சொற்சுவையாப் பாடியவெண் பாவேந்தன்
பூவேந்தத் தந்த புகழேந்தி வந்தவளே,
சீர்கெட்டுப் பாடித் திருட்டுக் கவிபாடிப்
பேர்கெட்டுப் போனாலும் பேர்கவிஞன் என்றுரைத்துப்
பாட்டுத் தளையறுத்துப் பாடிவரின் கூத்தனதைக்
கேட்டுத் தலையறுத்தான் என்று கிளந்திடுவர்;
பாட்டுத் திறமறியாப் பாவலரைச் சீறியெழுந்
தோட்டுந் திறலுடையான் ஒட்டக்கூத் தன்பாவால்
வெற்றுக் கவியென்று வெட்டியும் பாடிடுவான்
உற்ற உயர்கவியென் றொட்டியும் பாடிடுவான்
வெட்டியும் ஒட்டியும் வேண்டும் படியுரைத்த
ஒட்டக்கூத் தன்பாட்டில் ஒட்டிவருங் காரிகையே,
பண்டைநாள் தொட்டுப் பகையாக வந்தவற்றைக்
கண்டு கலங்காமற் கண்டாய் களம்பலவும்
சென்றகள மெல்லாம் செயங்கொண்டாய் ஆதலினால்
இன்றும் பரணிபல ஏற்றுவரும் போர்முரசே,
தென்மலையில் தோன்றித் திரிகூட ராசன்றன்
சொன்மிடையும் பாட்டொலியிற் சொக்குகுற வஞ்சியே,

‘எல்லா மதங்களுமுண் டென்றாலும் ஓர்பகையும்
அல்லா மதமொன்றே ஆக்கிடுக மானிடமே,
கூறாய்ப் பிரியல்’எனக் கூறியிங்கு யாவரையும்
சீரா நலங்கொண்டு சேர்த்தணைக்குஞ் செந்தமிழே,
‘சாதி சமயமென்று சண்டையிட்டு மாயாதீர்
சோதி வடிவொன்றே தூய இறை’என்று
வள்ளலருட் பாவில் வடித்தெடுத்த தேன்சுவையே,
உள்ளம் உருக்கி உணர்விக்குந் தெள்ளமுதே,
என்று புகழ்பாடி என்னம்மை தாள்பணிந்தேன்
நின்று முகமலர்ந்தாள் நீள்விழியில் நீர்துளித்தாள்;
‘பாடு மகனேநீ பாடடா என்புகழை,
நீடுதுயில் நீங்கி நிமிர்ந்தெழுந்து பாடடா,
கேடு தொலைந்ததெனக் கீழ்வான் சிவந்ததென
நாடு சிறந்ததென நாளும்நீ பாடடா,
வானிற் பறந்துவந்து வட்டமிட்டுப் பாருலகை
மேனின்று பாரடா மேன்மைஎலாம் பாடடா,
சிம்புட் பறவைஎனச் செப்பினான் உன்முன்னோன்
தெம்புளத்தே கொண்டு சிறகை விரித்தெழுவாய்,
வாபறந்து வானில் வலமாச் சுழன்றுதிரி
நீபறந்து வந்தால் நிலமெல்லாங் கண்டிடுவாய்’
என்றமொழி கேட்டேன்நான் எப்படி வான்பறப்பேன்
என்றயர்ந்தேன்; அஃதுணர்ந்த என்னன்னை மூரலித்துச்
‘செல்வ மகனே சிறகிருந்தும் நீயறியாய்
சொல்வ துடையேன் சொலுமுன்னே மேலெழுவாய்,
உள்ளத்தே வற்றாமல் ஊறிவரும் பேருணர்ச்சி
வெள்ளத்தை ஓர்பால் விரிசிறகாக் கொண்டிடுக,
கற்ற இலக்கணத்திற் கண்ட திறமெல்லாம்
மற்றோர் சிறகா மதித்துணர்ந்து கொண்டெழுக,
கற்பனையாம் வானிற் கடுகிப் பறந்துவிடு,
அற்புடைய பூமிக்கும் அப்பாலே வந்துவிடு,
பாடும் பறவையடா பாடி மகிழ்ந்திடடா,
வாடும் நிலைஎதற்கு வாவா விரைந்’தென்றாள்;
கண்ணை யிமைக்குமுன் கற்பனையில் ஏறிவிட்டேன்
மண்ணை மறந்தேன் மகிழ்ச்சிக்கோர் எல்லையிலை;
விண்ணிற் பறந்தேன் விழையுந் திசைஎல்லாம்
நண்ணித் திரிந்தேன் நற்றாய் உடன்வந்தாள்;
ஆங்கிருந்து பார்த்தேன் அடடாஓ மண்பரப்பில்
தேங்கியுள காட்சியெலாஞ் செப்புந் திறனில்லை;
நெஞ்சங் குளிர்ந்து நெடுவானில் அங்குமிங்கும்
விஞ்சுங் களிப்பால் விளையாடி நான்பறந்தேன்;
பாடிப் பறந்தேன் பசுமை வளமெல்லாம்
கூடிக் கிடக்கின்ற கோலமெலாங் கண்டுணர்ந்தேன்;
காட்சிஎலாங் கண்டு களிகூர நான்பறந்தேன்;
மாட்சிமைசேர் என்னன்னை மற்றுஞ் சிலசொன்னாள்;
‘நாட்டு வளமெல்லாம் நாடிச் சிறகடித்துப்
பாட்டுப் பறவைஎனப் பண்பாடி வந்தனைநீ,
எண்ணி லடங்கா இயற்கை வளங்களெலாம்
மண்ணில் இருந்தும் மனிதன் நிலைமட்டும்
வற்றி வறண்டு வறுமை மிகவுற்றுச்
சுற்றி யலைகின்றான் சோற்றுக் கழுகின்றான்
ஏனென் றறிந்தாயா?’ என்று வினவினள்தாய்;
நானொன் றறியேன் நவிலெனக்கு நீயென்றேன்;
‘கையிருந்தும் காலிருந்தும் காடு கழனியெனச்
செய்யிருந்தும் வேலையது செய்ய மனமின்றிச்
சோம்பித் திரிகின்றான்; சோற்றுக் கவலையினால்
தேம்பித் தவிக்கின்றான்; தீங்கின்றி வாழ
உழைப்பை மதிப்பதில்லை ஓய்ந்திருந்தே இங்குப்
பிழைக்க விழைகின்றான் பேதைமையாற் சாகின்றான்;
மண்ணிற் கிடந்து மடிகின்ற மாந்தனை நீ
நண்ணி உணர்வூட்டு, நாளும் வலிவூட்டு,
கண்ணைத் திறந்துவிடு, காலத்தை ஞாலத்தை
எண்ணித் தொழில்புரிய ஏவிவிடு, மண்ணகத்தே
வாழ்வாங்கு வாழ வழிமுறைகள் சொல்லிவிடு,
தாழ்வாகி நிற்போர் தலைநிமிரச் செய்துவிடு,

பாடும் பறவையெனப் பாடி வருபவனே
கூடும் உனக்கொன்று கூறுகிறேன் நெஞ்சிற்கொள்,
மண்ணை விடுத்தெழுந்து மாந்தன் உடல்தவிர்த்து
வண்ணப் பருந்தேபோல் வானிற் பறந்தாலும்
செத்துக் கிடக்குஞ் சிறப்பில் இழியுணவை
நத்திப் பறந்திறங்கும் நாட்டத்தை விட்டுவிடு,
சொன்னதையே சொல்லுங் கிளிப்பிள்ளை யாகாமல்
உன்னதையே சொல்லி உயரப் பறந்துதிரி,
மாட்டின் முதுகிருந்து மாறாது கொத்திமிக
வாட்டியதைப் புண்படுத்தும் வாடிக்கைக் காகமெனப்
புண்படுத்த ஆசைகொளும் புன்செயலை விட்டுவிடு,
பண்படுத்தப் பாடிப் பழகிப் பறந்துதிரி,
வான வெளியெங்கும் வட்டமிட்டு வட்டமிட்டே
ஆன அமைதிக் கடையாள வெண்புறவாய்
நாளும் பறந்துதிரி, நாட்டில் நலம்பெருகத்
தோளை உயர்த்தித் துணிந்தே பறந்துதிரி,
காலைக் கதிரவனைக் கண்டபினும் தூங்காதே,
சோலைக் குயிலாகிச் சுற்றிப் பறந்துதிரி;
கூவிப் பறந்திடடா கொள்கையைப் பாடிடடா
தாவிக் குதித்திடடா' என்றாள் தமிழன்னை;
நாடிச் சிறகடித்து நாட்டின் நிலையுயரப்
பாடித் திரிந்தேன் பறந்து.

---

**பாடற் குறிப்பு:–** சென்னை உலகத்தமிழ் மாநாட்டுக் கவியரங்கில் பாடியது–6.1.1968.
(திருவள்ளுவர், அவ்வை, இளங்கோ, சாத்தனார், திருத்தக்க தேவர், கம்பர், புகழேந்தி, ஒட்டக்கூத்தர், செயங்கொண்டார், திரிகூடராசப்பக் கவிராயர், உமறுப்புலவர், இராமலிங்க வள்ளலார் இவர்களைப் பற்றிப் பாடிப் பன்னிருவர், முடியரசனார் தலைமையில் கவி அரங்கேறினர்.)

## 3. தமிழ்த் தெய்வ வணக்கம்
**(நூல்:–பூங்கொடி)**

தாயே உயிரே தமிழே நினைவணங்கும்
சேயேன் பெறற்கரிய செல்வமே – நீயே
தலைநின்றாய் இவ்வுலகில் தாள்பணிந்தேன் நீயிங்
கிலையென்றால் இன்பமெனக் கேது. 1

பாவால் தொழுதேத்திப் பாரில் நினையுயர்த்தும்
ஓவாப் பணிசெய்ய உன்னுகின்றேன் – நாவாழும்
மூவா முதலே முழுமைபெறும் செம்பொருளே
சாவா வரமெனக்குத் தா. 2

தென்பால் உகந்தாளும் தெய்வத் திருமகளே
என்பால் அரும்பி எழுமுணர்வை – அன்பால்
தொடுத்தே அணிதிகழச் சூட்டினேன் பாவாய்
அடிக்கே எனையாண் டருள். 3

## 4. தமிழ் வாழ்த்து
**(நூல்:–வீரகாவியம்)**

மலரனைய திருவடியில் சிலம்ப ணிந்து
    மணியொளிரும் மேகலையை இடைக்க ணிந்து
பலர்புகழ்சிந் தாமணியை மார்பிற் பூண்டு
    பார்புரக்கும் திருக்குறளே செங்கோ லாகக்
குலவுபுகழ்த் தூதுமுதல் தொண்ணூற் றாறு
    குறுநூல்கள் பணிந்துநின தேவல் செய்ய
நலமுயர்நற் றொகைநூல்கள் ஆயம் ஆக
    நன்கமைதொல் காப்பியமாம் கட்டில் ஏறி, 1

பாவலர்தம் நெஞ்சமெலாம் ஆட்சி செய்யும்

பைந்தமிழே நின்வாயிற் புறத்தே நிற்கும்
காவலன்யான்; ஆண்டறியேன் எனினும் நின்றன்
காவலன்யான்; எனையாளும் அம்மே உன்றன்
கோவிலுறும் வாயிலன்யான்; பெருமை முற்றும்
குறித்துரைக்கும் வாயிலன்யான்; அதனால் என்றன்
பாவிலுறும் சொல்லிலெலாம் எழுத்தி லெல்லாம்
பாட்டுவெறி யூட்டியருள் அன்னாய் நன்றே 2

## 5. தமிழ் வாழ்த்து
(நூல்:—ஊன்றுகோல்)

ஆழமாப் பயின்றே னல்லேன்
அகலமும் அற்றே யாகும்
யாழநின் னருளா லம்மே
யாப்பென ஒன்று கட்டிச்
சூழும்நின் னடிக்கே சூட்டிச்
சொக்கிநான் வணங்கு கின்றேன்
ஏழையேன் இளகும் நெஞ்சில்
என்றும்நீ இருத்தல் வேண்டும் 1

* * *

உலகெலாம் உய்ய வைக்கும்
உயரிய கொள்கை யாவும்
நிலவிய தொகையும் பாட்டும்
நிகழ்த்திய சங்கம் ஏறி
அலகிலாப் பெருமை பூண்டாள்
அன்னையாம் தமிழ ணங்கின்
மலருலாம் அடிகள் வாழ்த்தி
மகிழ்வுற மனத்துள் வைப்பாம் 2

## 6. தமிழ் வாழ்த்து
(நூல்:—இளம்பெருவழுதி)

ஆடகக் குழைகள் ஆட
அடியினிற் சிலம்பும் ஆடப்
பாடமை வளைகள் ஆடப்
பையமே கலையும் ஆடக்
கூடெழில் மணிகள் ஆடக்
குலவியே எனது நெஞ்சுள்
நாடகம் ஆடும் நங்காய்
நற்றமி ழன்னாய் வாழ்க 1

முதுமைவந் துற்ற போதும்
முழுவலி யற்ற போதும்
கதுவுபல் பிணிகள் பற்றக்
கலங்கியே நின்ற போதும்
எதுதுயர் நேர்ந்த போதும்
எவர்பழி செய்த போதும்
புதுமையோ டிளமை பூண்டு
பொலிவுடன் ஆடு கின்றேன் 2

உற்றுளே கலந்து நீயென்
உயிருடன் உறைத லாலே
கற்றவன் போல யானும்
களிநடம் ஆடு கின்றேன்
குற்றமொன் றுறுமேல் நின்றன்
குறையலால் என்பா லில்லை

சற்றுநீ விழித்து நிற்பின்
சாருமோ குற்ற மிங்கே? 3

## 7. தமிழ் வாழ்த்து

**(நூல்:–பாட்டுப் பறவையின் வாழ்க்கைப் பயணம்)**

வாளால் பிளப்பினும் வாழ்நாள் இழப்பினும் வஞ்சமனக்
கேளார் குழுமிக் கெடுதிகள் சூழினும் பூமியில்வாழ்
நாளெலாம் வாட்டும் நலிவே உறினும் நற்றமிழே
ஆளாதல் திண்ணம் அடியேன் நினது மலரடிக்கே.

## 8. தமிழ் வாழ்த்து

**(நூல்:–பாடுங் குயில்)**

செந்தமிழே என்னுயிரே புலவர் நெஞ்சில்
சேர்ந்தாடும் எழில்மயிலே என்னுட் பொங்கி
உந்திவரும் உணர்வதனால் கூவிக் கூவி
உவகைதரும் பூங்குயிலே மொழிக்கு லத்தில்
முந்திவரும் தெய்வதமே என்னைச் சூழ்ந்து
மொய்த்துவரும் துன்பமெலாம் நீக்கி யின்பம்
தந்துவரும் ஆரணங்கே அன்பே நின்றன்
தாள்வணங்கி நிற்கின்றேன் அருள்வாய் அம்மா.

## 9. தமிழ்த்தாய் வணக்கம்

**(நூல்:–நெஞ்சு பொறுக்கவில்லையே)**

காவுக்குள் மலரை வைத்தாய்
கண்டுக்குள் சுவையை வைத்தாய்
பூவுக்குள் தேனை வைத்தாய்
பூமிக்குள் பொன்னை வைத்தாய்
ஆவுக்குள் பாலை வைத்தாய்
ஆர்வத்தில் ஊறும் என்றன்
பாவுக்குள் அனைத்தும் வைப்பாய்
பாருக்குள் முதன்மைத் தாயே. 1

கல்லுக்குள் தீயை வைத்தாய்
கனலுக்குள் வெம்மை வைத்தாய்
வில்லுக்குள் வீரம் வைத்தாய்
வேலுக்குள் கூர்மை வைத்தாய்
[1]செல்லுக்குள் இடியை வைத்தாய்
சிந்தைக்குள் பொங்கும் பாடற்
சொல்லுக்குள் அனைத்தும் வைப்பாய்
தொன்மைக்குள் தொன்மைத் தாயே. 2

---

**அருஞ்சொற் பொருள்:–** [1] செல் – முகில்.

## 10. நந்தா விளக்கே!

**(நூல்:–மனிதனைத் தேடுகிறேன்)**

நிலைமண்டில ஆசிரியப்பா

செந்தமிழ் மொழியே சீர்சால் விளக்கே!
முந்திய மொழியே முழுமையின் ஒளியே!
கற்றோர் நெஞ்சங் களிக்கும் வகையில்

ஞான ஒளியினை நல்கிடும் விளக்கே!
வறுமையும் இடரும் [1]வட்கார் பகையும்
உறுமிடி புயலென உருத்தெழு நிலையிலும்
என்னுள் நின்றொளி எழிலுற விளங்கிட
நண்ணும் என்னுயிர் நந்தா விளக்கே!
ஆய்தொறும் ஆய்தொறும் அரும்பொருள் நல்கலில்
ஒய்தல் இல்லா உயர்கொடை விளக்கே!
பலபல மொழிகள் பரந்திவண் தோன்றினும்
உலகில் நிகரிலா தோங்குவான் விளக்கே!
நையும் நிலையிலும் நான்களி கொள்ள
உய்யும் வழிதரும் பொய்யா விளக்கே!
காற்றும் மழையும் கடுகிய போதும்
ஏற்றிய உனக்கோர் இடையூ றின்றிப்
போற்றுதல் கடனெனப் பூண்டுளேன் நோன்பு;
தணியா உழைப்புந், தக்கோர் உறவும்,
துணிவுடன் என்னுள் தோன்றுநல் லார்வமும்
முப்புரித் திரியென மொய்ம்புடன் ஏற்றி
எப்பொழு தும்நினை ஏத்துதல் உடையேன்;
உணர்வெனும் நெய்யில் ஊறிய யாப்பில்
புணரணி ஏற்றிப் பொருள்தெரி வகையால்
உலகம் அனைத்துநின் ஒளியினைப் பரப்பக்
குலவும் நினைவே கொண்டுளேன் அதனால்
செய்யும் பணிகள் செவ்விதன் இலங்கிடக்
கைகுவித் தேத்தினேன் காத்தருள் தாயே!

---

**அருஞ்சொற் பொருள்:–** [1] வட்கார் – பகைவர்.

## 11. தமிழ் வாழ்த்து
**(நூல்:–தமிழ் முழக்கம்)**

எழுத்தின் வகையெலாம் இயம்புவாய் போற்றி!
பழுத்த சொற்றிறம் பகர்வாய் போற்றி!
பொருள்கள் பற்பல அருள்வாய் போற்றி!
யாப்பெனும் அருங்கலன் இசைப்பாய் போற்றி!
அணிகள் எழிலுற அணிவாய் போற்றி!
போற்றி ஐந்திறம் புகலும் தாயே!

## 12. தமிழ் வாழ்த்து
**(நூல்:–நெஞ்சிற் பூத்தவை)**

தனிமையில் உழலு கின்றேன்
தளர்ச்சியும் உடலிற் கொண்டேன்
எனினுமுன் நினைவால் நெஞ்சில்
எழுச்சிமீக் கூர்தல் கண்டேன்
கனிவுடன் அம்மா என்றன்
கற்பனைத் தேன்நி றைந்த
தனிமலர் தூவி நின்றன்
தாள்மலர் வாழ்த்து கின்றேன். 1

இடர்பல சூழ்ந்த போதும்
என்னுடல் தளர்ந்த போதும்
மிடியெனைத் தின்ற போதும்
விழியொளி குறைந்த போதும்
கடமையில் தவறேன் அம்மா
கனிந்துனைப் பாடிப் பாடி
இடுபணி புரித லன்றி
இனியெனக் கென்ன வேலை? 2

## 13. தமிழ் வாழ்த்து
(நூல்:—புதியதொரு விதி செய்வோம்)

கற்பவர் நெஞ்சில் எல்லாம்
களிப்பினை ஊட்டும் தாயே!
முற்படும் மொழிகட் கெல்லாம்
மூத்தவள் எனினும் நின்னைப்
பற்றிய இளமை குன்றாப்
பைந்தமிழ் அன்னாய் என்று
சொற்றிடல் தவிர வேறு
பற்றுகள் இல்லேன் அம்மா!

## 14. தமிழ் வணக்கம்
(நூல்:—தாய்மொழி காப்போம்)

முத்தமி ழேஉனை எப்பகை யாகினும்
முற்றிட முன்வருமேல்
எத்தடை மோதினும் அப்படை யாவையும்
எற்றிமு ருக்கிடுவேன்
எத்துயர் நேரினும் அத்தொழில் ஆற்றிட
எப்பொழு தும்தவறேன்
மத்தக யானையைச் செற்றிடும் ஏற்றரி
வல்லமை தந்தருள்வாய். 1

விரித்துவரும் வலையிலெலாம் தப்பி நின்று
வீழாமல் சிரிக்கின்ற தமிழ ணங்கே!
குறித்துவரும் பகையஞ்சிப் புறமிட் டோடக்
கூரறிவுப் படைதந்த எங்கள் தாயே
நெருப்புபுனல் செல்கறையான் வாய்கள் தப்பி
நின்றொளிரும் ஏடுடையாய் அம்மா நின்றன்
சிரித்தமுகங் காண்பதற்கே என்றும் வாழ்வேன்
சிறியன்எனைக் காப்பதுநின் கடமை யாகும். 2

## 15. தமிழ் வாழ்த்து
(நூல்:—மனிதரைக் கண்டுகொண்டேன்)

முழுமதியே! செந்தமிழே! காலங் கண்டும்
மூவாத மலர்ப்பொழிலில் ஆடி வந்த
அழகொழுகும் இளமயிலே! உலக மாந்தர்
அகமனைத்தும் குளிர்விக்கும் தென்றற் காற்றே
பழகுசுவைக் கனிமூன்றும் சுவைத்துப் பார்த்துப்
பாடிவரும் பூங்குயிலே! எனது நெஞ்சில்
அழகுதவழ் தோகைவிரித் தாட வாவா!
அவ்வரங்கில் குரலெடுத்துப் பாட வாவா!

---

**பாடற் குறிப்பு:—** 25.8.1979 ஆம் நாள் பாடியது.

## 16. ஆட்கொள் செல்வீ!
(நூல்:—கவியரங்கில் முடியரசன்)

அகம்மலர்த்தும் செந்தமிழே! [1]உயிரே! மெய்யே!
அகிலத்து மொழிமுதலே! அன்பே! பண்பே!
[2]புகல்கொடுத்துச் சிறியேனை ஆட்கொள் செல்வீ!
பொழுதெல்லாம் களிப்பருளும் தெய்வத் தாயே!

பகைதவிர்த்துத் தமிழ்பாடும் என்றன் நாவால்
பாரறிய தாயுன்றன் புகழு ரைக்க
வகைவகுத்த சொற்பொருளால் அணியால் [3]ஆன்ற
வளமிக்க கவிவெறிஎன் நெஞ்சில் ஏற்று!

---

**அருஞ்சொற் பொருள்:—**
1. உயிரே மெய்யே — உயிரும் மெய்யும் போன்ற தமிழே, உயிரெழுத்தும் மெய்யெழுத்தும் ஆகிய தமிழே, 2. .புகல் — தஞ்சம், 3. ஆன்ற — நிறைந்த,

## 17. செந்தமிழ்ச் செல்வி

**(நூல்:—தாய்மொழிகாப்போம்)**

கேளார் தமிழ்மொழி கேடுறச் சூழ்ந்திடுங்
கீழ்மதியை
வாளால் அரிந்ததன் வேரைக் களைந்துநம்
வண்டமிழைத்
[1]தாளால் வளர்த்தனை; தண்புனல் வார்த்தனை;
நின்குறிக்கோள்
சூளாக் குறித்தனை; தொண்டுசெய் கின்றனை
தூமொழியே 1

செல்வியுன் தாளிற் சிலம்பும் பரலும்
செவிகுளிர
நல்கிடும் அவ்விசை நாள்முழு தும்பெற
நாடுகின்றோம்;
மெல்விரல் நீவி மிழற்றிய யாழொலி
போலஇதழ்
சொல்லிய பாடலிற் சொக்கிநின் றேஉனைச்
சுற்றுதுமே. 2

நடைஎழில் காட்டுவை, நல்லறி வூட்டுவை,
நாண்மலரால்
தொடைஎழில் காட்டுவை, தோகையுன் சாயலில்
தோய்ந்துணரார்
உடைஎழில் ஒன்றே உவந்தன ராகி
உணர்விலராய்க்
கடைவழி ஏகுவர் காரிகை உள்ளெழில்
காண்கிலரே. 3

புகழ்மலை உச்சியில் போற்றிட வாழ்ந்தவர்
பூவுலகில்
இகழ்நிலை எய்தினர் எம்மவர் என்றுளம்
ஏங்குகையில்
தகவுடன் மீண்டுந் தலைநிமிர்ந் தோங்கிடத்
தாளெடுத்தே
அகவிடுந் தோகையென் றாடவந் தாயெங்கள்
ஆரணங்கே. 4

முந்தையர் தந்தநன் னூல்மலர் மொய்த்ததன்
தேனருந்திச்
சந்தனத் தென்மலைச் சாரலின் செந்தமிழ்
தந்தநலம்
சிந்தையுள் தேக்கிநற் செவ்வழிப் பண்தரும்
தும்பியென
வந்திடுஞ் செந்தமிழ்ச் செல்விபல் லாண்டுகள்
வாழியவே. 5

---

**பாடற் குறிப்பு:—** 21.12.1976 ஆம் நாள் பாடியது.

**அருஞ்சொற் பொருள்:—** 1. தாளால் — முயற்சியால்.

## 18. காப்புப் பருவம்
(நூல்:—தாய்மொழி காப்போம்)

**பன்னிருசீர் விருத்தம்**

கலவைகள் விலகிடத் தனிமொழி உலவிடக்
கருதிய முதல்மகனாம்
கலைபல தெரிவுறு மறைமலை யடிகளைக்
கருதிவ ணங்கிடுவாம்
குலமொழி அடிமுதல் தெளிவுறும் படிவளர்
கூர்மதிப் பாவாணர்
குளிர்மிகும் மலரடி வழிதரும் எனமனங்
கொண்டுப ணிந்திடுவாம். 1

உலகினில் முதன்முதல் நிலவிய மொழியெனும்
உரைபெறுந் திருமகளாம்
உயர்தனி மொழியென அயலவர் புகன்றிட
ஒளிதரு செம்மகளாம்
அலைபல எதிரினும் நிலைபெறும் கலைமகள்
அமுதெனும் மொழியினளாம்
அழகிய கழகமொ டுலவிய தமிழ்மகள்
அணிநலம் புரந்திடவே. 2

கற்பார் மனத்துணர்வை நற்பா படைத்துவளர்
கவிவாணர் அடிப்பூவையும்
கனலால் எரிந்துசிறை புகலால் மடிந்துமொழி
கருகாது வளர்த்தோரையும்
விற்போர் தொடுத்ததெனச் சொற்போர் நடத்திஉரம்
விளைவாக உழைப்போரையும்
விதிரா மனத்துணர்விற் புதிதாய்த் தழைத்துவரும்
விழைவோடு தொழுதேத்துவாம் 3

மற்போர் புரிந்துநம திப்பார் புரந்தவரின்
மடிமீது வளர்ந்தமகளை
மருவார் பகைத்தருகில் வருவார் பதைத்துவிழ
மலைபோல நின்றமகளை
முப்பா லருந்திநலம் தப்பா திருந்தவளை
முதலாக வந்தமகளை
முதிரா நலத்திளமை அதிரா தெடுத்துவரும்
மொழியாளைப் புரந்தருளவே. 4

---

**பாடற் குறிப்பு:—** 'தமிழன்னை பிள்ளைத் தமிழ்' என்ற தலைப்பில் 'தமிழரசு' ஏட்டில் வெளிவந்த பாடல்கள்— 2.12.1980.

## 19. காவியப் பாவை
**(நூல்:—காவியப் பாவை)**

எடுப்பு

எங்கள் தமிழ் மொழியே! — உயிரே!
—எங்கள்

தொடுப்பு

இங்குனை நாங்கள் இகழ்ந்தத னாலே
இழிநிலை அடைந்தோம் உரிமையும் இழந்தோம்
—எங்கள்

முடிப்பு

பூமியில் மானிடர் தோன்றிய நாளே

பூத்தனை தாமரைப் பூவினைப் போலே
பாமிகும் காவியப் பாவையே தாயே!
பணிந்தோம் கடைக்கண் பார்த்தருள் வாயே
—எங்கள்

இயலிசை கூத்தென இலங்கிடு வாயே
எமதுயிர் உணர்வுகள் யாவையும் நீயே
மயலெமை நீங்கிட மதியருள் வாயே
மைந்தரைக் காத்தருள் செந்தமிழ்த் தாயே
—எங்கள்

## 20. உயிர்த் தமிழே!

**(நூல்:—காவியப் பாவை)**

முன்னைப் பழம் பொருளே — வேந்தர்
மூவர் உயிர்த் தமிழே!
கன்னற் சுவை யமுதே — என்றன்
கண்ணின் மணி விளக்கே!
என்னைப் பழிப்பவனை — நான்
ஏதும் நினைப்பதில்லை
உன்னைப் பழிப்பவனைப் — பகையா
உள்ளம் நினைக்கு தம்மா! 1

தீங்குனைச் சாரு தென்றல் — என்றன்
சிந்தை கொதிக்கு தம்மா!
பாங்குனை மேவு தென்றல் — நெஞ்சம்
பாய்ந்து மகிழு தம்மா!
ஆங்கிலம் கற்றவரும் — வந்த
அயல்மொழி கற்றவரும்
ஈங்குப் புறக்கணித்தார் — அறிவை
என்று பெறுவாரோ? 2

தாயைப் பழித்துரைத்தால் — நெஞ்சம்
தாங்கிட ஒப்பவில்லை
நாயவன் என்றுமிழ — உணர்வு
நாடிப் பெருகுதம்மா!
காயைக் கவர்ந்திடுவார் — நல்ல
கனிச்சுவை தானுணரார்
மாயச் சுமையுடலை — ஓம்பிட
மானம் விலைபகர்வார் 3

தோள்வலி மிக்கமையால் — எம்மைத்
தூற்றினர் வட வேந்தர்
வாள்வலி யாலவரை — வீழ்த்தி
வாழ்ந்ததும் இந்த இனம்
மாள்வது கண்டபினும் — பேதை
மாந்தரும் துஞ்சுகின்றார்!
ஆள்வதும் எம்மொழியோ? — இங்கே
ஆண்மையும் செத்ததுவோ? 4

## 21. மறந்தறியேன்

(நூல்:—காவியப் பாவை)

எடுப்பு

தாயே உனைநான் மறந்தறியேன் — நின்
தாளலால் வேறெதும் நினைந்தறியேன் — தமிழ்த்
—தாயே

தொடுப்பு

நீயே துணையென்று நெஞ்சினில் கொண்டு
நினைந்திடும் மனைதனை மறந்ததும் உண்டு
—தாயே

முடிப்பு

உன்முகம் மலர்ந்தால் என்முகம் மலர
உளமகிழ்ந் திருந்தேன் உலகினை மறந்தேன்
என்முகஞ் சுருங்கிட நன்மனம் வருந்திட
ஏனெனை விடுத்தாய் இடர்தனைக் கொடுத்தாய்
—தாயே

நொந்தே நின்மகன் நுடங்கிடல் நன்றோ?
நோய்தனை நீக்கிடல் தாய்கடன் அன்றோ?
நந்தா விளக்கே நானென்ன செய்தேன்?
நாளெலாம் இருள்தனில் நலிந்திடச் செய்தாய்
—தாயே

## 22. ஏங்குதல் நீதியோ?
(நூல்:—பாடுங் குயில்)

தாயுன தின்னருள் பாடவைத்தாய் – துன்பந்
தாக்கிட ஏனுளம் வாடவைத்தாய்?
ஆயும் புலமையை நாடவைத்தாய் – அம்மா
அப்புறம் ஏன்பொருள் தேடவைத்தாய்? 1

கைப்பொருள் என்னிடம் தங்கவிட்டால் – நெஞ்சிற்
காயங்கள் யாவையும் மங்கிவிட்டால்
மெய்ப்பொரு ளின்மணம் பொங்கவிட்டே பார்ப்பேன்
மேனியில் பாமலர்த் தொங்கலிட்டே 2

விண்ணுல கொன்றனை நான்படைப்பேன் – அங்கே
விந்தைகள் ஆயிரம் மேலமைப்பேன்
மண்ணுல குய்ந்திடத் தேன்கொடுப்பேன் – இந்த
மைந்தனைத் துன்புற ஏன்விடுத்தாய்? 3

மாமயில் போலொரு மங்கையினாள் – நல்ல
மாலைச் சுடர்நிகர் செங்கையினாள்
காமுறு வேளையில் அங்கவளை – ஏனோ
கட்டுற வைத்தனை சங்கிலியால்? 4

கற்பனை வான்மிசை நான்பறப்பேன் – அங்கே
காதல் மகள் தரும் தேன்சுவைப்பேன்
பொற்புடை யாளவள் தானழைத்தாள் – வானில்
போய்வரு மென்சிற கேனறுத்தாய்? 5

இன்ப மெனுங்கடல் பாய்ந்திருப்பேன் – அங்கே
எத்தனை எத்தனை ஆய்ந்திருப்பேன்
மன்பதை உய்ந்திட ஈந்திருப்பேன் – நீயேன்
வந்தரு ளாமலே ஓய்ந்திருந்தாய்? 6

உன்னை விடுத்தொரு சுற்றமில்லை – நெஞ்சில்
ஒட்டிய வேறொரு பற்றுமில்லை
என்னைப் புரப்பதில் குற்றமில்லை – அம்மா
ஏங்குதல் நீதியோ பெற்றபிள்ளை? 7

## 23. தமிழ் பாடத் தடையா?
(நூல்:—பாடுங் குயில்)

தமிழே உன் புகழ்பாட வாழ்வெடுத்தேன் – ஆசை
தணியாமல் இசைகூட்ட யாழெடுத்தேன்
—தமிழே

இமைமூடும் விழியாலே எதுகாண முடியும்?
எழில்யாழை உறைமூடின் எதுபாட இயலும்?

—தமிழே

நரம்பேழும் நலமாக முறுக்கேற வைத்தேன் — நீ
நரம்போடு விளையாடும் விரல்சோர வைத்தாய்
திறம்பாடி உயிர்வாழுங் குறியோடு நின்றேன் — நீ
திரும்பாமல் முகங்கோடிச் சிலையாக நின்றாய்

—தமிழே

சுமையாகத் துயர்வந்தே எனைமோதல் முறையா?
சுரம்பாடும் நரம்பொன்று பகையாதல் சரியா?
எமையாளுந் தமிழேஉன் புகழ்பாடத் தடையா?
இரங்காமல் இருக்கின்றாய் இதுதான்உன் விடையா?

—தமிழே

---

**பாடற் குறிப்பு:—** 20—11—1976 ஆம் நாள் பாடியது.

## 24. நானொரு குழந்தை

**(நூல்:—பாடுங் குயில்)**

குடும்பம் எனக்கோர் நடைவண்டி — நல்ல
கொள்கை வெறிதான் தொடர்வண்டி
இடும்பை தவிர்த்திடும் முப்பாலே — என்னை
இனிதே வளர்த்திடும் தாய்ப்பாலாம் 1

ஆயும் மொழியே சிறுகோலி — அதனை
அறிவால் தெறிப்பேன் குழிகோலி
பாயும் குழியோ கவியாகும் — ஆடல்
பார்த்து மகிழ்வது புவியாகும் 2

பாமலர் என்றன் மழலைமொழி — பாட்டில்
பாவும் பொருளே குவளைவிழி
மாமழை வானந் தவழும்வழி — அங்கே
மதியம் உருள்பந் தெனதுவழி 3

காவியம் என்றன் மணல்வீடு — பொங்கும்
கற்பனை யதுதான் சிறுசோறு
வாவினி அம்மா மகிழ்வோடு — நெஞ்சின்
வாழை விரிப்பேன் பரிவோடு 4

உலகின் நிலையே தெரியவிலை — அங்கே
உண்மையும் பொய்யும் புரியவிலை
அலகில் விளையாட் டாடிடுவேன் — என்னோ
டாரும் வரவிலை கூடிடவே 5

உள்ளஞ் சுடுசொல் பொறுப்பதிலை — சொன்னால்
உடனே அழுவேன் வெறுப்பதிலை
கள்ளங் கவடந் தரிப்பதிலை — நீயேன்
கனிவாய் மலர்ந்தே சிரிப்பதிலை? 6

அழுக்கா றாசை வெகுளியெனும் — நெஞ்சின்
அழுக்குகள் யாவுங் கழுவினைநீ
இழுக்கா மானம் அருளறிவு — அணிகள்
எத்தனை எத்தனை அருளினைநீ! 7

நின்னருள் மாமழை பொழிந்திடுவாய் — நானும்
நீங்கா ததனுள் நனைந்திடுவேன்
என்னுயிர் நீதான் தமிழம்மா — என்னை
எடுத்தொரு முத்தம் அருளம்மா 8

---

**பாடற் குறிப்பு:—** 8—10—73 ஆம் நாள் பாடியது.

## 25. என்றும் பிறப்பேன்
(நூல்:—பாடுங் குயில்)

அன்று பிறந்தேன் அரைநூற்று மூன்றன்பின்
இன்றும் பிறக்கின்றேன் என்தமிழ்க்கு — நன்றுசெய
என்றும் பிறப்பேன் இளங்குழந்தை போலிருப்பேன்
தொன்றுதமிழ் முப்பால் சுவைத்து 1

காலம் அனைத்துங் கலங்காத நெஞ்சுரமும்
ஞாலம் வணக்குபுகழ் நற்கவியும் — கோலமுறச்
சூழ்ந்திருக்கும் நட்பும் சுடர்க்கொடிநான் பெற்றென்றும்
வாழ்ந்திருக்க ஈவாய் வரம் 2

சொல்லும் மொழிக்குள்ளே சூடேற்றித் தீமையெலாம்
வெல்லுந் திறமளிக்க வேண்டுமம்மா — நல்ல
உலகொன்று காண உளங்கொண்டேன் அன்னாய்
நிலைகொண்டு வந்தென்முன் நில். 3

---

**பாடற் குறிப்பு:—** 54—ஆவது பிறந்தநாளன்று பாடியது — 07.10.1973.

## 26. தமிழுக்கு என்னைத் தருவேன்
(நூல்:—பாடுங்குயில்)

சுற்றிவ ளைத்திடு மெத்துய ரத்தையும்
சுட்டுமு டித்ததை — எறிவேனே
சொத்துந லத்தினை முற்றஇ ழப்பினும்
சொற்றமி ழுக்கெனைத் — தருவேனே 1

தொற்றிய ணைத்தவ ளைப்பெறு மக்களைத்
தொட்டிடர் பற்றினும் — மருள்வேனோ?
சொக்கிட வைத்திடும் எப்பொருள் கொட்டினும்
தொட்டுளம் விற்றிட — வருவேனோ? 2

கற்றம னத்தினிற் குற்றம கற்றிடும்
கட்டழ குத்தமிழ் — மொழிமாதே
கத்துக டற்புவி மெத்தம டத்தனம்
கற்றடி மைப்படத் — தரியேனே 3

பெற்றநி லத்தினர் உற்றஇ டுக்கணைப்
பிய்த்தெறி யத்திறம் — அருள்வாயே
பித்தம னத்தினர் நற்றெளி வுத்திறன்
பெற்றிட நற்கவி — பொழிவேனே. 4

---

**பாடற் குறிப்பு:—** 56—ஆம் பிறந்தநாளன்று பாடியது — 7.10.1975.

## 27. தமிழ்த்தேசியக் காப்பியமும் மொழிப்போர்க் காவியமுமான 'பூங்கொடி' யிலிருந்து சில அடிகள்:—

**ஒருநா இயலேன்!**

......... ....... ...... ......
'வருவோர் எவர்க்கும் வணங்காத் தமிழே!
உலக மொழியுள் உயர்ந்தாய் [1]என்கோ!
அலகிலாக் காலங் கண்டாய் என்கோ!
சங்கம் வளர்த்தாய் சான்றோர் பலரால்
பொங்கும் புகழ்நூல் பூண்டாய் என்கோ!

ஆயிரம் பகைதாம் ஆர்ப்பரித் துறினும்
[2]தூவென இகழ்ந்து தோள்வலி காட்டி
எழிலர சோச்சும் தமிழே என்கோ!
கடல்பொங் கலையில் கறையான் வாயில்
சுடர்[3]எரி நாவில் சுழிபடும் ஆற்றில்
தப்பிப் பிழைத்த தமிழே என்கோ!
உன்னுயர் பெருமை உரைத்திட ஒருநா
தன்னால் இயலேன்' ....... .........

........ ....... ........ .......

### முதன்மைத் தமிழே!

...... ...... ...... ........

'அன்னாய்! என்னுயிர் அன்னாய்! தமிழே!
[4]ஒன்னார் மனமும் உருக்குந் தமிழே!
அகப்பகை புறப்பகை கடந்தாய் தமிழே!
தகப்பன் தாயெனத் தகுவழி காட்டி
மிகப்பல் லறநூல் மொழிந்தாய் தமிழே!
உலகம் வியக்க ஒப்பிலாக் குறளால்
கலகம் தவிர்ப்பாய் கன்னித் தமிழே!
இறக்கும் வரைநின் பணியே யல்லால்
[5]துறக்கமொன் றுண்டெனத் துணியேன் தமிழே!
இடுக்கண் வருங்கால் துடைப்பாய் தமிழே!
மொழிவளம் மிகுந்தாய் முதன்மைத் தமிழே!
பழியிலா நின்னைத் தொழுதக வல்லது
வாழ்த்துதற் கென்வாய் வகையறி யாதே'
...... ...... ...... ....... .....

### முத்தமிழ் முழக்குவென்!

.... .... .... .... ..... ..... .....
'என்தாய்ப் பழிப்போர் இனியிரார் உலகில்,
[6]பொன்றாப் புகழ்நூல் புகுந்ததென் கையில்,
இசையும் கூத்தும் இலங்கிய தமிழோ
வசைபெறக் காண்பது? வையகம் எங்கும்
முழக்குவென் முழக்குவென் முத்தமிழ்ப் பெருமை,
[7]சழக்கர் பகைஎலாம் தவிடெனப் பொடியென
ஆக்குவென், எதிர்ப்பெலாம் நீக்குவென், மாசினைத்
தீக்கிரை யாக்கித் தேனிசை பாடுவென்',
..... ..... .... ..... ..... .....

### சாற்றுவென் கேண்மின்!

........ ....... ........ .......

'சான்றீர் பெரியீர் [8]சாற்றுவென் கேண்மின்!
[9]ஆன்ற பெரும்புகழ்த் தமிழின் அருமை
கேடுறல் நன்றோ? [10]கிளைபோல் வருமொழி
[11]பீடுறல் கண்டும் பேதைமை பூணல்
மாண்பன் றென்றேன், மடமைச் சேற்றில்
வீழ்ந்து மடிதல் வேண்டா என்றேன்,
தாழ்வும் இழிவும் சாதியில் வேண்டா!
குலமும் [12]தேவும் ஒன்றெனக் கொள்க;

நலந்தரும் இவைஎன நவின்றேன், ஈண்டை
ஏற்போர் [13].உளரேல் ஏற்று வாழ்க!
ஏலா ராயின் இவணின் றொழிக!'
........ ........ ........ .........

### மனங்கொள ஏற்பேன்!

........ .......... ........ ........
உடலும் உயிரும் உலகுக் காக்கினென்,
இடரினைக் கண்டு தொடைநடுக் குறுதல்
மடமை அன்றோ? மதியிலார் செயலது,
யான்புரி அலுவலில் ஏன்விலக் குற்றேன்?
மீன்புலி கயலால் மேம்படு தமிழக
விடுதலை குறித்து விளம்பினேன்; தமிழ்மொழி
கெடுதலை இன்றிக் கிளர்ந்தெழப் புகன்றேன்,
இவையே யான்செய் தவறென இயம்பி,

நவைஎனப் பழிஎன நாணார் விலக்கினர்;
........... ...... ........ .........

*** *** ***

....... ....... ...... ......
'சாதல் உறுதி, சதைபடு இவ்வுடல்
கழுகு பருந்துகட் குணவாய்க் காட்டில்
அழுகிக் கிடக்கும், அத்தகு நிலையுடல்
என்னின மக்கள் எறிகல் பட்டுச்
செந்நீர் சிந்திச் செந்தமிழ் காக்க
மாய்தல் பெறின்நான் மனங்கொள ஏற்பேன்;'
.......... ........ ...... ........

### இன்னுயிர் ஈவேன்

.......... ........ ...... ........
'நம்மொழி செம்மொழி நலம்பெறல் வேண்டி
இல்லறம் என்னலம் இன்னன துறந்தேன்;
நல்லறம் தமிழ்ப்பணி [14]நாடொறும் இயற்றுங்
குறிக்கோள் வாழ்வினைக் கொண்டுளேன் அறிவீர்!
இறப்பினும் இப்பணி இயற்றியே இறப்பேன்,
என்மொழிக் குயர்வெனின் இன்னுயிர் ஈவேன்,
பன்மொழிப் பயிற்சி பைந்தமிழ் வளர்ச்சிக்
[15]கொருதுணை யாகுமென் றுன்னிப் பெற்றனென்,
விரிநீர் உலகத்து வெளிநா டனைத்தும்
பரிவுடன் ஏகிப் பண்பும் கலையும்
[16]தெரிதர வுணர்ந்து தென்றமிழ்ப் பண்பெலாம்
[17]புரிதர வுணர்த்திப் புதுமைக் கலைகள்
ஆக்குவென் ஆக்குவென் அப்பெரு முயற்சியால்
[18]தேக்குவென் பெரும்புகழ் தீந்தமிழ் மொழிக்கே,'
....... ......... ......... .........

### தந்தேன் வாழ்வு!

..... ....... ....... ........
'இன்றென் தாய்மொழி இடுக்கண் துடைத்திடும்
நன்றமர் நடாத்தி நானிலம் அறியச்
சென்று புகுந்தேன் சிறையகம்; அதனால்
[19]ஒன்றும் மகிழ்வால் உளங்களிக் கின்றேன்;

நன்று புரிவோர் நலிவுறல் இயல்போ?
தூய்தமிழ் வாழத் தொண்டுகள் புரிந்தேன்,
தாய்மொழி வளரத் தந்தேன் வாழ்வு,
நல்லற மென்ற இல்லறந் துறந்து
சொல்லறம் பூண்டு சுற்றினேன் யாண்டும்;
கல்லெறி பட்டுக் காயம் உற்றேன்,
இடுபழி யேற்றேன் இருஞ்சிறைப் பட்டேன்,
கெடுவழி செல்லாது நடுநிலை பிறழாது
அடுபகை நீக்க அறப்போர் தொடுத்தேன்,
உயிரும் ஈய உறுதி பூண்டுளேன்,
இயலிசை கூத்தெனும் என்தமிழ் உரிமை
எய்துமுன் இறக்க ஏலேன் தாயே!
செய்தஎன் பணியெலாம் சீர்பெறுங் கொல்லோ?
வைதலும் வாழ்த்தலும் வழங்கியோர் தாய்மொழி
தழைத்திடச் சேர்ந்துடன் உழைத்திடு வார்கொலோ?
தனிப்பகை நீங்கி ஒருப்படு வார்கொலோ?
நற்றமிழ் ஈங்குக் [20]கொற்றம் புரியக்
கற்றவர் மற்றவர் கலந்துழைப் பார்கொலோ?
பகுத்துணர் வூட்டிப் பைந்தமிழ் கூட்டி
அகத்துள் ஏற்றிய அணையா விளக்கம்
நின்றொளி வீசி நிமிர்ந்தெழுங் கொல்லோ?
இன்றுள நிலையில் எவரைநான் எண்ணுவேன்?

ஒவ்வொரு தமிழரும் ஒவ்வொரு வகையினர்
ஒவ்வொரு வகையும் ஒவ்வொரு நிலையின,
ஒவ்வொரு நிலையும் உன்னுதல் தன்னலம்;
தன்னலம் தவிர்ந்து தமிழ்நலங் கருதித்
தண்டமிழ்க் குரிமை தந்தனர் என்னும்

ஒளிதெரி யாமுனம் உயர்பிறி தாக
வழிவரு மோவென அழிதுய ருற்றேன்;

அன்னை மொழிக்கே அரியணை வேண்டும்
என்னும் ஆசை என்னைப் பிணைத்தது;
நின்மக ளாசை நிறைவுறச் செய்வது
நின்னை யல்லால் [21]பின்னை எவர்கடன்?
சூழ்நிலை யொன்றும் துணையெனக் கொளாது
வாழ்நா ளெல்லாம் வண்டமிழ் மொழிக்கே
உழைத்துழைத் திருந்தேன் உறுபயன் என்கொல்

மழைத்துளி கண்ட வான்பயிர் போல
முளைத்ததோர் உணர்ச்சி! தழைத்தது தாய்மொழி!
புதியபொற் காலம் பூத்தது! நாட்டில்
முதியரும் இளைஞரும் மூண்டெழுந் தார்த்தனர்!
என்றுமுள தென்றமிழ் என்னும் வாய்மொழி
நின்று நிலைத்தது எனுநிலை வருங்கொலோ?'
.......... .......... ........ .......

---

**அருஞ்சொற் பொருள்:–**

1.என்கோ–என்று சொல்வேனோ?. 2.தூ–இகழ்ச்சிக் குறிப்பு.
3.எரிநா–தீச்சுடர். 4.ஒன்னார்–பகைவர். 5.துறக்கம்–வீடுபேறு. 6.பொன்றா–அழியாத. 7.சழக்கர்–கயவர். 8.சாற்றுவென்–சொல்லுவேன். 9.ஆன்ற–நிறைந்த. 10.கிளை–உறவு. 11.பீடு–பெருமை. 12.தேவு–தெய்வம். 13.உளரேல்–இருப்பாராயின்.
14.நாடொறும்–நாள்தோறும். 15.ஒருதுணை–ஒப்பற்ற துணை. 16.தெரிதர–தெரியுமாறு.
17.புரிதர–புரியுமாறு. 18.தேக்குவென்–நிறைப்பேன்.
19.ஒன்றும்–பொருந்தும். 20.கொற்றம்–அரசு. 21.பின்னை–பின்பு.

## 28. உயிரீயும் புலவன் நான்

**(நூல்:–தாய்மொழிகாப்போம்)**

{'தமிழியம்' என்ற பொருண்மையில் இடம் பெற்றுள்ள இப்பாடலின் சில அடிகள் மட்டும் பொருண்மை கருதி இங்கும் இடம் பெற்றுள்ளன)

......... ......... ........... ............
''எத்துயரம் ஏற்றாலும் தமிழ்மொ ழிக்கே
என்வாழ்வு தாய்மொழியைக் காக்கும் போரில்
செத்தொழிய நேர்ந்தாலும் அந்த நாளே
திருநாளாம்'' ...... ..... ....

*** *** ***

சிறைசெல்லப் புலவர்சிலர் வேண்டும் இன்று;
செந்தமிழின் உயர்வுதனை வேண்டி நின்று
முறைசெய்யப் பதவிதனை இழப்ப தற்கும்
முனைந்துவரும் புலவர்சிலர் வேண்டு மின்று;
குறைசெய்யும் ஆள்வோரின் கொடுமைக் காளாய்க்
குருதியுடன் உயிரீயப் புலவர் வேண்டும்;
நிறைசெய்ய உயிரீயும் புலவர் தம்முள்
நிற்குமுதற் புலவன்நான் ஆக வேண்டும்

மாநிலத்து மொழிகாணாப் புதுமை கண்டு
வகைப்படுத்தி அகம்புறமாப் பொருளைச் சொல்லித்
தேனிகர்த்த சுவைப்பாவால் பத்துப் பாட்டும்
தித்திக்கும் தொகைஎட்டும் பாடி வைத்த
பாநலத்தைப், பொருள்வளத்தை, நுகர்ந்த உள்ளம்
பணியாது; பெருமிதத்தால் நிமிர்ந்து நிற்கும்;
கானகத்துப் புலிப்போத்தாய் வீரங் காட்டும்;
கவிதைக்கு விளைநிலமாய்க் காட்சி நல்கும்

.

## 29. வாழ்வா? சாவா?

**(நூல்:—தாய்மொழிகாப்போம்)**

**{'தமிழியம்' என்ற பொருண்மையில் இடம் பெற்றுள்ள இப்பாடல் பொருண்மை கருதி இங்கும் இடம் பெற்றுள்ளன)**

அறிவுபெறச் சிந்திக்க ஆய்வு செய்ய
அதற்குரிய நூல்கற்க மேன்மை காணக்
குறியுடையேன் பள்ளிக்குட் செல்லுங் காலை
குலவவரும் இந்தியுடன் ஆங்கி லந்தான்
தெரிவுசெயும் மொழியென்பார்க் கடிப ணிந்தால்
தென்னாட்டு மொழியெதற்கு? தமிழைப் பேசித்
திரிகின்ற இனமெதற்கு? மான மின்றித்
தின்றலையும் வாழ்வெதற்கு? சாவே மேலாம். 1

நான்பிறந்த பொன்னாடு, தவழ்ந்து நின்று
நடந்தோடி விளையாடி மகிழ்ந்த நாடு,
தேன்சுமந்த மலர்வருடி மணந்து வந்து
தென்றலெனைக் குளிர்விக்கக் களித்த நாடு,
வான்படர்ந்த புகழ்மிகுக்கும் எனது நாட்டை
வாழ்த்துதற்கு வங்கமொழி வேண்டு மென்றால்
ஏன்பிறந்தேன் தமிழ்நாட்டில்? பிறந்த பின்னும்
இருக்கின்றேன் இருக்கின்றேன் சோற்றுக் காக. 2

தோற்கருவி துளைக்கருவி நரம்பிற் கட்டும்
துணைக்கருவி வெண்கலத்துக் கருவி என்ற
நாற்கருவி முழங்குமிசை யரங்கில் ஏறி
நான்பாடத் தெலுங்குமொழி வேண்டு மென்றால்
வேற்கருவி எடுத்துவிளை யாடுந் தோள்கள்
வீறிழந்து சீரிழந்து தமிழன் என்ற
பேர்க்குரிமை பூண்டின்னும் வாழு கின்றேன்
பிறப்படிமை யானவற்கேன் பட்டுக் குஞ்சம்? 3

வானுயர்ந்த கோபுரங்கள், வளைந்து சுற்றும்
மதிற்சுவர்கள், கருவறைகள், வல்லார் செய்த
தேனினுயர் சுவைப்பொங்கல், கல்லால் செம்பால்
செய்துவைத்த சிலைகள்பொலி கோவி லுக்குள்
நானுழைந்து நெக்குருகி வணங்கி நின்று
நாவசைக்க வடமொழிதான் வேண்டு மென்றால்
ஏனிருந்து வாழ்கின்றேன் தமிழர் நாட்டில்?
இருந்துபழி சுமப்பதிலே யாது கண்டேன்? 4

விழிநலிவு பெறுமானால் முகமெ தற்கு?
விளைபயிர்கள் கருகுமெனில் வயலெ தற்கு?
வழிபுனல்தான் அறுமெனிலோர் ஆறெ தற்கு?
வளர்ச்சியிலாப் பிண்டமெனில் கருவெ தற்கு?
மொழியடிமை யாவதெனில் நானெ தற்கு?
மூச்சில்லா உடலெதற்கு? மொழியைக் காத்துப்
பழிவிலக வாழ்வதுவே வாழ்க்கை; இன்றேல்
பாருக்குச் சுமைகுறையச் சாதல் மேலாம். 5

---

**பாடற் குறிப்பு:—** 8.3.1987 ஆம் நாள் பாடியது.

## 30. பாடிக்கொண்டேயிருப்பேன்

**(நூல்:தாய்மொழிகாப்போம்)**

பாடிக்கொண் டேயிருப்பேன் — என்
பைந்தமிழைச் செந்தமிழை நான்
—பாடிக்

ஓடிக்கொண் டேயிருக்கும் ஊறுஞ்செங் குருதி
ஓடா துறைந்தே ஓய்ந்திடும் நாள்வரை
—பாடிக்

கடும்பிணி கொடுஞ்சிறை கடுகிவந் தாலும்
    கலக்கிடும் வறுமைகள் காய்ந்திடும் போதும்
இடும்பைகள் வந்தெனை எற்றிடு மேனும்
    எதையும் அஞ்சிடேன் என்றுமே துஞ்சிடேன்
—பாடிக்

பதவியும் பட்டமும் பணங்களுங் காட்டிப்
    பகட்டினும் எதற்கும் பணியேன் கைநீட்டி
முதுமொழி என்மொழி முத்தமிழ் மொழியை
    மொய்ம்புறக் காத்திட முனைந்திடும் வழியைப்
—பாடிக்

---

**பாடற் குறிப்பு:—** இக்கவிதையைப் படிக்கக் கேட்டவாறே வீறுகவியரசரின் உயிர் பிரிந்தது.

## 31. கோவிலும் தெய்வமும்

**('ஊன்றுகோல்' காப்பியத்திலிருந்து)**

உள்ளத்துள் உணர்வூட்டிப் பற்றுண் டாக்கி,
    உண்மைபெறும் பத்தியுடன் தொண்டு செய்ய
மெள்ளத்தன் னாளாக்கிப், பாடல் வல்ல
    மேலவர்தம் கூட்டத்துள் ஒருவ னாக்கி,
அள்ளித்தன் அருளெல்லாம் என்மேற் பெய்தாள்
    அழியாத வரமளித்தாள் தமிழ்த்தாய்; அந்தத்
தள்ளைக்கு நானடிமை யான திந்தச்
    சன்மார்க்க சபையென்னுங் கோவி லிற்றான் 1

நலந்தந்த சங்கரரும் ஆட்டு வித்த
    நடேசருமென் தெய்வங்கள்; நாளும் நாளும்
வலம் வந்தே அருள்பெற்ற கோவி லுக்குள்
    மல்லிங்க சாமியொரு சாமி, எற்குக்
குலந்தந்த தமிழ்தந்த முத்து சாமி
    கும்பிட்டு நான்மகிழ்ந்து நத்துஞ் சாமி;
உளம்தந்து பாருலகின் இயல்புங் காட்டி
    உய்வித்த செல்லப்பர் மற்றோர் தெய்வம் 2

## 32. தமிழ் — என் தெய்வம்

**(நூல்:—காவியப் பாவை)**

கோவில் எனது நெஞ்சம் — தனிலே
    கூடி யருள் புரிவாய்
காவியப் பா மாலை — அணிந்தே
    காத்திட வேண்டு மம்மா
நாவின் மிசை யிருப்பாய் — எனக்கு
    நல்ல மனந் தருவாய்
பாவினில் சொல் லிலெல்லாம் — சத்தி
    பாய்ந்து வர வேண்டும் 1

உன்றன் திருப் பெயரைச் — சொல்லி
    ஊரினை ஏய்த் திடுவோர்
நன்றென வா ழுகின்றார் — நின்றன்
    நன்மையை நா டுகிலார்
துன்றிய பண் பினரும் — உன்பால்
    தூயநல் லன் பினரும்
நின்று வருந் திடவே — செய்தல்
    நீதியின் பாற் படுமோ? 2

நெஞ்சில் உனை நினைந்தே — என்றும்
    நேர்மையில் நிற் பவரை
மிஞ்சும் வறு மையினால் — துன்பம்

மேலிடச் செய் துநின்றாய்
வஞ்சனை செய் மனிதர் – அவர்க்கு
வாழ்வுகள் தந் துநின்றாய்
வஞ்சியுன் சோ தனையோ? – எங்கள்
வாழ்வெலாம் வே தனையோ? 3

நித்தம் உனைத் தொழுதே – எங்கும்
நின்புகழ் பா டுமெனைப்
பித்தன் வெறி யனென்றே – உலகம்
பேசுதல் காண் கிலையோ?
முத்தமிழ் தந் தபித்தால் – செல்வம்
முன்னின்று தே டுகிலேன்
இத்தரை மீ தினிலே – வறுமை
எத்தனை துன் பமம்மா! 4

கொல்லும் வறு மையிலும் – செம்மை
குன்றா திலங் கிடவே
வெல்லும் மன நிலையைத் – தாயே
வேண்டுகி றேன் அருள்வாய்
சொல்லுமென் பா டலினால் – உலகம்
சூழ்ந்து வணங் கிடவே
வல்லமை வேண் டுமம்மா – என்றும்நான்
வாழ்ந்திட வேண் டுமம்மா. 5

## 33. தமிழ் – என் தாய்
**(நூல்:–காவியப் பாவை)**

செந்தமிழ் என் பவளாம் – நல்ல
செல்வக் குடி மகளாம்
முந்தை மொழிகளிலே – அவளும்
மூத்தவ ளாய்ப் பிறந்தாள்
முந்திய மூ வரசர் – அவையில்
மொய்ம்புறத் தான் வளர்ந்தாள்
வந்தவர் யா வருக்கும் – செல்வம்
வாரி வழங் கிடுவாள் 1

தென்ற லுடன் பிறந்தாள் – நல்ல
செய்கையொன் றே யறிவாள்
என்று பிறந் தவளோ? – இவள்
எத்தனை ஆண் டினளோ?
இன்றும் இள மையுடன் – அன்னை
ஏற்றம் உறப் பொலிவாள்
ஒன்றிய நான்கு பெண்கள் – பெற்ற
ஒண்டொடி யா மவளே 2

கன்னடத் தான் துளுவன் – மலையன்
கண்டு மொழித் தெலுங்கன்
என்னுமிந் நால் வருக்கும் – அவரை
ஈந்து மணம் முடித்தாள்
பெண்ணெடுத் தே மகிழ்ந்தோர் – என்னைப்
பெற்றவ ளைப் பகைத்தார்
நன்னடைப் போக் கிழந்தார் – அந்த
நால்வரும் நன் றிகொன்றார் 3

ஈன்றெனைக் காத் தவளை – மனமே
எங்ஙனம் நான் புகழ்வேன்
சான்றவர் மெச் சிடவே – முப்பால்
தந்து வளர்த் தனள்தாய்
தோன்றுசங் கப் புலவர் – படைத்த
தொட்டிலில் ஆட் டினவள்
மூன்றர சர் கதைகள் – சொல்லி

மூள்வலி யூட் டினள்தாய் 4

என்றன் வய துநிலை – பருவம்
ஏற்பவை தான் உணர்ந்தே
நன்றறி வுக் கதைகள் – நகை
நாட்டும் பிற கதைகள்
ஒன்றிய வீ ரமுடன் – காதல்
ஊட்டுஞ் சுவைக் கதைகள்
மின்றளிர் மே னியினாள் – சொல்லி
மேன் மை யுறப் பணித்தாள் 5

மேவுக தொண் டுளமே – என்பாள்
மேகலைக் கா தையினால்
பாவுக நீ தியென்பாள் – எங்கள்
பாண்டியன் கா தையினால்
கோவுயர் குட் டுவனால் – வீரங்
கொட்டி முழக் கிடுவாள்
பாவில் நகைச் சுவையாத் – தருவள்
பாண்டவர் காதையினால் 6

வாழ வழி வகுத்த – திரு
வள்ளுவன் ரா மலிங்கம்
ஆழ நெடும் புலமைக் – கம்பன்
அவ்வை யுட னிளங்கோ
சோழரில் பாண் டியரில் – கவி
சொன்னவர் சீத் தலையான்
தோழர்கள் என் றிவர்போல் – பலரைத்
தொல்புகழ்த் தாய் கொடுத்தாள் 7

தன்கடன் ஆற் றிவிட்டாள் – தமிழ்த்
தாயெனைக் காத் தமையால்
தன்கடன் போற்றுதற்கே – கவிஞன்
தந்தனன் வேற் படையே
நன்னடை நல் கினரோ – இந்த
நாட்டினை ஆள் பவரே
என்கடன் ஆற் றிடுவேன் – பகையை
எற்றி முருக் கிடுவேன். 8

## 34. தமிழ் – என் தந்தை

(நூல்:–காவியப் பாவை)

முன்னைத் தமிழ் மொழியே! – உலகில்
மூப்பறி யா முதலே!
என்னை மகன் எனவே – புவியில்
ஏற்றமுடன் அளித்தாய் 1

கற்றுத் தெளி வதற்கே – ஆசான்
கண்டு பயிற் றுவித்தாய்
முற்றும் உணர்ந் தவனாம் – அந்த
முன்னவன் வள் ளுவனாம் 2

முத்தமிழ் வா ணர்கள்சூழ் – அவையில்
முந்தி யிருந் திடவே
அத்தனே என்னை யுமோர் – சான்றோன்
ஆக்கி மகிழ்ந் தனைநீ 3

தூது கலம் பகமாய்ப் – பெருகும்
தோழர்கள் பற் பலராம்
தீது விளைப் பவராய் – அமையின்
செப்பித் திருத் துவைநீ 4

குற்றமொன் றில் லதுவாம் – நல்ல

கோல மனை யளித்தாய்
கற்றவன் கட் டியதே – அதுதொல்
காப்பியம் என் பதுவே 5

வாரி முகந் தெடுத்தே – இன்ப
வாரி திளைப் பதற்கே
நேரிய செல் வங்கள்தாம் – தொகையில்
நேடித் திரட்டி வைத்தாய் 6

ஐவகைக் காப் பியமாம் – செல்வம்
ஆக்கி எனக் களித்தாய்
கைதவக் கள் வரினால் – இரண்டு
காபபியம் கா ணுகில்லேன் 7

பாட்டிசைச் செல் வங்களும் – இழந்தேன்
பட்டயம் மட் டுமுண்டு
நாட்டினில் முன் பிறந்தோர் – அயர்வால்
நானவை காண் கிலனே 8

இத்தனை போய் விடினும் – இன்னும்
எட்டுத் தொகை யுடனே
பத்தெனும் பாட் டுளதாம் – ஒவ்வொன்றும்
பற்பல கோடி யன்றோ! 9

பாட்டுப் புறப் பொருளால் – வீரப்
பாங்கில் எனை வளர்த்தாய்
ஈட்டும் அகப் பொருளால் – காதல்
இல்லறம் கூட் டுவித்தாய் 10

நின்பெயர் காத் திடுவேன் – தமிழே
நீஎனைப் பெற் றதனால்
உன்பெயர் ஓங் குதற்கே – பற்பல
ஓவியம் நான் படைப்பேன் 11

## 35. தமிழ் – என் காதலி
**(நூல்:–காவியப் பாவை)**

பாரி மலை யருகில் – நல்ல
பண்பினர் வா ழிடமாம்
ஊரில் ஒரு பொழிலில் – உனைநான்
உற்றறி நாள் முதலே
மீறிய கா தலினால் – தமிழே
மெய்ம்மறந் தே உழல்வேன்
கூரிய நின் விழியால் – எனைநீ
கொல்வது தான் சரியோ 1

ஆசை மனத் திரையில் – எண்ணம்
அத்தனை யுங் கலந்து
பாச முடன் எழுதி – உருவைப்
பார்த்து மகிழ்ந் திருப்பேன்
பேச மன மிலையேல் – உயிரைப்
பிய்த்தெனைக் கொன் றுவிடு
மோசம் புரி வதென்றால் – என்றன்
மூச்சை நிறுத் திவிடு 2

உன்னைப் பெறு வதற்கே – இங்குநான்
ஓடித் திரி வதெல்லாம்
என்னைப் புறக் கணித்தால் – உயிரை
எப்படி நான் சுமப்பேன்
உன்னெழிற் கா தலன்றோ – என்னை
உன்மத் தனாக் குதடி
கன்னற் சுவை மொழியே – என்னைக்

கட்டி யணைத் திடடி 3

செல்வம் உற வரினும் – வறுமை
சேர்ந்து துயர் தரினும்
பல்வகை இன் னலிலும் – என்மனப்
பாவையே நான் பிரியேன்
நல்வழி காட் டிடடி – உன்றன்
நட்பொன்று போ துமடி
சொல்வது சொல் லிவிட்டேன் – பிறகு
தோழியுன் சித் தமடி 4

நாட்டவர்க் கஞ் சுதியோ? – உலகில்
நம்மைத் தடுப் பவர்யார்?
காட்டுப் புலி யடிநான் – போரில்
காத்திடு வேன் உனையே
வாட்டம் தவிர்ந் திடடி – கொடிய
வாளுக்கும் அஞ் சுகிலேன்
கோட்டை மதி லகத்தோர் – முழக்கும்
கொட்டுக்கும் அஞ் சுகிலேன் 5

காதல் உல கினிலே – அகப் பொருள்
காவின் நடு வினிலே
மேதைகள் ஆக் கியதோர் – மாளிகை
மீதினில் நா மிருப்போம்
மாதுநீ யா ழெடுத்தே – இசை
மாரி பொழிந் திடுவாய்
காதற் களி யினில்நான் – பற்பல
காவியம் பா டிடுவேன். 6

## 36. *தமிழ் – என் மனைவி

(நூல்:–காவியப் பாவை)

வெள்ளி நிலா வினிலே – ஒரு
வெட்ட வெளி தனிலே
அள்ளி அணைத் தசுகம் – அதனால்
ஆவி சிலிர்த் ததடி 1

சிந்தா மணி தவழும் மார்பில்
சேர்ந்து திளைத் தசுகம்
எந்த விதம் உரைப்பேன் – எழுதி
ஏட்டினில் காட் டுவதோ? 2

நற்றினை ஐங் குறுநூ – றகமும்
நல்ல குறுந் தொகையும்
உற்ற கலித் தொகையும் – தமிழே
ஊட்டி மகிழ வைத்தாய் 3

மேவித் தழு வுவதற்கே – உன்மணி
மேகலை பற் றுகையில்
நீவிட் டகன் றுவிடின் – பிரிவு
நெஞ்சைத் துளைக் குமடி 4

வந்த வடக்குத் தெரு – மகள்பால்
வாஞ்சைஎன் றெண் ணினையே
அந்தப் பொது மகளைத் – தொடவும்
ஆசையொன் றில் லையடி 5

வாழ்வு வளம் இழந்தாள் – வடக்கில்
வாடகை வீடு டையாள்
சூழ்வினை ஒன் றுடையாள் – வலையில்
சொக்கிவிட் டேன் எனவோ 6

ஊடிப் புலந் துநின்றாய் – என்றன்
உள்ளம் அறிந் திலையோ?
நாடித் திரி பவனோ – வஞ்சக
நங்கையின் கா தலுக்கே 7

மேலைத் திசை யுடையாள் – ஒருத்தி
மேன்மைக் குண முடையாள்
வாலைக் கும ரியுடன் – நண்பாய்
வாய்மொழி பே சிடுவேன் 8

நெஞ்சிற் கெடு தியில்லை – அவளால்
நேர்வது நன் மையடி
வஞ்சிக் கொடி யிடையே புலவி
வாட்டந் தவிர்ந் திடடி 9

நெஞ்சத் தடந் தனில்நீ – உலவும்
நீள்சிறை அன் னமடி
வஞ்சனை இல் லையடி – நீயே
வாழ்க்கைத் துணை வியடி 10

பேதை மனக் குயிலே – உன்னைப்
பெற்றவள் இல் லையடி
ஏதுக் கடி புலவி – தமிழே
என்னைவிட் டெங் ககல்வாய்? 11

காலில் சிலம் பொலிக்க – வருவாய்
காதல் மது பருகிக்
கோலப் பெரு வெளியில் – கவி வெறி
கொண்டு திரி வமடி 12

சோலை வெளியிடையே – நாம்
சுற்றித் திரி வமடி
மாலை நிலா வரவே – தனியாய்
மாடந் தனை யடைவோம் 13

அங்குநம் கூட்டுறவால் – பிறந்த
அன்புக் குழந் தைகளை
சங்கக் கவிதை என்றே – உலகம்
சாற்றிப் புக ழுமடி 14

---

**பாடற் குறிப்பு:– ***இத்தலைப்பில் உள்ள பாடல்கள் அனைத்தும் இந்திய தேசியப் புத்தகக் குழுவினரால் (ழிணீமீவீஷீஸீணீறீ ஙிஷீஷீளீ ஜிக்ஷீஙுஷ்மீ, மிஸீபீவீணீ) ஆங்கிலத்திலும் இந்தியிலும் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன.)

## 37. தமிழ் – என் மகன்

**(நூல்:–காவியப் பாவை)**

பிள்ளைக் கலிதனைத் தீர்க்கவந்தாய் – அன்புப்
பெட்டக மேஇன்பம் சேர்க்க வந்தாய்
உள்ளக் கவலைகள் ஓட்டவந்தாய் – என்றன்
ஓவிய மேபுகழ்க் காவியமே 1

கொஞ்சுங் கனியிதழ் நீதிறந்தால் – உள்ளம்
கொள்ளைகொள் ளுங்களி கூடுதடா
விஞ்சு நலந்தரு யாழுடனே – குழல்
வேண்டுகி லேன்தமிழ் மாமகனே 2

பைந்தளிர் மேனியைத் தீண்டுகையில் – தமிழ்ப்
பாலக னேநடை காணுகையில்
பைந்தமி ழேஎன நின்பெயரைச் – சொல்லிப்
பாடிப் புகழ்ந்துனைப் பேசுகையில் 3

நின்மொழி என்செவி சேருகையில் – நெஞ்சில்
நேரும் மகிழ்வினை யாதுரைப்பேன்
என்னுயிர் மூச்சென ஆனவனே – எனக்
கேதுக்கடா அந்த மேலுலகம் 4

வீதி களில்விளை யாடுகையில் – என்றன்
வேதனை யாவுமே ஓடிடினும்
தீது புகுந்து விளைந்திடுமோ – என்று
செந்தமி ழேமனம் அஞ்சுகிறேன் 5

கெட்ட மொழியினைப் பேசுவது – மிகக்
கேடு தருஞ்செயல் விட்டுவிடு
சிட்டு நிகர்த்திடும் என்மகனே – வரும்
சின்ன மொழியையும் தள்ளிவிடு 6

சாதி சமயங்கள் என்பவரை – நண்பிற்
சார்ந்து பழகுதல் தீமையடா
ஓதிய சங்கத்தில் உள்ளவரே – நம்மை
ஓம்பி வளர்த்திடும் நல்லவராம் 7

உன்னைச் சிறியவர் ஏசுகையில் – பெற்ற
உள்ளம் கொதிப்பதை யாரறிவார்?
முன்னைப் பெருமைகள் அத்தனையும் கொண்டு
முன்னேறிச் செல்லுதல் வேண்டுமடா 8

முற்றவும் உன்திறம் ஆய்ந்துணர்ந்தே – இன்பம்
மூழ்கித் திளைப்பவ ளாயிடினும்
பெற்ற பொழுதினும் நான் மகிழ்ந்தேன் – பிறர்
பேசிப் புகழ்ந்துனைப் போற்றுகையில் 9

வந்தவள் காதலில் சிக்கியதால் – தந்தை
வாழ்வில் மனங்கொளும் பான்மையின்றி
நொந்திடச் செய்தனர் ஆயினுமே – நன்னூல்
நூற்று வளர்த்திடு வேன்உனையே 10

நின்னைப் பெறுவதற் கென்னதவம் – செய்தேன்
நேரினில் உன்னடை கண்டவர்கள்
என்னைஓர் தக்கவள் என்றுரைத்தார் – புகழ்
ஏற்றிட வந்தனை வாழியவே 11

## 38. தமிழ் என் மகள் (தமிழ் வாழ்த்து)
(நூல்:–கவியரங்கில் முடியரசன்)

கவிதைஎனுங் காதலிபால் உன்னைப் பெற்றேன்
கண்ணம்மா! தமிழ்மகளே! முத்த மிட்டேன்
கவிவெறியோ கள்வெறியோ அறிய கில்லேன்
கனவுலகில் பறக்கின்றேன் தரையில் நில்லேன்;
செவிபொருந்தும் விழிகண்ணீர் சிந்தக் காணின்
செங்குருதி பீறிட்டென் னெஞ்சிற் கொட்டும்
புவிபுகழும் நீகலங்கப் பார்த்து நில்லேன்
போர்தொடுப்பேன் உனைக்காப்பேன் வாழ்த்தி நிற்பேன்.

## 39. நானும் நீயும்
(நூல்:–புதியதொரு விதி செய்வோம்)

செந்தமிழிற் சுவைகூட்டும் மொழிகள் பேசும்
தீங்குயிலே நானுனக்குத் தெய்வ மென்றால்
சிந்தையினை ஆண்டுகொண்ட நீயே எற்குத்
தெய்வமெனச் சொல்வதலால் வேறு காணேன்;

இந்தவகை அன்பதனால் பிணைந்து நின்றால்
இல்லறந்தான் பேரின்பம் இதனை விட்டு
நொந்துழன்று திரிகின்றார் உலக மாந்தர்
நுண்மதியே! என்னுயிரே! வாழ்க என்றேன்

## 40. வெறி வேண்டும்
**(நூல்:—காவியப் பாவை)**

காதல் வெறி வேண்டும் – தமிழ்ச்செல்வி
காதல் வெறி வேண்டும் – என்றன்
பேதை மனத் திடையே – உன்றன்எழில்
பேரொளி வீசிடவே – அந்தக்
காதல் ஒளிப் பிழம்பால் – இன்பநிலை
கண்டு களித்திடுவேன் – இன்பப்
போதை வெறி யினிலே – வான் வெளி
புக்குப் பறந் திடுவேன் 1

செல்வத் திரு மகளே! – உன்னை நான்
சேர நினைக் கையிலே – வஞ்சம்
புல்லும் மனத் தவர்தாம் – கூடியொரு
புன்மை தரு வாரேல் – என்றன்
மல்லல் திரு நெடுந்தோள் – பகையை
மாற்றிப் புறங்காண – உன்றன்
முல்லை நகை காட்டிப் – போர்வெறி
மூட்டித் தர வேண்டும் 2

போரில் உரம் காட்டி – உன்னை நான்
போற்றி மலர் சூட்டி – என்றும்
வாரி நலம் பருகி – நல்லின்ப
வாழ்வு பெற வேண்டும் – அந்த
வாரி யிடை மூழ்கிக் – கண்ட நலம்
வாழ்த்திப் புகழ்ந் துரைத்து – நின்னைப்
பாரில் உயர்த் துதற்கே – என்நெஞ்சில்
பாட்டு வெறி வேண்டும். 3

## 41. தமிழ்க்காதலி
**(நூல்:—முடியரசன் கவிதைகள்)**

எண்சீர் விருத்தம்

தென்னகத்துத் திருமகளே! கனியே! நெஞ்சில்
தித்திக்கும் கனிச்சாறே! சுளையே! தேனே!
என்னகத்து நின்றுநடம் ஆடும் பாவாய்!
எழிலரசி! எஞ்ஞான்றும் இளமைத் தோற்றம்
நின்முகத்துக் காண்கின்றேன் களிப்பில் மூழ்கி
நிகரில்லை நினக்கென்றே நிமிர்ந்து நோக்கி
உன்னலத்தைக் காதலித்தேன் உயிர்மூச் செல்லாம்
உனக்கென்றே வாழ்கின்றேன் தமிழ ணங்கே 1

உனையீன்ற நாட்டுக்கு நன்றி சொல்வேன்
உனைவளர்த்த பெரியோர்க்கும் சொல்வேன் நன்றி
சுனையீன்ற நாண்மலரே! நின்னெ ழிற்குச்
சூட்டிமகிழ் அணிகலன்தாம் கணக்கில் உண்டோ?
நனியிகந்த செல்வமகள் என்ற றிந்தும்
நானொருவன் ஏழையுனை நாடு கின்றேன்
எனையிகழேல் நீயின்றேல் நானும் இல்லை
என்னுயிரும் நினக்கென்றே இருக்கின் றேனே 2

அரசனிடம் பெற்றபெருஞ் சிலம்பை நின்றன்

அடிமலரில் அணிவித்துக் கண்க ளித்தார்;
முரசுகெழு முந்நாட்டுக் கலையின் சாயல்
முழுமையொடு விளங்குவதைக் காணு கின்றேன்;
பரல்விலையோ மதிப்பரிதாம், அவைதாம் வைரப்
பன்மணியோ நன்முத்தோ பவழந் தாமோ?
திருவடியில் அணிந்துநடை பயிலும் போழ்து
தித்திக்கும் எழில்கண்டேன் ஒயிலும் கண்டேன் 3

ஒருமகளே! நுண்ணியநின் இடையில் சுற்ற
ஒப்பரிய நன்மணிமே கலையைக் கூடற்
பெருவணிகன் சீத்தலையூர்ச் சாத்தன் றன்பால்
பெற்றுனக்குப் பெருமையுடன் அணிவித் தார்கள்;
திருவுயர்ந்த மார்பகத்தில் கலையால் வல்லான்
திருத்தக்கன் தருசிந்தா மணியை வைத்தார்;
அரசியென நீவிளங்க உன்வீட் டார்கள்
அணிவித்த பொற்கலன்கள் நூறு நூறாம் 4

இளையவளே! உயிரே!நின் காதல் வேண்டி
ஏங்குகிறேன் கைகொடுப்பாய்! கையிற் கோல
வளையெங்கே? நலங்காணத் துடித்தே நின்றேன்
வாயிதழைத் தாராயோ? என்மெய்க் காதல்
தளையவிழ உதவாயோ? குண்ட லந்தான்
தயங்குசெவி வெறுஞ்செவியாய் இருத்தல் ஏனோ?
ஒளிமிகுந்த நின்னெழிற்குக் களங்க மென்ன
உணர்கின்றேன் அவைஎங்கே? அவைதாம் எங்கே? 5

தென்னாட்டுத் திறன்முழுதும் பொருந்தக் கண்டு
திருடினரோ வடக்கத்தித் திருடர் தாமும்!
நின்வீட்டுப் புறக்கணிப்பால் இங்கு வந்தோர்
நிகழ்த்தியபொய்ச் சதியோஎன் அகத்து வாழ்வாய்!
என்பாட்டுக் குரியவளே! கவலை கொள்ளேல்
எழில்மிகுத்துக் காண்பதற்கு நான்மு யன்று
பொன்காட்டும் அப்பணிபோல் பலவும் செய்து
பூட்டுகிறேன் பூட்டுகிறேன் காதல் நல்லாய்! 6

## 42. தமிழே வா!

**(நூல்:—நெஞ்சிற் பூத்தவை)**

தமிழே வா செந் தமிழே வா
தவித்திடும் என்முன் தனிநடை காட்டித்
—தமிழே

அமிழ்தோ பாகோ அடைதரு தேனோ
அரும்பிய வாய்மொழி கரும்பின் சாறோ
—தமிழே

காலின் சிலம்பொலி காதினில் இனிக்கக்
கைவளை ஒலியும் கலந்தினி திசைக்க
நாலடி பாலொடு நடந்துநீ வருவாய்
நாலா யிரம்பா நான்தரப் பெறுவாய்
—தமிழே

அணியும் பொருளும் அளவில கொண்டாய்
ஆயினும் நான்சில அளித்ததும் கண்டாய்
வணிகன் வழங்கிய மேகலை ஆடிட
வருவாய் வருவாய் வந்தெனைக் கூடிடத்
—தமிழே

நீதருங் [1]கலியால் நெகிழ்ந்ததென் நெஞ்சம்
நினையே நினைந்து நினைந்துளம் கெஞ்சும்
பாதருங் காவியப் பாவையே நீயே
பரிவுடன் கடைக்கண் பார்த்தருள் வாயே
—தமிழே

புறத்தெழில் காணலும் சிலிர்த்ததென் உளமே
அகத்தெழில் காணவும் துடித்ததென் மனமே

புறப்படும் இன்பம் தொகைதொகை யாகப்
புதுச்சுவை காண்பேன் துயரங்கள் ஏகத்

—தமிழே

---

**அருஞ்சொற்பொருள்:—** [1]கலி — துயரம், கலித் தொகை.

## 43. என்னுயிர்க் காதலி

**(நூல்:—நெஞ்சிற் பூத்தவை)**

மதுமலர்க் குழலி! மயங்கினேன் நின்பால்
எதுகை மோனை எளிதில் வருமேல்
அதனைத் தொடுவேன் அணியென இடுவேன்;
திருந்திய அணிகளை வருந்திப் பெற்றுப்
பொருந்தப் பூட்டிப் புகழ்ந்தது மில்லை;
பூத்துக் குலுங்குமுன் புதுமுகங் காணக்
காலமும் பொழுதுங் கருதிக் கருதிக்
காத்துக் கிடந்து காலங் கழியேன்;
கள்ளைப் பருகிக் களிமயக் குற்றென்
உள்ளிற் பொங்கும் உணர்ச்சிப் பெருக்கால்
அள்ளி யள்ளிப் பருகும் அவாவுடன்
நின்னைத் தொடர்ந்தேன் என்னை மறந்தேன்;
உணர்வுடன் கலந்து புணர்குவை யாயின்
தணலும் எனக்குத் தண்புனல் ஆகும்,
உலகம் ஒருபொருட் டில்லை; உண்மை;
விலகிட நினைவையேல் விடுவேன் உயிரை;
கட்டிய மனையாள் கலங்குவள் என்றோ
எட்டி நின்றனை? இல்லை யில்லை
அட்டி யில்லை அவளும் இசைந்தனள்;
கவிதை மணிப்பெயர்க் காதலி! என்னைத்
தவித்திட விடுதல் தகுமோ இனியும்?
இரவில் நிலவில் இனியநல் லுறவுடன்
உரியாள் என்பால் உசாவும் பொழுதும்
கண்முன் நின்று களிநடம் புரிகுவை;
கண்ணயர் பொழுதுங் கனவிடை வந்து
பண்ணுயர் தமிழாற் பாடி எழுப்புவை
துயிலை மறந்து தோகை நின்னுடன்
மயலுறப் பேசி மகிழ்ந்தநல் லிரவுகள்
நினைதொறும் நினைதொறும் இன்பம் நிகழ்த்தும்;
அனைய இன்பம் அட,ஓ பெரிதே!
ஆடல் பாடல் அரங்கிலும் என்னுடன்
கூட வந்து குலவித் திகழ்ந்தனை;
ஊடல் சிலகால் உற்றனை யாகினும்
தேடி வந்து பாடி மகிழ்ந்தனை;
உயிரில் உணர்வில் பேச்சில் மூச்சில்
அயரா தென்னுடன் ஆடிக் களித்தனை;
பிரியா தென்னைப் பேணிய காதலி!
உரியாய் நின்னை வேண்டுவல் ஒன்று;
நரம்பிற் குருதி நடமிடும் வரையிலும்
திறம்பா தென்னுடன் திகழுதி நீயே!

---

**பாடற் குறிப்பு:—** 9.5.1980 ஆம் நாள் பாடியது.

## 44. பைந்தமிழ்க் காதலி

**(நூல்:—நெஞ்சிற் பூத்தவை)**

வாடல் தவிர்த்து வாழ்வு நல்கும்
பாடல் என்னும் பைந்தமிழ்க் காதலி!
நின்பாற் கலந்துளம் நெகிழுங் காலை

என்மனம் பிறிதொன் றெண்ணுவ தில்லை;
முற்படு பொருள்கள் கட்புல னாகா;
செப்பிடும் எவர்சொலும் செவிப்புலம் நுழையா;
தண்புன லாடுவேன், தையால் வருகுவை;
கண்படை கொள்வேன் கனவிடைத் தழுவுவை;
உண்ணும் பொழுதும் உவந்துடன் அமர்குவை;
இனித்தஎன் துணையொடு தனித்துரை யாடினும்
கனிச்சுவை இதழ்தரக் கனிந்துவந் தணைகுவை!
அனிச்ச மலரடி அணங்கே நின்னால்
உறங்கலும் உண்ணலும் மறந்துளன் பலகால்
இரங்கும் உளத்தினை இனியை எனினும்
பாட்டுல காளும் பைந்தமி ழரசி
ஆட்டிப் படைப்பைநீ ஆடுவன் யானே.

---

**பாடற் குறிப்பு:–** 11.2.1985 ஆம் நாள் பாடியது.

## 45. என்றும் நானோர் இளைஞன்
**(நூல்:–பாடுங் குயில்)**

என்றும் நானோர் இளைஞன் – பாடல்
எழுதிக் கொழிக்குங் கவிஞன்
ஒன்றும் வாழ்விற் சுவைஞன் – நெஞ்சில்
உணர்ச்சித் துடிப்போ மிகைஞன் 1

செந்தமி ழமுதம் உண்டேன் – முதுமை
சிறிதள வேனும் அண்டேன்
சிந்தையில் இளமை கொண்டேன் – உலகம்
சிறிதாய்த் தோன்றிடக் கண்டேன் 2

கற்பனைப் பெண்ணே வருவாய் – நின்றன்
கைகளை என்பால் தருவாய்
பொற்கலன் ஆயிரந் தருவேன் – அவையே
புதுமைக் காவிய உருவாம் 3

ஊரார் ஏதோ மொழிவார் – அதுதான்
உளரும் வாயர் தொழிலாம்
பாராய் எனைநீ விழியால் – என்னைப்
பழகிய பின்நீ குழைவாய் 4

என்றும் உனதே நெஞ்சம் – அதுவே
எழிலார் மலர்சேர் மஞ்சம்
ஒன்றிய ஆசையிற் கெஞ்சும் – எனைநீ
ஒதுக்கிடின் உயிரே அஞ்சும் 5

உனைநான் என்றும் பிரியேன் – பிரியின்
உயிர்தான் பெரிதோ தரியேன்
புனைபா உணர்வாற் பொழிவேன் – கண்டு
பூமியும் நம்மைத் தொழுமே 6

வானிற் பறந்தே செல்வோம் – நம்பால்
வருமிடர் அனைத்தும் வெல்வோம்
தேனில வுக்கதை சொல்வேன் – அங்கே
தெள்ளிய பாநலம் கொள்வோம் 7

கண்ணுள் ஒளியாய் ஒன்றி–நீஎன்
காலம் முழுதும் நின்றால்
மண்ணும் விண்ணும் ஒன்றே – என்றும்
மருவிக் களிப்போம் நன்றே 8

---

**பாடற் குறிப்பு:–** 9.10.1973 ஆம் நாள் பாடியது.

## 46. நானொரு பாடும் பறவை
(நூல்:—பாடுங் குயில்)

நானொரு பாடும் பறவை – பொழிவேன்
நாடொறும் பாடல் நறவை
வானில்வி ரிப்பேன் சிறகை – மறவேன்
வாழ்ந்திடும் மண்ணின் உறவை 1

பாடுவ தென்றன் தொழிலாம் – அன்பும்
பண்பும் எனதிரு விழியாம்
கூடிடும் நட்பெனும் மழையில் – நாளும்
குளித்துளம் மகிழ்வதென் வழியாம் 2

சிந்தனை விரிசிற குடையேன் – காற்றுச்
சீறிடல் கண்டுளம் உடையேன்
முந்திய தமிழிசை நடையில் – கவிதை
மொய்ம்புறப் பாடுதல் உடையேன் 3

கொள்கை கொணர்ந்ததை முடைவேன் – அந்தக்
கூட்டினில் வந்தே அடைவேன்
தெள்ளிய தமிழ்மழை விழைவேன் – என்றும்
தித்தித் திடஇசை பொழிவேன் 4

ஈயென எதிலும் அமரேன் – நறுமலர்
எதுவோ அதையே நுகர்வேன்
வாயினில் வந்ததை உளறேன் – துன்பம்
வாய்த்திடின் அதனால் தளரேன் 5

வாழ்வினைப் பெரிதாக் கருதேன் – என்றும்
வாய்மையை மீறித் திரியேன்
தாழ்விலுஞ் செம்மைக் குரியேன் – என்றன்
தாயகங் காக்குங் குறியேன் 6

விண்மிசை யாண்டுந் திரிவேன் – அங்கே
விந்தைகள் ஆயிரம் புரிவேன்
ண்மிசை என்றும் வருவேன் – இன்பம்
மாநிலம் எய்திடத் தருவேன் 7

பாடிடு வேன்புது வுலகை – அங்கே
படைத்திடு வேன்பொது வுடைமை
சாடிடு வேன்வரும் படையைத் – தாக்கிச்
சமர்புரி வேன்அது கடமை 8

## 47. விடுதலை வேண்டும்
(நூல்:—காவியப் பாவை)

வேண்டும் விடு தலையே – எனக்கு
வேண்டும் விடுதலையே
யாண்டும் பறந் திடுவேன் – வானில்
யாவையும் கண்டிடுவேன் 1

வண்ணப் பசுங் கிளியைச் – சிறையில்
வாட்டி வதக்குவதோ
சின்னஞ் சிறியவரும் – என்றன்
சிந்தையைத் தேக்குவதோ 2

என்னினம் வாழ்ந்திடவும் – செந்தமிழ்
ஏற்றம் மிகுந்திடவும்
மன்னுயிர்த் தா யகமே – உலகில்

மாட்சிமை பெற்றிடவும் 3

பாடுவ தென் தொழிலாம் – இதற்குப்
பற்பல ஊறுகளோ!
நாடு மொழி இனமே – உயர
நாடுவ தோர்குறையோ? 4

வீணரின் கூச் சலினால் – உரிமை
வேட்கை தணிந்திடுமோ?
கோணல் நரிக் குணத்தால் – பாயும்
கோளரி அஞ்சிடுமோ? 5

கட்டுக் கடங் கிடுமோ – புன்மைக்
காசுக் கடங்கிடுமோ
விட்டுக் கொடுத் திடுமோ – என்றன்
வீர சுதந்திரமே 6

பட்டம் பத விகளில் – வாழ்வில்
பற்றெனக் கில்லையடி
சிட்டென நான் திரிவேன் – எனக்குத்
தீமைகள் இல்லையடி 7

## 48. நமக்குத் தொழில்
(நூல்:–பாடுங் குயில்)

பாடல் பொழிந்திடும் என்வாயை – பள்ளிப்
பாடம் மொழிந்திட வைத்தாயே!
கூடும் முகில்வான் மிதப்பேனைப் – பள்ளிக்
கூடச் சிறையுள் வதைத்தாயே! 1

காலங் கடந்துல காள்வேன்நான் – கடிகைக்
காலங் கணக்கிட வாழ்வேனோ?
ஞாலம் புகழ்ந்திட வாழ்வேன்நான் – சிறுவர்
நாவிற் படமனந் தாழ்வேனோ? 2

கற்பனை வானில் பறப்பேனா? – பாழுங்
கட்டுரைத் தாள்கள் திறப்பேனா?
பொற்புள பாமலர் பறிப்பேனா? – பற்றாப்
பொருள்தனை எண்ணிச் சிரிப்பேனா? 3

செம்மை வளர்த்துல காக்குவனோ? – பொழுதைச்
[1]செம்மை தெளித்தினும் போக்குவனோ?
மும்மைத் தமிழ்தனை ஊக்குவனோ? – என்றன்
மூச்சைப் பழுதுற நீக்குவனோ? 4

நாட்டை வளர்த்திட வேவந்தேன் – வாழ்வின்
நன்மை தளர்ந்திட வேநொந்தேன்
நாட்டை மறந்திடும் பாவந்தான் – அங்கே
நாடக மாடுவ தேகண்டேன் 5

கனிமலர்க் காவென நான் வந்தேன் – பண்பு
கருகிடுந் [2]தாவென வேநொந்தேன்
தனியுரி மைக்கவி நானம்மா – துன்பம்
தரும்அடி மைத்தொழில் ஏனம்மா? 6

புனிதத் தொழிலென நான்கொண்டேன் – இன்று
புன்மைச் செறிவுள தேகண்டேன்
இனியித் தொழில்எனக் கேனம்மா? – கவிதை
எழுதும் பணிபுகு வேனம்மா. 7

**அருஞ்சொற்பொருள்:–**
1 .செம்மை தெளித்து – சிவப்புமை தெளித்து. 2. தாவு – இடம்.

## 49. திறந்தன கதவுகள்
(நூல்:–பாடுங் குயில்)

கூண்டின் கதவுகள் திறந்தன – என்
  கோலச் சிறகுகள் விரிந்தன
யாண்டும் நினைவுகள் பரந்தன – என்
  ஆசைக் கனவுகள் உயர்ந்தன 1

பூட்டும் விலங்குகள் ஒடிந்தன – ஏவல்
  பூணுஞ் சடங்குகள் முடிந்தன
வாட்டும் [1]வழக்குகள் பொடிந்தன – துன்ப
  வாழ்வின் இரவுகள் விடிந்தன 2

பூண்ட இளமையும் கழிந்தது – பாதி
  பூக்கும் புதுமையில் கழிந்தது
ஆண்டோ அறுபது தொடர்ந்தது – பாதி
  ஆசான் பணியில் நடந்தது 3

தேக்கும் ஒருதடை இனியிலை – என்பால்
  தீமை வரஒரு வழியிலை
பூக்கும் கவிமலர் அளவிலை – நெஞ்சம்
  பொங்கும் மகிழ்வினிற் கடலலை 4

தோள்கள் மலையென நிமிர்ந்தன – நெஞ்சில்
  தூய்மைத் துணிவுகள் வளர்ந்தன
நாள்கள் மகிழ்வுறப் பிறந்தன – எண்ணம்
  நாட்டின் பணியிடை விரிந்தன 5

கோலத் தமிழ்மொழி உயர்ந்திட–நெஞ்சம்,
  கூவிக் குரல்தரும் வளர்ந்திட
ஞாலத் தொருபகை எழுந்திடின் – அப்பகை
  நாணிப் புறமிட முழங்கிடும் 6

வாழத் தரையினில் பிறந்தவர் – அந்தோ
  வாடிப் புழுவென வதங்கினர்
நாளை அவர்துயர் தொலைந்திடப் – பாடல்
  நாளும் கணைகளை வழங்கிடும் 7

நாட்டின் தொழிலிடை முனைந்தவர் – வாழ
  நாளும் உழவுகள் புரிந்தவர்
வாட்டும் வறுமையில் உழன்றனர் – மீள
  வாளென என்கவி சுழன்றிடும் 8

---

**பாடற் குறிப்பு:–** பணியிலிருந்து விடுபட்டபொழுது பாடியது – 23.6.1979.

**அருஞ்சொற்பொருள்:–**
[1]வழக்குகள் – இந்தியெதிர்ப்பு வழக்கு, மற்றுமொரு பொய் வழக்கு

## 50. நினைந்து மகிழ்கிறேன்
(நூல்:–நெஞ்சிற் பூத்தவை)

பெரும்பள்ளி பழம்பள்ளி பேர்பெற்ற ஆசான்மார்
கரும்பள்ளித் தருவதெனக் கற்பார்க்குக் கல்விநலம்
தரும்பள்ளி உயர்பள்ளி தனதுழைப்பால் மேல்நிலைக்கு
வரும்பள்ளி வளர்பள்ளி மேன்மேலும் வாழியவே! 1

மீனாட்சி சுந்தரப்பேர் மேவியஎம் பள்ளிதனில்
தானாட்சி செய்துவரும் தாளாளர் தகவென்னே!
நானாட்சி செயக்கல்வி நயமுணர்ந்தார் அன்பென்னே!
தேனாட்சிக் காலமது! சிந்தித்து மகிழ்கின்றேன். 2

வாயிலுக்குட் புகுந்ததுமென் வாழ்வுதனை மறந்துவிட்டுக்
கோயிலுக்குள் அரசனெனக் கோலோச்சி நானிருப்பேன்!
தாயினுக்கு நிகராகத் தமிழூட்டி மாணவரைச்
சேயெனவே நான்புரந்த செயலெல்லாம் நினைக்கின்றேன். 3

சொல்லுக்குப் பொருளுரைப்பேன் சொக்கிடுவர்; கடிந்துரைக்கும்
சொல்லுக்குப் பணிந்திருந்து சுடுசொல்லும் பொறுத்திருப்பர்
மல்லுக்கு வரநினையா மாணவரைப் பெற்றிருந்தேன்
இல்லுக்குள் ளிருந்தோய்வில் இவற்றையெலாம் நினைக்கின்றேன். 4

பள்ளிக்குப் பவளவிழா! தேனாறு பாய்ந்ததுபோல்
உள்ளுக்குள் நான்மகிழ்ந்தேன் ஓதியஅம் மொழிகேட்டு
கள்ளுக்குள் மிதந்துவரும் கனிவண்டாய் நான்மிதந்தேன்
அள்ளூற்ற தமிழமுதால் அகமகிழ்ந்து வாழ்த்துகிறேன். 5

---

**பாடற் குறிப்பு:–** மீ.சு.உயர்பள்ளிப் பவளவிழா வாழ்த்து

## 51. எப்படிப் பொறுப்பேன்?

**(நூல்:–பாடுங் குயில்)**

இருளுடன் ஒளியையுங் காண்பேன் – உலகின்
இயல்பெனும் மனநிலை பூண்பேன்
வறுமையும் வளமையுங் கண்டால் – மாந்தன்
வாழ்வினில் எப்படிப் பொறுப்பேன்? 1

மருதமும் பாலையும் உண்டு – விடுவேன்
மண்மிசை இயல்பெனக் கொண்டு
உரியவன் எளியவன் இருத்தல் – இயல்பென்
றுரைத்திடின் எப்படிப் பொறுப்பேன்? 2

தடமலை சமதரை இருக்கும் – அவையும்
தரைதனில் இயல்பென இருப்பேன்
குடிலுடன் மாளிகை இருப்பின் – நெஞ்சம்
குமுறா தெப்படி யிருக்கும்? 3

பூவுடன் பிஞ்சுகள் மடியும் – அஃதும்
பூமியில் இயல்பென முடியும்
சாவுகள் இளமையைத் தொடரின் – உள்ளம்
சமநிலை எப்படி யடையும்? 4

மலர்தனிற் பனிநீர் குந்தும் – அதுதான்
மனமகிழ் அழகினைச் சிந்தும்
உலரிய விழிநீர் சிந்தின் – என்றன்
உளமோ கடலெனப் பொங்கும் 5

விரித்திடும் தோகையின் கண்கள் – காணின்
விளைத்திடும் என்மனம் பண்கள்
தரித்திடும் ஆடையிற் கண்கள் – காணின்
தலைக்கொளும் ஆயிரம் புண்கள் 6

முழுமதி வடிவினில் குறையும் – அதுவும்
முழுமையும் ஒருநாள் மறையும்
உழுபவன் வடிவினில் குறையின் – என்றன்

உளமோ கனலாய்ப் புகையும் 7

பசியுடன் நலிவுகள் மிகுத்தால் – இங்கே
பாய்புலி யாய்மனஞ் சினக்கும்
இசையா வுலகினைப் படைத்தால் – இனியும்
எப்படி என்மனம் பொறுக்கும்? 8

## 52. நெஞ்சு பொறுக்குதில்லையே

**(நூல்–நெஞ்சு பொறுக்கவில்லையே)**

**('குமுகம்' என்ற பொருண்மையில் இடம் பெற்றுள்ள இப்பாடலின் 8 எண்சீர் விருத்தங்களில், 6 எண்சீர் விருத்தங்கள் மட்டும் பொருண்மை கருதி இங்கும் இடம் பெற்றுள்ளன)**

எங்கெங்குக் காணினும் தீமையடா – உல
கெங்கணும் வாய்மைகள் ஊமையடா
அங்கங்கு வாழ்பவர் எள்ளினரே – குணம்
அத்தனை யுங்கொண்டு தள்ளினரே
தங்கடன் செய்வதில் தூங்குகிறார் – மனச்
சான்றுகள் கொய்யவே ஏங்குகிறார்
இங்கவர் நல்லவ ராவதெந்நாள்? – கெடும்
எண்ணங்கள் யாவுமே போவதெந்நாள்? 1

பிஞ்சு மனத்தவ ராகினுமே – கலை
பேணி முதிர்ந்தவ ராகினுமே
வஞ்சியர் ஆடவர் யாவருமே – படும்
வாழ்வு மலர்ந்திடத் தீவினையே
அஞ்சில ராகியே கூட்டுகின்றார் – அந்தோ
ஆசையில் நேர்மையை வாட்டுகின்றார்
நெஞ்சு பொறுப்பதற் கில்லையடா – இந்த
நிலைகெட்ட மாந்தரால் தொல்லையடா 2

ஆறறி வுள்ளவர் மாந்தரடா – விலங்
காகிட ஏன்மனம் சாய்ந்ததடா?
சோறது பெற்றிடத் தாழ்ந்தனரே – மனத்
தூய்மையை விற்றிட வீழ்ந்தனரே
மாறிய போக்கினைக் கற்றனரே – உயர்
மான வுணர்ச்சியைச் செற்றனரே
கூறிய நீதிகள் எவ்வளவோ – அவை
கூறுவர் மேடையில் அவ்வளவே 3

தந்நலம் ஒன்றையே தேடுகிறார் – அதைச்
சட்டமென் றாக்கிட நாடுகிறார்
என்னதான் செய்யினும் நெஞ்சினிலே – முனம்
ஏற்றுகி றாரவர் வஞ்சனையே
பன்னிய நல்லறம் நீக்கினரே – மனப்
பண்புகள் யாவையும் போக்கினரே
இந்நிலை கண்டுளம் வாடுகிறேன் அதை
எற்றித் துவைத்திடப் பாடுகிறேன் 4

எங்கெது காணினும் வஞ்சமடா – அதை
எப்படித் தாங்கிடும் நெஞ்சமடா
இங்கெவர் போக்கிலும் குற்றமடா – இதை
எண்ணிடும் போதெலாம் செற்றமடா
எங்கணுங் கீழ்மையைச் சாடிடுவேன் – மனம்
ஏற்றம் பெறக்கவி பாடிடுவேன்
பொங்குக பண்புகள் பொங்குகவே – நலம்
பூத்துப் பொலிந்துவி ளங்குகவே 5

நாயினுங் கீழென வாழ்வதுவோ – திரு
நாட்டின் பெரும்புகழ் சாய்வதுவோ?
ஈயென எங்கணுந் தோய்வதுவோ? – மனம்
ஈனத் தனத்தினிற் பாய்வதுவோ?

போயெதிர் காலத்தை நோக்குகிறேன் – மனம்
புண்பட்டுப் போவதால் தாக்குகிறேன்
வாயினை எப்படி மூடிடுவேன்? – உயர்
வாய்மையைக் காத்திடப் பாடிடுவேன் 6

## 53. நெஞ்சத் துடிப்பு

(நூல்–நெஞ்சு பொறுக்கவில்லையே)

('குமுகம்' என்ற பொருண்மையில் இடம் பெற்றுள்ள இப்பாடல் பொருண்மை கருதி இங்கும் இடம் பெற்றுள்ளது)

விழிசுமந்த அருளாலே வருவோர்க் கெல்லாம்
விருந்தளித்தோம் வரவேற்றோம் நட்புங் கொண்டோம்;
வழிசுமந்த பண்பாடு தமிழர்க் கென்றே
வாய்நிறையப் புகழ்ந்துரைத்தார் மகிழ்ந்தோம்; ஆனால்
எழில்சுமந்த என்நாட்டார் வந்தோர்க் கெல்லாம்
ஏமாந்து குனிகின்ற பித்த ராகிப்
பழிசுமந்து போனாரே என்ற போது
பதைபதைக்கும் துடிதுடிக்கும் எனது நெஞ்சம் 1

நல்லவர்யார் கெட்டவர்யார் என்ப தோரார்;
நலிவகற்றி நலந்தந்து நாட்டை யாள
வல்லவர்யார் அல்லவர்யார் அதுவும் தேரார்;
வாயினிக்கப் பேசுவதை நம்பு கின்றார்;
மெல்லியலோர் மின்மினியை ஒளிவி ளக்கா
மேடைதனில் வைத்துவிட்டார்; இதனைச் செய்தார்
மெல்லியலார் என்றுரைப்பர்; ஆண்க ளென்ன
விதிவிலக்கா? இதையெண்ணித் துடிது டித்தேன் 2

'சாதிகளே இல்லையடி பாப்பா நம்முள்
தாழ்வுயர்வு சொல்லுதலே பாவம்' என்றே
ஓதியஓர் பாரதியும் செத்துவிட்டான்
உட்புகுந்த சாதிகளோ சாக வில்லை;
'வேதியர்கள் தாம்வாழ வகுத்து வைத்த
வேதநெறி திராவிடத்தில் தூள் தூள்' என்று
மோதினன்நம் பாவேந்தன்; வீதி தோறும்
முளைப்பதலால் தூளாக வில்லை யிங்கே! 3

ஒருருவம் இல்லாத கடவுள் பேரால்,
ஒவ்வாத பகைமூட்டும் மதத்தின் பேரால்,
சீரழிவு பெற்றுவரும் சமுதா யத்தைச்
செப்பனிட வந்தஒரு பெரியார் இங்கே
ஆறறிவுப் போர்தொடுத்து மாண்ட பின்பும்
அர்த்தமிலா எந்தமதம் மாண்ட திங்கே?
ஆரவர்போற் போராட வல்லார்? இன்னும்
அழிவகல வில்லையெனத் துடிது டித்தேன் 4

'சாதிஎனச் சமயமென முளைத்து வந்த
சழக்குகளை விட்டுவிட்டேன்' என்று கூறி
மேதினியில் மறுமலர்ச்சி காண வந்த
மேன்மைமிகும் இராமலிங்கர் அருட்பா நூலை
ஓதிவரும் தொண்டருக்குப் பஞ்ச மில்லை;
சழக்குகளை ஒழிக்கத்தான் நெஞ்ச மில்லை;
யாதினிநாம் செய்வதென எண்ணி எண்ணி
அகமெல்லாம் துடிதுடிக்கும் வெம்பும் சோரும் 5

முடிவளர்ப்பர் புதர்முளைத்த செடிகள் போலே;
முகம்மறைப்பர் மூக்குக்கண் ணாடி யாலே;
அடிமறைக்கும் தொளதொளத்த காலின் சட்டை
அணிந்திருப்பர் பூப்பொறித்த மேலின் சட்டை;
[1]படிமறப்பர், [2]நடைமறப்பர், தெருவிற் செல்லும்
பாவையரை வழிமறைப்பர், கூத்த டிப்பர்;
குடிகெடுக்கும் காளைகளைக் காணும் போது

குமுறிமிகத் துடிதுடிக்கும் எனது நெஞ்சம் 6

எதிர்காலம் இவர்கையில் என்று நம்பி
இருக்கின்றார், நிகழ்காலப் பெரியோர்; ஆனால்
உதிர்காலம் போலன்றோ இளைஞர் வாழ்க்கை
உருள்கிறது; தளிர்காலம் வருமா என்னும்
புதிர்கோலம் இடுவதனால் எனது நெஞ்சம்,
பொழிபனியின் குளிர்கால நடுக்கம் போல
விதிர்விதிர்க்கும்; துடிதுடிக்கும் அவர்தம் நெஞ்சில்
விடிகாலம் அரும்பிவரும் காலம் என்றோ? 7

புதியஅலை எனும்வலையை வீசி விட்டால்
பொருள்பெருகும் புகழ்வளரும் என்று நம்பி
மதிதவறி எழுத்தாளர் வீழ்ந்து விட்டார்;
மனமயக்கம் தருகின்ற காமச் சாற்றைப்
புதுமுறையிற் பிழிந்தெடுத்து வார்த்து வைத்துப்
புத்தகங்கள் பத்திரிகை எழுதி விட்டார்;
கதையிதுவா? கலையிதுவா? இளைய நெஞ்சம்
கருகிவிடும் வழியன்றோ எனத்து டித்தேன் 8

நல்லறிவைப் பண்பாட்டை ஒழுக்கந் தன்னை
நாகரிகக் கலைவளத்தை விஞ்ஞா னத்தைச்
சொல்லுதற்குப் படைப்பாற்றல் கொண்டோன் கையில்;
சுழல்கின்ற கோலொன்றே எழுது கோலாம்;
புல்லறிவால் பொருள்பெருக்கல் ஒன்றே நோக்கிப்
புழுத்ததெலாம் வரையுங்கோல் கன்னக் கோலாம்;
நல்லறிவைக் கெடுத்துமிகப் பொருள்ப றிக்க
நன்மைக்கே தீவைக்கும் நெருப்புக் கோலாம் 9

மறைப்பிடமே இல்லாமல் சதையைக் காட்டி
மதர்ப்புடனே நடிக்கின்ற மங்கை நல்லார்
கறைப்படுமே பண்பாடென் றெண்ணா ராகிக்
கன்னத்தை வாடகைக்கு விட்டால், மீண்டும்
தரப்படுமே நடிப்பதற்கு வாய்ப்பென் றெண்ணித்
தரங்கெட்ட காட்சிகளில் நடித்துக் காட்டும்
திரைப்படங்கள் வளர்வதற்கிங் கிடங்கொடுத்தால்
தெருப்புழுதி போலாகும் மக்கள் நெஞ்சம் 10

கற்பழிப்பு, களவாடல், கடத்தல் என்ற
கயமைஎலாம் கற்பிக்கும் கதைகள், கெட்ட
சொற்பெருக்கம் கொண்டொழுகும் காமப் பாட்டு,
துள்ளிவரும் நடனமெனப் பேயின் ஆட்டம்,
மற்போர்கள் செய்வதுபோல் காதற் காட்சி,
மாமேதை இயக்குநர்கள் திறமை, எல்லாம்
கற்போர்கள் நெஞ்சத்தைக் கெடுப்ப தல்லால்
கடுகளவு நலமேனும் தருவ துண்டோ? 11

எதைக்கண்டு துடிப்பதடா? அந்தோ இங்கே
எதைக்கண்டு கொதிப்பதடா? தமிழர் நாட்டில்
பதைக்கின்ற நிலையல்லால் அமைதி யில்லை;
பைந்தமிழின் நிலைகாணின் நெஞ்சே வேகும்;
மிதிக்கின்ற வழிதேடி வடபு லத்தார்
மெல்லமெலப் புகுகின்றார்; இந்தி கொண்டு
வதைக்கின்ற வழியமைத்து வருதல் கண்டேன்
வடவர்பிடி எத்தனைநாள்? எனத் துடித்தேன் 12

இல்லத்தார் துடிதுடிக்க, மாலையிட்ட
இல்லாளும் துடிதுடிக்கப் பெற்ற பிள்ளை
சொல்லத்தான் முடியாமல் துடிது டிக்கச்
சூழ்ந்தஉயிர் அணுவெல்லாம் துடிது டிக்க
மெல்லத்தன் உயிர்த்துடிப்பே அடங்கும் வண்ணம்
மேனியிலே எரியூட்டிக் கொண்ட தோழர்
வெல்லத்தான் மொழிப்போரில் தமைக்கொ டுத்தார்
வியப்புமிகும் அத்துடிப்பே இன்றும் வேண்டும் 13

துடிக்கட்டும் உமதுமனம்; தமிழ்மொ ழிக்குத்
துளியேனும் பகைவருமேல் தூள்தூ ளாக
வெடிக்கட்டும் அப்பகைமை; தமிழர் நெஞ்சம்
விழிக்கட்டும்; இந்திமொழி ஆதிக் கத்தை
முடிக்கட்டும் இன்றோடு; கூடி எங்கும்
முழங்கட்டும் தமிழ்முழக்கம்; தமிழர் கைகள்
அடிக்கட்டும் போர்முரசு; பகைவர் கூட்டம்
அலறட்டும் சிதறட்டும் அஞ்சி நின்றே 14

---

**அருஞ்சொற் பொருள்:–** 1. படி – பூமி. 2. நடை – ஒழுக்கம்.

## 54. சின்னந் தவிர்ந்தேன்

**(நூல்:–நெஞ்சிற் பூத்தவை)**

**{'புரட்சி–நிகர்மை' என்ற பொருண்மையில் இடம் பெற்றுள்ள இப்பாடல் பொருண்மை கருதி இங்கும் இடம் பெற்றுள்ளது)**

நீறினை அணிந்து பார்த்தேன்
நெற்றியில் திருமண் ணிட்டோர்
வேறெனப் பகைத்து நின்றேன்;
விடுத்தபின் திருமண் வைத்தேன்
நீறணிந் தோரை யெல்லாம்
நெடும்பகை யாகக் கொண்டேன்;
[1]மாறிடும் இவற்றை இந்து
மதமென ஏற்றுக் கொண்டேன் 1

சிலுவையைத் தோளில் இட்டோர்
சீறிடும் பகைவ ரானார்;
குலவிய குல்லா வைத்தோர்
கொடும்பகை யாகப் போனார்;
நிலவிய நீறும் மண்ணும்
நெற்றியில் அணிதல் விட்டேன்
உலகினில் நல்ல சின்னம்
ஒன்றைநான் தேடி நின்றேன் 2

சிலுவையைச் சுமந்து பார்த்தேன்;
சின்னம்வே றணிந்தோ ரெல்லாம்
உலகில்அஞ் ஞானி என்றே
உளத்தினிற் கருதிக் கொண்டேன்;
தலைதனிற் குல்லா வைத்தேன்
மற்றது தரியா ரெல்லாம்
நிலவிய சைத்தான் என்றே
நெஞ்சினிற் பகைத்து நின்றேன். 3

இனியநன் மக்கட் பண்பை
இளகிய அன்பை நீக்கி
மனிதரைப் பகைக்கச் செய்யும்
மதம்படு சின்னம் விட்டேன்
கனிவுறும் அன்பும் பண்பும்
கசடறு நெஞ்சம் வாய்க்கும்
தனியொரு வழியைக் கண்டு
தளர்விலா தொழுகு கின்றேன் 4

**(வேறு)**

மனத்தினுள் மாசுற மறைபல ஓதிக்
கணத்தினில் ஆத்திகன் ஆவதை விடுத்து
நல்லவ னாகி நாத்திகன் என்றொரு
சொல்லினைப் பெற யான் குளுரைத் துளனே! 5

---

**பாடற் குறிப்பு :–** 1.6.1981 ஆம் நாள் பாடியது.

**அருஞ்சொற் பொருள்:–** 1. மாறிடும் – மாறுபாடுடைய.

## 55. நாத்திகனா? ஆத்திகனா?

**(நூல்:–நெஞ்சிற் பூத்தவை)**

**{‘புரட்சி–நிகர்மை’ என்ற பொருண்மையில் இடம் பெற்றுள்ள இப்பாடல் பொருண்மை கருதி இங்கும் இடம் பெற்றுள்ளது)**

அன்பும் தூயநற் பண்பும்நிறைந்து
மன்பதை ஓம்பும் மாபெரும் நோன்பினைப்
பற்றிய நெஞ்சிற் பழுது படாவணம்
முற்றிய உறுதியில் நிற்றலை விழைவேன்;
வஞ்சகம் பொறாமை நெஞ்சறி பொய்ம்மை
நஞ்சென வெறுத்து நடக்கும் இயல்பினேன்;
மற்றவர்க் குறுகண் மனத்திலும் நினையேன்;
செற்றமுங் கலாமும் செய்திட விழையேன்;
பகுத்துணர் அறிவிற் பற்றுதல் உடையேன்;
நகத்தகும் மடமைகள் செகுத்திடும் படையேன்
மதம்எது வாகினும் மனத்தினிற் கொள்ளேன்;
அதனதன் சின்னமும் அணிதலும் செயேன்;
கோவிலுங் குளமுங் குறுகுதல் செய்யேன்;
மேவிய பூசனை யாவையும் வேண்டேன்;
ஆதலின் நாத்திகன் என்றெனை அனைவரும்
ஓதுதல் கேட்டேன்; உளத்தினில் நகைத்தேன்;
அன்பையும் பண்பையும் அறவே மறந்தும்
மன்பதை கெடுத்தும் தன்னலம் மிகுத்தும்
பழுதுகள் மனத்திற் படர விடுத்தும்
தொழுதுபின் சென்று துதிபல பாடி
வஞ்சக நெஞ்சினில் வாய்மை துறந்தும்
அஞ்சுத லின்றி அரும்பழி இழைத்தும்
செற்றமுங் கலாமுஞ் செய்தலே தொழிலாய்
மற்றவர் பொருளை மறைவினிற் கவர்ந்தும்
பகுத்தறி வின்றிப் பாழ்படும் பழைமையுள்
நகத்தகும் மடமையுள் நாடொறும் மூழ்கி
மதமுங் கடவுளும் வாயாற் கூறி
அதனடை யாளச் சின்னம் அணிந்தும்
எண்ணிய படியெலாம் இறைவன் பெயர்சொலிப்
புண்ணியத் தலங்கள் பூசனை தீர்த்தம்
என்றெலாம் கதைத்தும் எத்தித் திரியின்
நன்றென மக்கள் நயப்புடன் போற்றி
ஆத்திகன் என்றே அழைத்திடல் கேட்டேன்;
கூத்திது கண்டு குலுங்கச் சிரித்தேன்;

---

**பாடற் குறிப்பு:–** 21.12.1978 ஆம் நாள் பாடியது.

## 56. எனது நேரம்

**(நூல்:–பாடுங் குயில்)**

நினைவுடன் வாழ்வது சிலவேளை – கனவில்
    நீந்திடப் போவது பலவேளை
முனைவுடன் வாழ்வது சிலவேளை – துயரம்
    மூழ்கிடத் தாழ்வது பலவேளை 1

நட்பில் திளைப்பது சிலவேளை – தனியே
    நலிந்து கிடப்பது பலவேளை
*கற்பில் களிப்பது சிலவேளை – துயரங்
    கண்டு கழிப்பது பலவேளை 2

சிரிப்பினில் வாழ்வது சிலபோது – கண்ணீர்
சிந்தித் தேய்வது பலபோது
நெருப்பினில் காய்வது பலபோது – இன்பம்
நெஞ்சினில் தோய்வது சிலபோது 3

நல்லன காண்பது சிலபோது – நாட்டில்
நாணயங் காண்பதுஞ் சிலபோது
அல்லன தோன்றுதல் பலபோது – மண்ணில்
அல்லலுந் தோன்றுதல் பலபோது 4

என்னலம் நெஞ்சினில் ஒருநாளே – மக்கள்
இனநலம் மிஞ்சிடும் பலநாளே
என்னகம் வஞ்சியும் ஒருநாளே – நினைவில்
ஏழையர் பஞ்சையர் பலநாளே 5

மாந்தனைக் காண்பது சிலநாளே – மனித
மாக்களைக் காண்பது பலநாளே
ஆய்ந்துளந் தங்குதல் சிலநாளே – மக்கள்
ஆகுலம் பொங்குதல் பலநாளே 6

மண்ணில் நடப்பது சிறுநேரம் – நானோ
வானிற் பறப்பது நெடுநேரம்
நண்ணும் மகிழ்ச்சிகள் சிறுநேரம் – நெஞ்சம்
நையுந் தளர்ச்சிகள் நெடுநேரம் 7

வீட்டை நினைப்பது சிறுநேரம் – மனைவி
வேட்கை யிருப்பதுஞ் சிறுநேரம்
நாட்டை நினைப்பது நெடுநேரம் – கவிதை
நயந்து தொடுப்பதும் நெடுநேரம் 8

---

**அருஞ்சொற் பொருள்:–** 1. கற்பில் – படிப்பில்.

## 57. எனது உலகம்

**(நூல்:–பாடுங் குயில்)**

எனக்கென உண்டொரு வுலகம் – அங்கே
இன்பங்கள் வந்தெனைத் தழுவும்
மனத்தினில் தானது குலவும் – வந்த
வாட்டங்கள் விட்டெனை விலகும் 1

பலப்பல புதுமைகள் நிகழும் – நல்ல
பாடல்கள் பற்பல திகழும்
சொலச்சொல மனமது மகிழும் – அந்தச்
சுவையினில் நாவது புகழும் 2

மிதப்பது போலொரு கனவு – காதல்
மெல்லிய மாதரின் உறவு
புதுப்புது நினைவுகள் வரவு – நெஞ்சப்
பூவினில் சுவைமிகு நறவு 3

இனித்திடும் அவ்வுல கதனில் – என்னை
எதிர்த்திட ஒருபகை யிலையே
கனிச்சுவை யனையஎன் மொழியைக் – கேட்டுக்
கருத்துடன் தொடர்வரென் வழியை 4

நிமிர்த்திய தோளோடு வருவேன் – அங்கு
நின்றிடு வார்க்குரை தருவேன்
அமைச்சர்கள் வாழ்த்திட மகிழ்வேன் – என்றன்
அரியணை மீதினில் அமர்வேன் 5

கொடுமைகள் பொடிபடச் சிதறும் – என்வாய்
    கோளரி யோவென அதிரும்
மிடிமைகள் இலையென உதிரும் – வஞ்சம்
    மேவிய சூழ்ச்சிகள் கதறும் 6

மடம்படு சாதிகள் தொலையும் – அங்கு
    மதமெனும் போர்வைகள் கலையும்
கடவுளின் கதைகளும் விலகும் – செம்மைக்
    கதிரவன் ஒளிதரப் பொலியும் 7

இலக்கண நெறியொடு திகழும் இன்ப
    இலக்கிய வாழ்வினில் மகிழும்
நிலத்தினில் உயர்வெனப் புகழும் – நல்ல
    நீதிகள் தழுவுமென் னுலகம் 8

---

**பாடற் குறிப்பு :–** 25.2.1979 ஆம் நாள் பாடியது.

## 58. எனது வாழ்க்கை
**(நூல்:–நெஞ்சிற் பூத்தவை)**

எனது வாழ்க்கை எழில்மலர்ச் சோலை
மனத்தில் இப்படி மற்றவர்க் கெண்ணம்;
வண்ணமும் மணமும் வாரி இறைக்கும்
எண்ணில் மலர்கள் நண்ணுபூங் காவென
இலங்கிட வேண்டும் என்பதென் ஆவல்;
கலங்கிய மனத்தின் கற்பனைக் கனவிது;
நீரே யறியா நிலமென் வாழ்க்கை
யாரே அறிவார்? ஆகினும் உண்மை!
காய்ந்தஅந் நிலத்திற் கண்கவர் சிலசெடி
வாய்ந்ததும் உண்டு; வண்ணமும் மணமும்
தோய்ந்த மலர்கள் துளிர்த்ததும் உண்டு;
நெருங்கிப் பழகியோர் நெஞ்சிற் பழுத்த
பரிவும் அன்பும் உரிமையும் உடையோர்
ஊற்றிய புனலால் தோற்றிய மலரவை;
ஆற்றிய உதவியை ஆருயிர் உளவரை
போற்றிப் போற்றிப் புகழ்தல் அன்றி
ஏற்ற கைம்மாறு யானறி யேனே!

---

**பாடற் குறிப்பு :–** 11.6.1980 ஆம் நாள் பாடியது.

## 59. எனது வாழ்வில்
**(நூல்:–நெஞ்சிற் பூத்தவை)**

உற்றவள் ஒவ்வோர் நாளில்
    உலையிட அரிசி யில்லாச்
[1]சொற்றனை என்பாற் சொல்லத்
    துவண்டுளஞ் சோர்ந்து செல்வேன்;
பற்றுளங் கொண்ட நண்பர்
    பரிந்துகை கொடுப்பர்; ஆனால்
உற்றெனை ஏழை யென்றால்
    உளத்தினுள் அதனை யேலேன்! 1

உடுத்திடும் உடைக்குக் கூட
    ஒரோவழித் தவித்த துண்டு
துடித்திடும் அற்றை நாளில்
    துணிபல தந்து துன்பம்
துடைத்துநல் லன்பு காட்டித்
    தோழர்கை கொடுத்து நிற்பர்;

நடப்பிது வெனினும் ஏழை
    என்றெனை நவில மாட்டேன்! 2

பிணியெனைப் பற்ற நெஞ்சம்
    பேதலித் துழலுங் காலை
தணியவே வந்து தாய்போல்
    தண்ணருள் சுரந்து காக்கும்
[2]அண்ணலார் உதவ மெய்யில்!
    ஆருயிர் தங்கு மேனும்
எண்ணவுஞ் செய்யா துள்ளம்
    ஏழையாம் இழிந்த சொல்லை 3

மக்களின் கல்விக் காக
    மனம்மிக மாழ்கும் போது
தக்கவர் அன்போ டந்த
    மயக்கினைத் தவிர்ப்ப துண்டு;
சிக்கனம் அறியா என்றன்
    சிந்தனை கலங்கு மேனும்
பொக்கையாய் ஏழை யென்று
    புகலுதல் அறவே செய்யேன்! 4

வாழ்வினில் துயர வெள்ளம்
    அலைத்திட வந்து பன்னாள்
சூழ்வதும் உண்டு; பண்பர்
    தூயநற் றொண்டர் அன்பர்
தாழ்விலா அளியர் என்னைத்
    தாங்கிடத் தாமே வந்து
சூழ்பவர் உண்டென் றாலும்
    சொல்லிடேன் ஏழைச் சொல்லை! 5

பணவரு வாயிற் பற்றாக்
    குறையெனைப் பற்றும் போது
துணையென நட்டார் வற்றா
    அருளுடன் தோள்கொ டுப்பர்;
தணலென [3]நிரப்பு வந்து
    தனியெனைத் தகைத்துத் தாக்க
அணுகினும் ஏழை யென்றால்
    அரசன்யான் ஏற்ப தில்லை! 6

---

**பாடற் குறிப்பு :–** 22.3.1984 ஆம் நாள் பாடியது.

**அருஞ்சொற் பொருள்:–** 1. சொற்றனை – சொல்தனை.
2. அண்ணலார் – புதுக்கோட்டை திருக்குறள் கழகத் தலைவர் பு.அ. சுப்பிரமணியனார். 3. நிரப்பு – வறுமை.

## 60. குறிக்கோளை நோக்கி

(நூல்:–பாடுங் குயில்)

நடந்து செல்கிறேன் நடந்து செல்கிறேன்
நலிந்து போயுடல் மெலிந்து தேயினும்
—நடந்து

கடந்த பாதையில் நிகழ்ந்த வேதனை
கலங்க வைப்பினும் மயங்க வில்லைநான்
—நடந்து

அடர்ந்த காடுகள் படர்ந்த மேடுகள்
அலைகள் மோதிடும் ஆழ்ந்த ஆறுகள்
கொடுங்கண் பார்வையின் விலங்கு மேவினும்
கொண்ட என்குறிக் கோளை நோக்கியே
—நடந்து

இருண்ட கண்ணுடன் இரண்டு கால்களும்
சுருண்டு வீழினும் தொடர்ந்து செல்கிறேன்

மருண்டு சோர்கிலேன் வெருண்டு தாழ்கிலேன்
உருண்டு சென்றுமே உயர்வைக் காணுவேன்
–நடந்து

---

பாடற் குறிப்பு :– 2–1–1977 ஆம் நாள் பாடியது.

## 61. நான் பாடும் போது...

(நூல்:–பாடுங் குயில்)

என்னைம றந்துநான் பாடல்பு னைந்திட
எண்ணிவ ரைந்திடும் போதினிலே
எத்தனை எத்தனை இன்பங்கள் சூழ்ந்துளம்
எங்கணும் பாய்ந்தெனை மோதுமடா
அன்னைமொ ழித்தமிழ் அத்தனை ஆற்றலை
அன்புடன் என்னிடம் தந்ததடா
ஆயிரம் நன்றிகள் கூறிட நெஞ்சினில்
ஆவலும் மீறியே வந்ததடா 1

யாழிசை கூடிய ஏழிசைப் பாடல்கள்
எங்கும்நி றைந்தும லர்ந்திடுமே
யானுள மாளிகை வானில்மி தந்திட
யாண்டும்ப றந்துதி ரிந்துடுவேன்
தோழமை கூடிடத் தூய மயிற்குலம்
தோகைவி ரித்தெதிர் ஆடிடுமே
துய்ய மலர்க்குலம் வாயைவி ரித்திடும்
தும்பிகள் யாழெனப் பாடிடுமே 2

கற்பனை ஊறிடக் காவியம் ஒன்றனைக்
கண்டுநி கர்த்திடப் பாடிடுவேன்
காலிற்ச தங்கைகள் கொஞ்சிட மங்கையர்
கண்ணெதிர் நின்றவர் ஆடிடுவார்
பொற்புறு கிண்ணியில் பூமணத் தேறலைப்
பூவையர் பற்பலர் ஊற்றிடுவார்
பூங்கொடி போலிடை தாங்கிடு வார்மனம்
பொங்கிட வேவெறி ஏற்றிடுவார் 3

மூண்டிடும் அவ்வெறி மூளையி லேவந்து
மொய்ம்புறச் சுற்றிவளைத்திடுமே
முத்தமிழ்ப் பாடல்கள் மோதி மனத்தினில்
முந்துற வந்துவி ளைத்திடுமே
ஈண்டிய மாதரில் ஏந்தெழில் கொண்டவள்
என்னுடல் மெல்லென நீவிடுவாள்
இன்புறும் பூம்பொழில் தங்கிடும் மாங்குயில்
என்னவே பாவினில் கூவிடுவேன் 4

பாட்டைமு டித்துடன் ஏட்டினை மூடலும்
பாழுல கில்விழி பட்டதடா!
பாடிய யாழிசை ஆடிய மாமயில்
பாவையர் ஆடலும் கெட்டதடா!
வீட்டைவ ளைத்திடும் வேதனை சூழ்ந்தெனை
வெந்துளம் வாடிடச் சுட்டதடா!
வெட்டவெ ளிக்கடல் வீழ்ந்துகி டந்துயிர்
வெம்பிட வேவிழி சொட்டுதடா! 5

---

பாடற் குறிப்பு:– 8.1.1979 ஆம் நாள் பாடியது.

## 62. உலகம் சிரித்தது

(நூல்:–பாடுங் குயில்)

நேர்மையோடு வாழ்க வென்று
நீதி நூல்கள் பாடின
ஆர்வ மோடு நெஞ்சில் நாளும்
அந்த வாழ்வை நாடினேன்

ஏட்டுப் பூச்சி என்று பேசி
என்னை உலகம் சிரித்தது 1

வாயில் ஒன்றும் நெஞ்சில் ஒன்றும்
வைத்துப் பேசக் கூசினேன்
சேயின் வாழ்வு சாயும் போதும்
செம்மை ஒன்றே பேசினேன்

பித்தன் பித்தன் என்று கேலி
பேசி உலகம் சிரித்தது 2

நாட்டு வாழ்வை நச்சி நின்று
நாளும் நெஞ்சில் நாடினேன்
வீட்டு வாழ்வில் நாட்ட மின்றி
வீறு கொண்டு பாடினேன்

நாட்டுப் போக்கைச் சுட்டிக் காட்டி
நாளும் உலகம் சிரித்தது 3

வாடும் போது வாழ்வுக்காக
வால்பி டிக்க நாணினேன்
பீடு மானம் வேண்டி யின்னல்
பெற்ற பின்பும் பேணினேன்

எத்தர் வாழும் ஏற்றங் காட்டி
என்னை உலகம் சிரித்தது 4

அண்டை மாந்தர் என்னை யண்டி
ஆசை வார்த்தை பேசினர்
கொண்ட கொள்கை நின்று வாழக்
கோல வாழ்வை வீசினேன்

பிள்ளைத் தன்மை என்று பேசிப்
பேதை யுலகம் சிரித்தது 5

இட்ட கோடு வட்ட மாக
எல்லைக் குள்உ லாவினேன்
[1]தட்டு நேரில் முட்டும் போதும்
தாண்ட வில்லை கால்களே

ஒட்டி வாழக் கற்றி லேனென்
றுலகம் என்னைச் சிரித்தது 6

---

**பாடற் குறிப்பு:–** 23–6–1979 ஆம் நாள் பாடியது.

**அருஞ்சொற் பொருள்:–** 1. தட்டு–தட்டுப்பாடு.

## 63. என்னெதிர் நில்லேல்

**(நூல்:–நெஞ்சிற் பூத்தவை)**

முதுமையே நின்னை மோதி மிதித்து
முதுகிடச் செய்குவன் முகங்காட் டாமல்
எவ்வழி யாகினும் ஏகுதி! ஏகுதி!
இவ்வுழை வந்துநீ என்செய இயலும்?
என்தலை தாங்கிய எழில்முடி மேவிய

தன்னிறம் மாற்றுவை; தரையினில் வீழ்த்துவை;
பொன்முகப் பொலிவை மென்மெல அழித்துப்
பன்முகக் கோடுகள் பற்பல தீட்டுவை;
கூரிய விழியின் சீரிய பார்வை
மாறி வழிதடு மாறிடச் செய்குவை;
வீறுகொள் நரம்பின் விறைப்பினைத் தளர்த்தி
மாறுறச் செய்குவை; வேறென் செய்குவை?
கையுங் காலுங் கண்ணுங் காதுமென்
மெய்யும் பிறவும் மேவித் தவழ்ந்து
விளையாட் டயர்ந்திடர் விளைத்திட லன்றி
உளத்தில் படர்ந்துள இளமையின் முறுக்கைத்
தளர்த்திட நின்னால் தகுமோ? நின்னைப்
பிறக்கிடச் செய்குவன் பேதாய் செல்செல்!
உளத்திற் பொங்கும் உணர்ச்சிக் கெதிராய்க்
களத்தில் நிற்பையேல் கவிழ்குவை நீயே!

---

**பாடற் குறிப்பு:–** 1.1.1977 ஆம் நாள் பாடியது.

## 64. வாளென் செயும்?

**(நூல்:–நெஞ்சிற் பூத்தவை)**

ஆளென் செயும்விடும் அம்பென் செயும்என் அருகில்வரும்
தேளென் செயும்எறி வேலென் செயும்முனை தீட்டுமரி
வாளென் செயும்மனத் திண்மையும் அஞ்சா மனநிலையும்
தோளும் வலிவும் துணையென என்முனம் தோன்றிடினே!

---

**பாடற் குறிப்பு:–** 1998 ஆம் ஆண்டு பாடியது.

## 65. கருத்திற் கலந்த கழகம்

**(நூல்:–நெஞ்சிற் பூத்தவை)**

தாயே போற்றி தமிழே போற்றி
நீயே உயிரென நினைவேன் போற்றி,
ஈன்ற உன்னை இனிதிற் காக்க
மூன்று கழகம் முந்தையர் கண்டனர்;
வழிவழி வந்தோர் வாழ்வுனக் களிக்க
எழிலுறு கழகம் இற்றையர் கண்டனர்;
வளமுற நின்னலம் வளர்த்து வருதலாற்
கழக வுணர்வுகள் கருத்திற் கலந்தன;
வருத்துமென் வாழ்வு வளமுறற் பொருட்டோ
கருத்திற் கலந்தன கழக வுணர்வுகள்?
வயிற்றைக் கழுவும் வழியெனக் கருதிலேன்
எயிற்றைக் காட்டும் இழிகுணம் எனக்கிலை;
பழியுனக் குறுமேல் பாய்ந்ததைத் தடுக்கக்
கழகம் ஒன்றே களமெனக் கண்டேன்;
உன்னால் அன்றோ கழக வுணர்வுகள்
என்னுட் புகுந்தன இறுகப் பற்றின;
கழகப் பாவலன் யானுனைக் காப்பேன்
உளமுறும் உணர்வே வாழிய தமிழே!

---

**பாடற் குறிப்பு :–** 27.4.1980 ஆம் நாள் பாடியது.

## 66. போர்க்கோலம் மாறவில்லை!

**(நூல்:–ஞாயிறும் திங்களும்)**

{‘வேலைச் சுழற்றுங்கள்!’ என்ற இப்பாடலின் தலைப்பு ‘போர்க்கோலம் மாறவில்லை!’ என இங்கு மாற்றித் தரப்பெற்றுள்ளது}

நாட்டில் இயங்கிவரும் நாலுவகைக் கட்சிக்கும்
ஆட்டுந் தலைவருண் டாடிவருந் தொண்டருண்டு;
தன்மானக் கட்சிக்குந் தக்க தலைவருண்டு;
அன்பான தொண்டர் அளவில்லா வீரருண்டு;
தொண்டர் தலைவரெனச் சொல்லளவில் நின்றாலும்
அண்டும் ஒருகுடும்பம் ஆனதுதான் நம்கழகம்;
ஐயா எனவுரைத்தும் அண்ணா எனஅழைத்தும்
மெய்யான பற்றுளத்தால் மேம்பட்டு நின்றவர்நாம்;
அண்ணா எனஅழைப்போம் அன்புள்ள தம்பீஎன்
றண்ணன் நமையழைப்பான்; அவ்வண்ணம் நாமிருந்தோம்;
நூலொன்றால் கோத்தமைத்த நூறு வகைமணிகள்
போலொன்றி நல்லுறவு பூண்டு வளர்ந்தவர்நாம்;
ஒன்றாக்கி நின்ற உறவுநூல் எப்படியோ
நன்றாக்குந் தோழர்க்குள் நாலாறு கூறுபட்டுக்
கட்டவிழ்ந்து வெவ்வேறாய்க் காணும் மணிபோல
ஒட்டுறவே யின்றி உதிர்ந்துகிடக் கின்றோம்;
உறவு முறைகாண உள்ளவன்நான் வேறு
வரவு முறைகாண வந்து புகவில்லை;
ஆதலினால் நம்கழகம் அல்லற் படும்போது
வேதனை கொள்கின்றேன்; மீண்டும் உறவுமுறை
காணத் துடிக்கின்றேன்; காளையரே முன்போலப்
பேணிச் செயல்செய்யப் பேருள்ளங் கொள்ளீரோ?
நாட்டை நினையுங்கள் நாடாண்ட நம்மினத்தின்
பாட்டை நினையுங்கள் பைந்தமிழை எண்ணுங்கள்!
வீட்டின் தனிநலத்தைச் சற்றே விலக்கிவைத்து
நாட்டின் பொதுநலத்தை நாடுங்கள்! நாடிவிடின்
நானென்ற சொல்மறையும் நாமென்ற சொல்மலரும்;
ஏனென்றால் தொண்டுக் கிலக்கணம் ஈதேதான்;
அண்ணன் திருநாளில் அத்தலைவன் சொன்னவற்றை
எண்ணி நடந்திடவே இன்றும்மை வேண்டுகிறேன்;
நேற்றை வரலாற்றை நெஞ்சில் நிறுத்துங்கள்!
ஏற்றை நிகர்வலியீர் இன்று நடப்பதையும்
சிந்தித் ததிர்நிறுத்திச் சீர்தூக்கி நோக்குங்கள்!
வந்த இடரெல்லாம் வாயடங்கிப் போயொழியும்;
நாளை எதிர்காலம் நன்றாக வேண்டுமென்றே
காளையருக் கிந்தக் கருத்தை மொழிகின்றேன்;
என்னைத் தவறாக எண்ணி எடைபோட்டுப்
பின்னக் கணக்கைப் பிழையாகப் போடாதீர்!
கூடாரங் கூடார மாகக் குடிபுகுந்து
சூடாத பூக்கொய்து சூடிப் பழிசுமந்து
மானந் தனையிழந்து மற்றவர்தம் தாள்பிடித்துக்
கூனல் மனத்தேனாய்க் கொள்கையை விற்றதிலை;
நேற்றொன்று கூறி நிலைநாட்டி இன்றதனை
மாற்றி யுரைக்கும் மதிசிறிதும் பெற்றதிலை;
அன்றுநான் சொன்னதையே இன்றும் மொழிகின்றேன்
என்றுமதே சொல்வேன் இனிமேலா மாறிடுவேன்?
ஏற்றுங் கொடிதான் இருவண்ணம் என்னெஞ்சில்
ஏற்றும் எழில்வண்ணம் என்றும் ஒருவண்ணம்;
கொச்சை மொழிபேசிக் கூட்டம் மிகச்சேர்த்துப்
பச்சைப் புளுகால் பலபேரை ஏமாற்றிக்
கச்சேந்தும் மாதர் கலவிக் கதைகூறிப்
பச்சோந்தி போலப் பலவண்ணங் காட்டேன்நான்;
மெச்சும் மொழிபேசி மேன்மைக் கருத்துரைத்
தச்சம் சிறிதுமின்றி அல்லல் எதுவரினும்
துச்சம் எனமதித்துத் தொண்டுசெயத் தன்மானக்
கச்சைகட்டி நிற்கும் கடப்பா டுடையவன்நான்;
ஈரோட்டு வேந்தர் எடுத்த இனவெழுச்சிப்
போராட்டப் பாசறைக்குட் போய்ப்புகுந்த நாள்முதலே
நீர்க்கோல வாழ்வில் நெடிதே துயருறினும்
போர்க்கோலம் மாறவிலை புத்திதடு மாறவில்லை;
கோட்டுக்குக் கோடு குதிக்கும் கவியாகி
நாட்டைக் கெடுக்கும் நயவஞ்சங் கொண்டதிலை;

கேட்டுக்குள் கேடு கிளர்ந்தெழுந்து தாக்கிடினும்
நாட்டை யுருவாக்க நாளும் நினைப்பவன்நான்;
பாடென்ன பட்டாலும் பண்பாட்டை எந்நாளும்
பாடுபட்டுக் காக்கப் பழகி நடப்பவன்நான்;
சங்கமெனுந் தோட்டத்தில் சாற்றுச் சுவைமிகுந்து
தொங்குங் கவிப்பழங்கள் துய்த்துப் பழக்கமுண்டு
யாப்பமைந்த பாடல் இயற்றித் தருவதற்குக்
கோப்பைப் பழங்கள் குடித்துப் பழகவில்லை;
சாதிச் சழக்ககலச் சாத்திரத்துச் சூழ்ச்சிகளை
மோதித் தகர்த்தெறிய முன்னேற்றம் பெற்றிலங்கக்
கட்டாயம் வேண்டும் கலப்புமணம் என்றதுண்டு
தட்டாமல் அவ்வாறே சாதி தனைத்தொலைத்தேன்;
சாதிக் கலப்பைத்தான் சாற்றி நடந்ததன்றி
ஓதும் மொழிக்கலப்பை ஓர்நாளும் சொன்னதிலை;
செந்தமிழில் வந்தமொழி சேர்ந்தால் இனிக்குமெனச்
சந்தைமொழி பேசும் சழக்கனென ஆகவில்லை;
பாட்டுத் தொழிலுடையேன் பண்பாட்டுச் செந்தமிழை
நாட்டுந் தொழிலுடையேன் நாட்டை யுருவாக்க
வேட்டுத் தொழில்புரிவேன் வேட்டுவைத்து நானறியேன்
வீட்டை நினைந்தறியேன் வெந்துயரம் உற்றாலும்
ஒன்றே வழியென்பேன் ஒன்றே மொழியென்பேன்
நன்றே நினைந்து நடக்கின்றேன்; ஆதலினால்
ஓங்கும் விளம்பரங்கள், உற்ற துணைபுரிந்து
தாங்குந் திருக்கைகள், தாங்காத் துயரகற்றிக்
காக்குந் திருவுளங்கள் கண்டதிலை இன்றுவரை;
ஏக்கம் அதனாலே எள்ளளவும் கொண்டதிலை;
நாட்டின் நலம்நினைந்து நல்ல கனவுலகில்
பாட்டுப் பறவையெனப் பாடி வருபவனை
வீட்டுத் துயர்வந்தா வீழ்த்திவிடும்? வீழ்ந்துவிடின்
பேட்டுத் தனமாகும் பிள்ளைச் செயலாகும்;
ஆதலினால் நம்கழகம் அல்லற் படும்போது
வேதனை கொள்கின்றேன் வேதனையை நீக்கிடுவீர்!
காலைக் கதிரவனைக் கார்முகில் சூழ்ந்துளது
வேலைத் திறமையுடன் வீசுங்கள்! முன்போலப்
பொங்கும் இனவுணர்ச்சி பொங்கட்டும்! அவ்வுணர்ச்சி
எங்கும் பரவி எழுந்துபுயல் ஆகட்டும்!
வீசுபுயல் வேகத்தால் மேகங்கள் ஓடட்டும்!
தேசுபெறும் செங்கதிரோன் செய்யஒளி வீசட்டும்!
வீறுநடை போடுங்கள் வெற்றிமலர் சூடுங்கள்!
கூறுகிறேன் என்கை குவித்து

---

**பாடற் குறிப்பு:–** சென்னை கலைவாணர் அரங்கத்தில் தமிழ்நாடு அரசு நடத்திய அண்ணா விழாக் கவியரங்கில் பாடியது– 15.9.1977.

## 67. அண்ணா பேசினார்

**(நூல்:–ஞாயிறும் திங்களும்)**

ஆண்டுகள் ஐம்பதின் அப்பாலே ஓரைந்து
தாண்டியவன் நானெனினும் தள்ளாமை கண்டதிலை;
என்றும் இளைஞனென ஏறுநிகர் காளைஎன
ஒன்றும் உணர்வுடைய உள்ளம் உடையவன்நான்;
என்றாலும் வெண்மை எனது தலைமுடியில்
நன்றே படர நலமிக்க என்னுளத்தைச்
சொல்ல முடியாத் துயரொன்று கவ்வியது
நல்ல இளமை நமைவிட்டு நீங்கிடுமோ?
வேண்டா முதுமைவரும் வேளை நெருங்கிடுமோ?
தீண்டாமல் போகாதோ? தேய்ந்திடுமோ நம்இளமை?
என்றொருநாள் என்மனையில் ஏங்கித் தனித்திருந்
தொன்றும் இமைமூடி ஓய்ந்து தளர்ந்திருந்தேன்;
ஆழ்கடலின் மேற்புறத்தே ஆர்த்துக் கரைகடக்க
நீள்கரையில் மோதி நிமிர்ந்தெழுந்த பேரலைகள்

ஓரக் கரைகடக்க ஒண்ணாமல் மீளுங்கால்
நேருமொலி என்செவியில் நீங்கா தொலிசெய்ய,
வீசிவருங் காற்று விளையாடி இன்பத்தைப்
பூசி எனதுடலில் பூரிப்புச் செய்திருக்கச்
சென்னைக் கடற்கரையின் சீரெழிலை நோக்கியவா
றென்னை மறந்தங் கினிதே நடந்துவந்தேன்;
வாழும்நாள் எல்லாம்நம் வாழ்வுக்கே நாவசைத்தோன்
நாளும் கடலலையாம் நாவதனால் தாலாட்டப்
பேசாமல் சந்தனப் பேழைஎனுந் தொட்டிலிலே
ஆசான் நெடுந்துயிலில் ஆழுங் கரையோரம்
வந்தேன் உடல்சிலிர்த்தேன் வாடிவரும் என்னுளத்தில்
செந்தேன் துளித்ததுபோற் செம்மாந்து நின்றேன்நான்;
அண்ணாஎன் அண்ணாஎன் றார்த்தேன்; அருள்பொழியும்
கண்ணான்என் கண்முன்னே காட்சி தரநின்றான்;
வாமன்னா என்று வணங்கித் தலைநிமிர்ந்தேன்;
‘பாமன்னா வாழ்க’ எனப் பையச் சிரித்திருந்தான்;
மெல்லச் சிரித்தாய்நீ மேலோய்நின் வாய்ச்சிரிப்புச்
சொல்லும் பொருள்தெரியச் சொல்லிடுக என்றேன்நான்
‘உன்னைத்தான் தம்பி உயிர்போல் நினைந்திருந்தேன்
என்னைத்தான் நம்பி இருந்தாய்நீ உண்மையிது;
மண்ணுலகில் வாழுங்கால் என்னை மதித்துவந்தாய்
கண்மணிபோல் உன்னைக் கருதி மகிழ்ந்தேன்நான்;
என்னோ டிணைந்துநீ ஏற்ற துயரெல்லாம்
எந்நாளும் எண்ணி இறுமாப் படைகின்றேன்;
பூண்ட அறப்போர்கள் புக்க சமர்க்களங்கள்
மீண்டும் நினைத்தாலே மேனியெலாம் புல்லரிக்கும்;
தம்பி யுடையான் படைக்கஞ்சான் என்றிருந்தேன்
நம்பி யதுபோல நாளெல்லாம் வென்றுவந்தாய்!
வென்றுவந்த நீயின்று வேறு நினைவுகளைத்
துன்றிவர விட்டுத் துவள்கின்றாய்! நாடோறும்
உன்னை நினைந்தே உளம்நொந்தாய்! உன்னிளமை
தன்னை நினைந்தும் தணியாத் துயர்கொண்டாய்!
ஆளடிமை செய்யாமல் ஆண்ட இனத்தவன் நீ
வாளுடைய தோளுயர்த்தி வட்டமிட்டுப் போர்முழுதும்
வெற்றிக் கொடிநாட்டி வீரப் புகழுயர்த்திச்
சுற்றித் திரிந்தவன்நீ சோர்ந்து கிடப்பதுவோ?
நாட்டை நினைந்தாயா? நாடாண்ட உன்னினத்தின்
பாட்டை நினைந்தாயா? பாடகலக் கேடகலத்
தன்னாட்சி பெற்றுயரச் சற்றும் நினைந்தாயா?
உன்னாட்சி பெற்றிங் குயர நினைந்தாயா?
சாதி தொலைத்தாயா? சாத்திரக் குப்பைகளை
மோதித் தகர்த்தாயா? மோத நினைந்தாயா?
ஓதித் திரிவதில்தான் உள்ளம் மகிழ்கின்றாய்;
சாதித்துக் காட்டிடச் சற்றும் நினைந்ததுண்டா?
மூத்த தமிழ்மொழியை மொய்க்கும் பகைநீக்கிக்
காத்துப் புரக்கக் கருத்தில் நினைந்தாயா?
உன்னை நினைந்தே உளம் நொந்தாய்! உன்னிளமை
தன்னை நினைந்தும் தணியாத் துயரடைந்தாய்!
இந்த நிலைகண்டே ஏங்கி வருந்திமனம்
நொந்து சிரிக்கின்றேன்’ என்று நுவன்றான்;
மறப்போம்பின் மன்னிப்போம் என்றஒரு மாற்றம்
தரத்தகுந்த அண்ணா தவறுளதேல் மன்னிப்பாய்!
பொன்னை மறப்பேன் பொருளை மறந்திருப்பேன்
என்னை மறப்பேன் இனிய மனைமறப்பேன்
அன்னைத் தமிழ்மொழியை அண்ணா மறந்தறியேன்;
என்னை யுருவாக்கும் என்னுயிரை, என்னுணர்வை,
நான்வணங்குந் தெய்வத்தை, நாடி நரம்பெல்லாம்
தான்புகுந்த செங்குருதி தன்னை மறப்பேனோ?
தென்னாட்டு மண்ணில்தான் சேயாக நான்பிறந்தேன்
அந்நாட்டு மண்ணள்ளி ஆசையுடன் தின்று
தவழ்ந்தேன் நடந்தேன் தரையிற் புரண்டேன்
தவந்தான் புரிந்தேன் தமிழ்நாட்டில் நான்பிறக்க;
என்னுயிரின் மூச்செல்லாம் தென்பொதியக் காற்றாகும்
பொன்னிமகள் ஊட்டியபால் என்னுடலின் செங்குருதி;

அன்னைத் திருநாட்டை அண்ணா மறந்தறியேன்
என்னைத் தவறாக எண்ணி இகழற்க!
என்னினத்தை அவ்வினத்தின் ஏற்றத்தை எண்ணாத
கன்மனத்தன் நானல்லேன் நாளுங் கருதுகின்றேன்;
தார்கொண்ட தானைத் தலைவாநம் தாயகத்தைப்
பார்மன்னா பாரிங்கே! பாவி சிலர்கூடிச்
செந்தமிழைத் தாழ்த்துகிறார் சீர்கெட் டலைகின்றார்
எந்தவிதம் அண்ணா அதனைப் பொறுத்திருப்பேன்?
போருக்கு நானெழுந்தேன் போர்க்களத்தில் என்னெதிரில்
நேருக்கு நேராக நிற்பவனோ என்னினத்தான்;
என்செய்வேன் அண்ணா இனத்தான் பகையானால்?
தன்மொழிக்குத் தானே தடையாக நிற்கின்றான்;
நாடாண்ட நம்மினமும் நற்றமிழும் தாயகமும்
பீடாண்டு கொள்ளப் பெரும்பாடு பட்டிங்கு
வாழுங் கழகத்தை வாட்டி ஒழிப்பதற்குத்
தாளம் இடுபவரைத் தந்நலமே கொண்டவரை
நம்பி ஒருமனிதன் நாடகங்கள் ஆடுகிறான்;
வெம்பித் தளர்ந்துமிகும் வேதனையால் நொந்தேன்;
உடனிருந்தே கொல்லும் உறுபிணிபோ லாகிக்
கடலிலங்கை வீடணனாய்க் கைவரிசை காட்டி,
அரியணையின் மீதேறும் ஆசை மனத்துள்
மருவும் குடிலனென மாறிமனம் போய்விட்டான்;
என்றுநான் சொன்னேன் இடைமறித்துத் ‘தம்பீநீ
இன்றுரைத்த உன்மொழியை என்செவிகள் ஏலா
எதுவரினும் தாங்கும் இதயத்தைப் பெற்றால்
கதுவவரும் துன்பம் கடிதின் விலகு’ மென்றான்;
என்பால் வருகின்ற எத்துயருந் தாங்கிடுவேன்
அன்பால் உயரண்ணா அன்னைத் தமிழ்மொழிக்குத்
தீங்கு வருமென்றால் தேறுவ தெப்படியோ?
ஏங்குகிறேன் அண்ணாநீ என்னவழி சொல்கின்றாய்?
கண்ணாகக் காக்கும் கழகத்தை மாய்க்கவரின்
புண்ணாக என்மனந்தான் போகாதோ? நீபுகல்வாய்;
என்று மனம்நொந் திருவிழிகள் நீர்சொரிய
நின்றேன்; அறிஞர் நிறைமொழி வாய்மலர்ந்தார்;
‘செந்தமிழ்க்கா தீங்கு? சிறிதேனும் வாராது;
முந்தை வரலாற்றை முன்னிறுத்திச் சிந்தனைசெய்!
எத்தனைக் கற்கள் தடைபோல் இருந்தாலும்
அத்தனையும் மோதி அகற்றும் மொழியாம்
தனக்கு வரும்பகையைத் தானே தகர்க்கும்
தனித்திறமை கொண்டிலங்கும் தாய்மொழிக்கா தீங்கு?
பழகுதமிழ்ப் பண்பாட்டைப் பாரில்நிலை நாட்டும்
கழகம் அழியுமென வீணே கலங்குகிறாய்!
வையத்தைச் சூழ்கடலை வாயால் குடிப்பனெனப்
பொய்வைத்த நெஞ்சன் புளுகுவதை நம்புவதோ?
விண்ணகத்துச் சூரியனை வீழ்த்துவேன் என்றொருவன்
மண்ணகத்துச் சொன்னால் மதியாரோ பித்தனென?
தன்மானத் தாலமுத்து தம்பி நடராசன்
முன்னாவி ஈய முளைத்த கழகமடா!
வேலா யுதமென்ற வீரமகன் தந்தஉயிர்ப்
பாலால் வளர்ந்த பசுமைக் கழகமடா!
தூத்துக் குடியான் துணிவுடைய நெஞ்சத்தான்
ஏத்தவரும் கே.வி.கே. சாமி எனுந்தம்பி
தந்த உரத்தால் தழைக்கும் கழகமடா!
எந்த விதமழியும் ஏன்கலங்கு கின்றாய்?
மகமதியத் தோழர் மசீது முகைதீன்
முகமலரத் தந்தஉயிர் மூச்சுக் கழகமடா!
தப்பேதும் செய்யாத் தளிரனைய மாணவர்
துப்பாக்கிக் குண்டால் துடிதுடித்து வீழுங்கால்
சிந்துசெந் நீரால் செழித்த கழகமடா!
அந்தக் கழகத்தை ஆரழிக்க வல்லார்கள்?
ஆலங் குடிதந்த அன்பன் சிதம்பரம்
கோலம் மிகவுடையான் கொள்கைசேர் பொற்செழியன்
எத்தனையோ தம்பிமார் ஈந்த உயிராலே
இத்தரையில் நாம்வளர்த்த ஈடில் கழகமடா!

செந்தமிழைக் காப்பதற்குச் சீறி எழுந்தவர்கள்
வெந்தழலை மூட்டி விறகாக்கித் தம்முடலை
வேகவிட்ட வீரப்பன் வீரன் சிவலிங்கம்
போகவிட்ட நல்லுயிரால் போற்றும் கழகமடா!
நாம்வணங்கும் சின்னமென ஆன திருச்சாமி
தேமொழியைக் காக்கவரும் சென்னை அரங்கனவன்
மூண்டெழுந்த செந்தழலில் மூழ்கி மடிந்தார்கள்
ஆண்டவர்தம் ஈகத்தால் ஆல்போல் வளர்ந்ததடா!
அந்தக் கழகத்தை ஆரழிக்க வல்லார்கள்?
சிந்தைத் துயர்நீங்கிச் செம்மாந்து நிற்பாய்!
இரங்கும் இயல்புடைய என்றன் மனத்தை
இரவல் எனப்பெற்றான் என்தம்பி ஆரூரன்;
நம்மை உருவாக்க நாளெல்லாம் பாடுபட்ட
செம்மை திறம்பாத ஈரோட்டுச் சிங்கத்தின்
நெஞ்சத் துணிவும் நிரம்பஅவன் பெற்றுள்ளான்
அஞ்சற் கிடமில்லை அன்னான் துணையாய்நில்!
என்புருவம் ஆனாலும் ஏறு நிகர்மனத்தன்
அன்பழகன் எல்லாம் அவற்குத் துணையுண்டு;
நாட்டை வளமாக்க நல்லசில திட்டங்கள்
போட்டிருந்தேன் என்மனத்தில் பொல்லாப் பிணிவந்து
வாட்டியதால் தம்பியரை வாடவிட்டுச் சென்றுவிட்டேன்
போட்டிருந்த திட்டம் புரிந்தகரு ணாநிதியும்
ஒன்றுங் குறையா துருவாக்கிக் காட்டுகிறான்
நன்று தரும்முடிவை நன்காய்ந்து செய்கின்றான்
பண்டைத் தமிழ்நாட்டைப் பார்த்து மகிழுமுளம்
கொண்டே முயல்கிறான் கொள்கை குறிக்கொண்டான்
உன்னை உடன்பிறப்பென் றுள்ளத்திற் கொண்டுள்ளான்
என்னை அவனுருவில் என்றும்நீ கண்டிடுவாய்'
என்றமொழி எல்லாம் இனிதுரைத் தென்முன்னே
நின்றவனைக் காணவிலை; நெஞ்சந் துடிதுடித்(து)—
அண்ணா எனஅலற அருகில் துயில்மனையாள்
உண்ணா தயர்ந்தீர் உறக்கத்தும் இந்நினைவா?
சொன்னால் கேட்பதிலை; சொக்கி உறங்கிவிட்டீர்!
என்றாள் விழிமலர்ந்தேன்; என்அண்ணன் சொன்னவற்றை
பாட்டில் எழுதிவந்து பாடி முடித்துவிட்டேன்
கேட்டோரே அண்ணன் கிளந்தவெலாம் நெஞ்சிருத்தி
நாட்டை வளமாக்க நாடித் துணைநிற்பீர்!
பாட்டை முடித்தே பணிந்து.

---

**பாடற் குறிப்பு:—** சென்னை அண்ணா விழாக் கவியரங்கில் பாடியது—6.9.1974.

## 68. தொடர்ந்து செல்வேன்

**(நூல்:—ஞாயிறும் திங்களும்)**

தனக்கென்று வழியமைத்துக் கொள்ள வில்லை
　　தமிழினத்தின் வாழ்வுக்கே வழிய மைத்தான்;
எனக்கென்றவ் வழியொன்றே தேர்ந்து கொண்டேன்;
　　இன்றுவரை பிறழாமல் ஒழுகு கின்றேன்;
குணக்குன்றை ஒருநாளும் பழித்த தில்லை;
　　குறுக்குவழி சென்றதிலை; குழப்பம் செய்யப்
பிணக்கொன்றும் விளைக்கவிலை; அதனால் துன்பம்
　　பெற்றதுண்டு; வாழ்க்கைவளம் பெற்ற தில்லை. 1

வளமற்ற நிலைகண்டோர் பரிந்து பேசி
　　வாழவழி பலவுண்டு வருக என்றார்;
உளமற்ற நிலைஎனக்கு வந்த தில்லை;
　　உறுதியுளேன் ஒருபொழுதும் வழுவ மாட்டேன்;
தளர்வுற்ற எனக்கென்ன கிடைக்கு மென்று

தரங்கெட்டுப் பிறர்வழியில் சென்ற தில்லை;
வளமற்று வாழ்ந்தாலும் அண்ணன் சொன்ன
வழிபெற்று வாழ்கின்றேன் தொடர்ந்து செல்வேன். 2

---

**பாடற் குறிப்பு:–** 17.9.1978 ஆம் நாள் பாடியது.

## 69. எனக்கும் ஓர் அதியன்!

**(நூல்:–கவியரங்கில் முடியரசன்)**

**('சான்றோர்' என்ற பொருண்மையில் இடம் பெற்றுள்ள இப்பாடலின் 16 எண்சீர் விருத்தங்களில், 6 எண்சீர் விருத்தங்கள் மட்டும் பொருண்மை கருதி இங்கும் இடம் பெற்றுள்ளன)**

நேரிசை ஆசிரியப்பா

குறள்நெறி வாழும் கொள்கைக் கோவே!
அருள்நெறி ஒழுகும் அண்ணால்! எங்கள்
சுப்பிர மணியத் தோன்றால்! வணக்கம்
மெய்ப்பொருள் உணர்ந்த மேலோய் வணக்கம்
[1]தந்தாய்! [2]என்னுயிர் தந்தாய்! [3]என்கோ?
[4]அன்னாய்! [5]என்னுயிர் அன்னாய்! என்கோ!
இன்னருள் புரியும் [6]என்கோ! என்கோ?
எவ்வணம் நின்னை ஏத்திப் புகழ்வேன்!
செய்வணம் அறியேன் சிறியேன் நின்னடி
நெஞ்சத் திருத்தி நினைகுவன்
அஞ்சலென் றருளுக தஞ்சம் நீயே 1

எண்சீர் விருத்தம்

........... ............ ............. .............
அவ்வைக்கு நெடுங்காலம் உயிர்நி லைக்க
அதியனெனும் ஒருவள்ளல் இருந்தான் முன்னாள்;
உய்வித்துச் சிறியேனை நீண்ட காலம்
உயிர்வாழ அருளினைநீ; எனக்கும் அந்த
அவ்வைக்கும் வள்ளல்களை ஈந்து காத்த
அத்தமிழைச் செந்தமிழை வணங்கு கின்றேன் 1

குருதியுமிழ் கொடுநோய்க்கே ஆளாய் நின்றேன்
குறுநகையும் பெருநகையும் இழந்து நின்றேன்
செறுபகையும் எனைக்காணின் இரங்கி நிற்கும்
செயலற்றேன் நடைதளர்ந்தேன் உடல்மெ லிந்தேன்
மறுபடியும் உயிர்வாழ்வேன் என்ற எண்ணம்
மாய்ந்துவிட மாயாத கவலை கொண்டேன்;
''உறுதியுனைக் காக்கின்றேன்'' என்று வந்தென்
உயிர்காத்தாய்! உன்னருளால் வாழ்கின் றேன்நான் 2

உயிர்காத்த உத்தமனே! என்பாற் கண்ட
உயர்வென்ன? தமிழன்றி வேறொன் றில்லை;
செயிரில்லாச் செந்தமிழைப் பாடும் வாயில்
செங்குருதி சிந்துவதா எனநி னைந்தோ?
உயிர்பிழைத்தால் இவனும்போய்த் தமிழைக் காப்பான்
உயர்கவிதை பலதருவான் எனுங்க ருத்தோ?
அயர்வின்றி அருகிருந்து காத்த தாயே!
ஆலயமாம் என்னுளத்தில் அமருந் தேவே! 3

தாய்தந்தை நல்லன்பைக் கண்டேன் அல்லேன்
தகுபொழுதில் உதவுவதற் குறவு மில்லேன்
நோய்வந்து மனத்துயரால் மாழ்குங் காலை
நுவலரிய தனித்துணையாய் [8]இராமச் சந்த்ரச்
சேய்கொண்டு மனநோவைத் தீர்த்து வைத்துச்
சிறியேனை நின்குடும்பத் தொருவன் ஆக்கிச்
சேய்போல ஆட்கொண்டாய்! அன்பு செய்தாய்!
செம்மனத்தோய்! கைம்மாறு யாது செய்வேன்? 4

எந்நாளும் உன்பெயரைச் சொல்லிச் சொல்லி
ஏத்துவதே தொழிலானேன் என்றன் சேய்க்குப்
பொன்னான நின்பெயரைச் சூட்டி நெஞ்சில்
பூசித்து மகிழ்கின்றேன் போற்று கின்றேன்
நின்பேரன் என்மகனாம் கார ணத்தால்
நீஎனக்குத் தந்தைமுறை ஆகி விட்டாய்
என்னபிழை நான்செயினும் பொறுத்தல் வேண்டும்
என்தந்தாய்! பொன்தந்தாய்! புகழும் தந்தாய்! 5

என்னுயிரைக் காத்தமையால் தன்க ழுத்தில்
எழிற்றாலி மின்னுவதைக் கண்டு நெஞ்சால்
என்மனையாள் வாழ்த்துகின்றாள்; என்றன் சேய்கள்
எம்தந்தை தந்தாயென் றேத்து கின்றார்;
நன்மழலைச் செல்வர்களைக், காதல் வாழ்வின்
நற்றுணையை நான்மீண்டுங் காணச் செய்த
உன்னுதவி நாடோறும் ஏத்து கின்றேன்;
உயிரனையாய்! திருவடியை வாழ்த்துகின்றேன். 6

---

**பாடற் குறிப்பு:–** 19.10.1958 அன்று, புதுக்கோட்டைத் திருக்குறள் கழகத் தலைவர் அண்ணல் பு.அ.சுப்பிரமணியனார் மணிவிழாவில் மனம் நெகிழப் பாடிய பாடல்.

**அருஞ்சொற் பொருள்:–**
1. தந்தாய் – தந்தையே.
2. என் உயிர் தந்தாய் – என் உயிரை மீட்டுத் தந்தவனே.
3. என்கோ – என்பேனா. 4. அன்னாய் – தாயே.
5. என் உயிர் அன்னாய் – என் உயிர் போன்றவனே.
6. என் கோ என்கோ – என் தலைவன் என்பேனா.
7. இராமச்சந்திரச் சேய் – புதுக்கோட்டை மருத்துவப் பேரறிஞர் டாக்டர் வி.கே. இராமச்சந்திரனார். இவரும் அண்ணலால் உருவாக்கப் பட்டவராதலின் சேய் எனப்பட்டார்.

## 70. கவியரசென்றார்!
**(நூல்:–நெஞ்சிற் பூத்தவை)**

**('இயற்கை' என்ற பொருண்மையில் 'பறம்புமலை' என்னும் தலைப்புள்ள இப்பாடலின் 8 எண்சீர் விருத்தங்களில், 1 எண்சீர் விருத்தம் மட்டும் பொருண்மை கருதி இங்கும் இடம் பெற்றுள்ளது)**

பாவலர்க்கும் மற்றவர்க்கும் நெஞ்சு வந்து
பாரிவள்ளல் தனக்குரிய முந்நூ றூரும்
நாவலர்கள் புகழ்ந்துரைக்கக் கொடுத்து யர்ந்தான்
நல்லவன்பேர் வாழியவே! தமிழ ணங்கின்
சேவடிக்கே தொண்டுசெயும் அடிகள் என்னைச்
சீராட்டிப் பொன்னாடை சூட்டி வாழ்த்திப்
பாவுலகக் **கவியரசென்** றொருபேர் தந்தார்
பரிவுளத்தை வணங்குகின்றேன் வாழ்க நன்றே.

---

**பாடற் குறிப்பு:–** பறம்புமலைப் பாரிவிழாவில் தவத்திரு குன்றக்குடி அடிகளார், '**கவியரசு**' என்ற விருது வழங்கப் பாடியது – 30.4.66.

## 71. பிரியா நண்பன்
**(நூல்:–முடியரசன் கவிதைகள்)**

எப்பொழுதும் அவன்முகத்திற் சிரிப்பி ருக்கும்
எதனாலோ சிலநாள்கள் மலர்ச்சி இல்லை,
எய்ப்பின்றிப் பறவைஎனத் திரிவான் எங்கும்;
இன்றவனோ வெளிவருதல் காணோம்; இல்லாள்
தப்பெதுவும் புரியவிலை யேனும் சீறித்
தணலெனவே பேசுகின்றான்; குழந்தை ஒன்றே

இப்புவியில் அவன்தெய்வம் அதனி டத்தும்
இடியொலியைக் காட்டுகிறான் ஏனோ? ஏனோ? 1

அருள்சிந்தும் விழியிணையில் ஒளியே இல்லை;
ஆரிடத்தும் கலகலவென் றுரத்துப் பேசி
வருபவன்றான் ஊமையெனக் காணு கின்றான்;
வருபுதிய படங்காண முதலில் நிற்போன்
வெறுவெளியில் தனிநிற்கும் தென்னங் கீற்று
விளைக்குமெழில் அவன்காட்சி என்று கொண்டான்;
பெருமழைபோற் கவிபொழிவான் எழுது கோலும்
பேசாமல் இருப்பதுவும் ஏனோ? ஏனோ? 2

இனிமைமிகு தமிழ்மொழியைத் தாழ்த்திப் பேசின்
எதிர்த்தழிக்கும் அவன்கவிதை; காதற் பாட்டும்
கனிந்திருக்கும்; பகையஞ்சா வீரங் காட்டும்;
கலப்பைஎனும் படையுடையார் உழைப்பில் லார்க்குக்
குனிந்துதரும் நிலையொழிக்கும்; உணர்ச்சி ஏற்றிக்
கொடுஞ்செயலை மடமையினைத் தூள்தூள் ஆக்கும்
பனிமழையிற் குயில்போல வாய டைத்துப்
பாடாமல் இருக்கின்றான் ஏனோ? ஏனோ? 3

சிந்தனையைக் கூர்விழியிற் றேக்கிக் கையிற்
செவிபொருந்தக் கன்னத்தைச் சேர்த்து நெஞ்சம்
நொந்திருக்கும் எண்ணமெலாம் கவிதை யாக்கி
நோவொழிந்தான்; கவிதையினைச் சட்டைப் பையில்
தந்துவைத்தான்; அவன்மனையாள் நோக்கி அந்தத்
தாள்விரித்து மலர்விழியின் இதழ்வி ரித்து
வெந்திருக்கும் மனம்விரித்த பாடல் தன்னை
விளம்புதற்குச் செவ்வாயின் இதழ்வி ரித்தாள் 4

“மனையாளைப் பிரிந்திருப்பேன் உன்னை ஓர்நாள்
மறந்தறியேன் அன்றிலென நாமி ருந்தோம்
எனைமறந்து பிரிந்ததனையே! காண்போர் எல்லாம்
இரட்டையரென் றெடுத்துரைக்க இணைந்தி ருந்தோம்
தினையளவும் தீதறியேன் உன்றன் வாழ்வே
தினமுநினைந் திருக்கின்றேன் என்பால் நீதான்
மனமுறிய என்னகுறை கண்டாய் தோழா!
மாய்கின்றேன் மாய்கின்றேன் அறிவாய் நண்பா! 5

நண்பருனக் கெத்தனையோ பேர்கள் உள்ளார்;
நல்லவராய் உண்மையராய் நின்றன் சீரும்
எண்ணுவராய் இருந்திடுவோர் எத்து ணைப்பேர்?
என்னுளத்தை இத்தனைநாள் உணர்ந்தா யல்லை!
கண்கலங்க முகஞ்சுருங்க நீயி ருப்பின்
கண்டிருக்க நெஞ்சுபொறேன் அப்பொ றாமை
எண்ணுவதல் லால்வேறு கெடுபொ றாமைக்
கிடங்கொடுத்து நானறியேன் அறிவாய் நண்பா! 6

என்காதல் மனைவியிடம் சொலம றைப்பேன்;
எச்செயலும் நினைமறையேன்; எனது நெஞ்சம்
அன்பால்நெக் குருகுமடா! என்னு ளத்தை
அறுத்தெடுத்துப் பார்த்தாலுன் னுருவ மொன்றே
முன்பாகத் தோன்றுமடா! கவலைக் கெல்லாம்
முறிமருந்தாம் என்மகவு பின்னர்த் தோன்றும்
என்போடும் குருதியிடை உயர்ந்த நட்பே
இயங்குவதை உணராயோ இனிய நண்பா!” 7

**பாடற் குறிப்பு:—** இக்கவிதை பற்றி **முடியரசனார்** எழுதிய தன் வரலாற்று நூலான 'பாட்டுப் பறவையின் வாழ்க்கை பயணம்' எனும் நூலில் குறிப்பிட்டுள்ளது பின் வருமாறு :—

"எனக்குத் திருமணம் ஆகியவுடன் காரைக்குடி மீ.சு. உயர்நிலைப் பள்ளியில் தமிழாசிரியராகப் பணியேற்றேன் அங்கே தமிழண்ணலும் (முனைவர் இராம. பெரியகருப்பன்) ஆசிரியராக இருந்தார். கல்லூரியில் பயிலும் நாளிலேயே நாங்கள் தொடர்பு கொண்டிருந்தமையால் எங்கள் நட்பு எளிதிற் பற்றிப் படரத் தொடங்கியது. நட்பின் முதிர்ச்சி அவரை என் தம்பியாக்கிற்று.

கல்லூரியில் நடந்த நாடகம் ஒன்றில் கதைத் தலைவன் கண்ணனாக நான் நடித்தேன். அவர் இளங்கண்ணனாக நடித்தார். அன்றே நாங்கள் அண்ணன் தம்பிதான்.

அவர் இன்று பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறைத் தலைவராக விளங்குகிறார். எனினும் அவரை ஒருமையில்தான் இன்றும் அழைத்து வருகிறேன். அவ்வளவு எளிமையாகப் பழகி வருகிறார். . . .

என் பாடல்களைத் தொகுத்து, நூலாக்கி முதன்முதல் அச்சு வடிவிற் கொணர்ந்தவர் அவர்தான். . . .

அவர்க்கும் எனக்கும் இடையிடையே பிணக்கு வருவதுண்டு. ஆனால் கணவன் மனைவியரிடையே ஏற்படும் 'ஊடல்' போல் விரைவில் மறைந்து விடும்.

ஒரு கால் என்னைத் தவறாகப் புரிந்து கொண்டு என்னுடன் பிணங்கிச் சில நாள் பேசாதிருந்தார். அப்பொழுது நாங்கள் பயின்ற மேலைச்சிவபுரி சன்மார்க்க சபையின் பொன்விழா மலருக்கு என்னிடம் பாடல் வேண்டினர். தமிழண்ணலிடம் கட்டுரை வேண்டினர். எங்கள் பிணக்கை மனத்திற்கொண்டு '**பிரிந்த நண்பன்**' என்னுந் தலைப்பில் உருக்கமாகப் பாடல்கள் எழுதித் தந்தேன்.

மலர் அச்சாகி எனக்கு வந்தது. படித்துப் பார்த்தேன். என் பாடல் தலைப்பு '**பிரியா நண்பன்**' என அச்சாகியிருந்தது. இது யார் செய்த வேலை? என்று சினந்து கொண்டேன். '**தமிழண்ணல்** தான் திருத்தினார்' என்று விடை வந்தது. மலரைப் புரட்டினேன். தமிழண்ணல் கட்டுரையைப் படித்தேன். என் பாடற்றிரனைப் பாராட்டிக் கட்டுரையெழுதியிருந்தார்.

நாங்கள் பிணங்கியிருந்தோம் பேசாதிருந்தோம். ஆனால் எங்கள் நட்பு, பிணங்காது பேசிக்கொண்டுதான் இருந்தது. எழுத்தோவியத்தில், மீண்டும் தொடர்ந்து வளர்ந்து கொண்டே இன்று வரை நீடிக்கிறது."

## 72. என் குறிக்கோள்

**(நூல்:—புதியதொரு விதி செய்வோம்)**

தமிழன் எனும்பெயர் சாற்றுங் காலைக்
குமையா உரிமை கொள்ளுவன் யானே;
இந்தியன் எனும்சொல் இயம்புங் காலை
உந்திய நட்பை உணருவன் யானே;
உலகன் எனும்பெயர் ஓதுங் காலைக்
கலகமில் லன்பைக் காணுவன் யானே;
விரிமனம் எனச்சொலி உரிமை யிழந்து
பிறபிற நினையிற் பேதையன் யானே.

**பாடற் குறிப்பு:—** 1.2.1988 ஆம் நாள் பாடியது.

## 73. யார் தமிழன்?

**('பூங்கொடி' காப்பியத்திலிருந்து)**

.......... ...........
'உள்ளமும் உயிரும் உணர்வும் தமிழென
உள்ளுவோன் எவனோ அவனே தமிழன்!
தமிழ்தமிழ் என்றுரை சாற்றுவோர் எல்லாம்
தமிழ்காப் போரென நினைப்பது தவறு;'
......... ............

## 74. கற்பனை மன்னவன்

**(நூல்:—பாடுங் குயில்)**

கவியெனப் போற்றிடும் பேர்படைத்தான் — நெஞ்சில்
கற்பனை யாலொரு பார்படைத்தான்
புவியதை ஆண்டிடக் கோலெடுத்தான் — அங்கே
புதுமைகள் பற்பல தான்கொடுத்தான் 1

அங்கேவறுமைப்பகையொடுபோர்தொடுத்தான் — மக்கள்
வளமுடன் வாழ்ந்திடச் சீர்கொடுத்தான்

சிறுமைக் குறைகளை வேரெடுத்தான் – ஆண்மைச்
சிங்கமென் றோங்கிடும் பேரெடுத்தான் 2

நலமிகும் ஆட்சியொன் றேவிரித்தான் – யாவும்
நாட்டவர்க் கேபொது வென்றுரைத்தான்
குலமகன் மன்னவன் போற்சிரித்தான் – என்றும்
கோட்டைகள் கட்டிட வேகுறித்தான் 3

கற்பனை நாட்டையே மேல்நினைந்தான் – மண்ணில்
கட்டிய வீட்டினைத் தான்மறந்தான்
முற்பட மாந்தரை யேநினைந்தான் – கொண்ட
மொய்குழல் மாதினைத் தான்மறந்தான் 4

பாட்டுல குக்கவன் சோறளித்தான் – பாரில்
பைந்தமிழ்க் கோவெனப் பேரெடுத்தான்
வாட்டம ளித்திடும் சோர்வினைத்தான் – சொந்த
வாழ்வினில் கண்டுகண் ணீர்வடித்தான் 5

சோறின்றிப் பற்பல நாள்கழித்தான் – சூழும்
துன்பங்கள் போக்கிடத் தான்விழித்தான்
மாறொன்று கண்டிலன் வாழ்வினிற்றான் – அந்த
மன்னவன் கற்பனை வாழ்வெடுத்தான் 6

சிந்தனை யாலவன் வான்பறப்பான் – தன்னைச்
சேர்ந்திடும் துன்பமெ லாம்மறப்பான்
நொந்துழல் வேளையி லேசிரிப்பான் – அந்த
நூலவன் வேதனை யார் துடைப்பார்? 7

---

**பாடற் குறிப்பு:–** 21–9–1975 ஆம் நாள் பாடியது.

## 75. அவன் கண்ட பலன்

**(நூல்:–பாடுங் குயில்)**

சாற்றுக் கரும்பது தோற்றுப் பிறக்கிடச்
சாற்றுகி றான் கவிதை – வீட்டில்
சோற்றுப் பருக்கையை ஆக்கிப் படைத்திடச்
சுற்றுகி றாள் மனைவி 1

நூற்றுக் கொடுத்திடும் பாட்டுப் புனைந்துபல்
நூற்றினும் மேல் தருவான் – அந்தோ
‘நேற்றுத் துவைத்தது மாற்றுத் துணியிலை’
நேரிழை யாள் பகர்வாள் 2

கண்டு வியந்திடக் கட்டிமுடித்தனன்
கற்பனையால் மனையே – அந்தப்
பெண்டு மயங்கிடப் பிள்ளை சுருண்டிடப்
பெற்றனன் சோ தனையே 3

உண்டு களித்திட ஊருக் களித்தனன்
ஒப்பறு பா வமுதே – அந்தத்
தொண்டு மனத்தவன் கண்டு சுவைத்தது
தொல்லையின் வாழ் வதுவே 4

பாடிக் கொடுத்தவன் சூடக் கொடுத்தனன்
பைந்தமிழ்ப் பா மலரே – உள்ளம்
வாடிக் கிடந்தனன் வாழ்விற் கலங்கினன்
வண்டமிழ்ப் பா வலனே 5

கூடிக் கிடந்தவர் ஓடிப் பிரிந்தனர்
கொண்டனன் ஓர் கவலை – என்றும்
ஆடித் திரிந்தவன் வாடிப் பொழிந்தனன்
அம்ம !கண் ணீர்த் திவலை 6

மட்டித் தனங்களைச் சுட்டுப் பொசுக்கிடும்
மாவலி கொண் டவன்தான் – தன்னைக்
கட்டிப் பிடித்துடல் தொட்டுச் சுவைத்திடும்
காலனை வென் றவன்தான் 7

கட்டிப் பிடித்தொரு விண்ணை வளைத்ததில்
ஏறிந டந் தவன்தான் – கண்ணீர்
கொட்டிச் சொரிந்திட மண்ணிற் கிடந்திடர்
கூடிக்கி டந் தனனே! 8

---

**பாடற் குறிப்பு:–** 5.10.1975 ஆம் நாள் பாடியது.

## 76. வாழுங் கவிஞன்

**(நூல்:–பாடுங் குயில்)**

கனவுகள் காண்பான் கவிஞன் – ஆனால்
கண்விழி உறங்குவ தில்லை
நனவுகள் ஆகும் புவியில் – அவனை
நன்மைகள் தொடர்வது மில்லை 1

பஞ்சணை போலொரு நினைவு – அங்கே
பகலிர வெல்லாங் கனவு
நெஞ்சினில் ஊறிடுந் தினவு – அதுதான்
நீள்புகழ்க் காவியப் புனைவு 2

மதியொடு முகிலொடு மதிப்பான் – அந்த
மயக்கினில் நாள்பல கிடப்பான்
புதியன புனைந்திடத் துடிப்பான் – அந்தப்
போதையில் ஆயிரம் படைப்பான் 3

மழலைகள் பேசிடும் மதலை – காணின்
மகிழ்ந்திடும் அவனொரு மதலை
பழகிய யாழொடு குழலைக் – கேட்டால்
பாவலன் ஏழிசை நிழலே 4

நிறமலர் மணமுடன் குலுங்கும் – கவிஞன்
நெஞ்சொரு வண்டென மயங்கும்
பறவைக ளாயிரம் பறக்கும் – கவிஞன்
பறந்திடச் சிறகினை விரிக்கும் 5

இயற்கையின் அழகுகள் சிரிக்கும் – அவற்றுள்
இணைந்தவன் நரம்புகள் துடிக்கும்
மயக்குறும் உணர்வுகள் நடிக்கும் – கவிஞன்
வாயித ழோகவி உதிர்க்கும் 6

எளியவர் விழிபுனல் சிந்தும் – காணின்
இனந்தெரி யாதுக லங்கும்
நெளிகடல் போலுளம் பொங்கும் – துயரை
நீக்கிடப் பாடல்வ ழங்கும் 7

கொடுமைகள் கண்டுளம் வாடும் – உணர்வு
கூடிட வாய்கவி பாடும்
படுமிடர் நீங்கிட ஆடும் – ஆனால்
பாவலன் துயர்தான் நீடும் 8

தோயுறும் துயரிடை வாழும் – அந்தத்
தூயவன் சுழலுவன் நாளும்
ஆயினும் கற்பனை சூழும் – அவன்கவி
ஆயிரம் ஆண்டுகள் வாழும் 9

---

**பாடற் குறிப்பு:–** 16–12–1976 ஆம் நாள் பாடியது

## 77. யார் கவிஞன்?

**(நூல்:–கவியரங்கில் முடியரசன்)**

காசுக்குப் பாடுபவன் கவிஞன் அல்லன்;
கைம்மாறு விழைந்துபுகழ் பெறுதல் வேண்டி
மாசற்ற கொள்கைக்கு மாறாய் நெஞ்சை
மறைத்துவிட்டுப் பாடுபவன் கவிஞன் அல்லன்;
தேசத்தைத் தன்னினத்தைத் தாழ்த்தி விட்டுத்
தேட்டையிடப் பாடுபவன் கவிஞன் அல்லன்;
மீசைக்கும் கூழுக்கும் ஆசைப் பட்டு
மேல்விழுந்து பாடுபவன் கவிஞன் அல்லன். 1

ஆட்சிக்கும் அஞ்சாமல், யாவ ரேனும்
ஆள்களனத் துஞ்சாமல், தனது நாட்டின்
மீட்சிக்குப் பாடுபவன் கவிஞன் ஆவன்;
மேலோங்கு கொடுமைகளைக் காணும்போது
காட்சிக்குப் புலியாகிக் கொடுமை மாளக்
கவிதைகளைப் பாய்ச்சுபவன் கவிஞன் ஆவன்;
தாழ்ச்சிசொலும் அடிமையலன் மக்கட் கெல்லாம்
தலைவனெனப் பாடுபவன் கவிஞன், வீரன். 2

## 78. பிறவிக் கவிஞன்

**(நூல்:–தமிழ் முழக்கம்)**

**('சான்றோர்' என்ற பொருண்மையில் இடம் பெற்றுள்ள இப்பாடலின் 7 எண்சீர் விருத்தங்களில், 3 எண்சீர் விருத்தங்கள் மட்டும் பொருண்மை கருதி இங்கும் இடம் பெற்றுள்ளன)**

வஞ்சத்தை ஒருசிறிதும் அறிய மாட்டான்
மற்றவர்தம் உயர்வுக்குப் புழுங்க மாட்டான்;
நெஞ்சத்தைத் தமிழ்மொழிக்கே தந்த தாலே
நினைக்கின்ற தன்கருத்தை மறைக்க மாட்டான்;
அஞ்சித்தன் னுளக்கருத்தைக் குறைக்க மாட்டான்;
அதுவருமே இதுவருமே எனந டுங்கிக்
கெஞ்சித்தன் பெருமிதத்தைச் சிதைக்க மாட்டான்
கிளர்ந்துவரும் அரியேற்றின் தோற்றங் கொண்டான். 1

எவர்வரினும் நம்புகின்ற தூய வுள்ளம்
இழிபொய்ம்மை சூதறியாக் குழந்தை யுள்ளம்;
தவறெதுவும் தமிழ்மொழிக்குச் செய்வார் இங்கே
தலையெடுத்தால் சீறியெழும் புலிப்போத் துள்ளம்;
சுவர்வைத்துத் தடுத்துநமைப் பிரித்து வைக்கும்
சூழ்ச்சிகளைச் சுட்டெரிக்கும் புரட்சி யுள்ளம்;
கவிதையெனும் அமுதமழை பொழியு முள்ளம்;
கருவடிவம் உறும்போதே கவிஞன் ஆனோன். 2

அதுவேண்டும் இதுவேண்டும் எனவி ரும்பி
அடிவருடிப் பிழைக்கின்ற கயமை வேண்டான்;
எதுவேண்டும் நாடுயர என்று நோக்கி
எழுச்சிமிகு கவிதைகளை ஈந்து நிற்பான்;
மதுவேண்டும் வண்டெனவே மாறி மாறி
மாற்றார்க்கு வால்பிடித்துத் திரிய மாட்டான்;
சதிவேண்டான் மற்றவரைத் தாழ்த்த எண்ணான்
சங்கத்துப் புலவனென வாழ்ந்த மேலோன். 3

---

**பாடற் குறிப்பு:–** பறம்புமலை பாரிவிழாக் கவியரங்கில் பாடியது – 18.4.1970.

## 79. கண்ணீரை யார் துடைப்பர்?

**(நூல்:—புதியதொரு விதி செய்வோம்)**

**('சான்றோர்' என்ற பொருண்மையில் இடம் பெற்றுள்ள இப்பாடல் பாவேந்தர் மறைவிற்கான இரங்கற் பாவெனினும், முடியரசனாரின் குணங்களையும் கொள்கைகளையும் வெளிப்படுத்துவதால், பொருண்மை கருதி இங்கும் இடம் பெற்றுள்ளது)**

பாவெல்லாம் படையாக்கிப் பகைமை யோட்டும்
　பாவேந்தே எங்குலத்தின் தலைவா இன்று
நாவெல்லாம் புலர்ந்திருக்க விழிநீர் சிந்த
　நாடெல்லாங் கவிவாணர் திகைத்து நிற்கக்
கோவென்று வாய்ப்புலம்பக் கையற் றேங்கக்
　கொற்றவனே கற்றவனே மறைந்தா விட்டாய்!
சாவொன்றும் புதுவதன்று தெரியும்; ஆனால்
　தமிழன்னை கண்ணீரை யார்து டைப்பார்? 1

கவிஞரெனப் பேர்படைத்த எங்கட் கெல்லாம்
　காவலன்யார்? செந்தமிழ்க்குத் தீங்கு செய்யப்
புவியிலெவர் நினைத்திடினுங் கனன்றெ ழுந்து
　புலிப்போத்தாய்த் தனைமறந்து தமிழ்நி னைந்து
கவிபொழிய வல்லான்யார்? இனிமே லிங்குக்
　கவிதைக்குப் பரம்பரையைப் படைப்போன் யார்யார்?
இவையெல்லாம் நினையுங்கா லுணர்வு விஞ்சி
　இறப்பென்னும் ஒருபாவி தொலைக என்போம். 2

முழுநிலவே செங்கதிரே காலங் கண்டும்
　மூவாத தமிழ்ப் பொழிலில் ஆடிவந்த
அழகொழுகும் இளமயிலே உலக மாந்தர்
　ஆவியெலாங் குளிர்விக்குந் தென்றற் காற்றே
பழகுதமிழ்க் கனிமூன்றுஞ் சுவைத்துப் பார்த்துப்
　பாடிவந்த பூங்குயிலே மறைந்தாய் நாங்கள்
அழுதழுதும் வாராயோ? மீண்டு மிங்கே
　ஆடாயோ பாடாயோ? அந்தோ அந்தோ! 3

கண்மூடி வழக்கமெனுங் காட்டில் தோன்றுங்
　கவைக்குதவாச் சாதிமதம் அடிவே ரற்றும்
எண்கோடிப் பழங்கொள்கைச் சருகு சுள்ளி
　இழிவுதரும் அடிமையெனும் வெம்பல் வீழ்ந்தும்
மண்மூடிப் போகவெனச் சாடி வந்த
　மாவலிமைப் பெரும்புயலே இடிமு ழக்கப்
பண்பாடி அணிதிகழும் பாவால் மின்னிப்
　பழுத்தசுவை பொழிமுகிலே யாண்டுச் சென்றாய்? 4

எவ்விடத்தும் எப்பொழுதும் எவரி டத்தும்
　எதுவரினும் உண்மையினை எடுத்து ரைக்கும்
செவ்வியநற் பெருமிதமும் அஞ்சா நெஞ்சும்
　சேராரை நடுக்குறுத்துஞ் சீர்த்த நோக்கும்
கவ்வுமெழிற் றிண்டோளும் விரிந்த மார்பும்
　களிறனைய பெருநடையுங் கொண்ட சிங்கம்
இவ்வுலகில் எங்கள்மனக் குகையில் வாழும்
　எழுந்தெழுந்து முழங்கிவரும் எந்த நாளும் 5

நறுந்தேனும் பசுப்பாலுங் கலந்து வைத்து
　நற்கவியாம் முக்கனியை நறுக்கி யிட்ட
விருந்தாகும் நீதந்த கவிதை; மேலும்
　விசையொடிந்த உடலகத்தில் வீரஞ் சேர்க்கும்;
பொருந்தாரைச் செவிசாய்த்துப் பொருந்த வைக்கும்;
　புலவோய்நின் நறுங்கவிதைக் கனிகள் சாவா
மருந்தாகும்; செந்தமிழுக் குயிர்ப்பு நல்கும்;
　வையத்துள் என்றென்றும் வாழும் ஐயா 6

......... ............ ............. ............
தெம்பூட்டித் தமிழ்காக்க வழிகள் காட்டு,
　திறமூட்டு கைநீட்டித் தொழுது நின்றோம்.
......... ............. ............. ............